# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999 ஐப்பசி திங்கள் 1 ம் நாள் (18—10—67) புதன் றஜப் 13 | புத்தகம் 22
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. டெலிபோன் எண்-3411 த. பெ. 1183 | இதழ் 11


# திருமலைத் துறைமுகம் தேசியமயமில்லை மாற்றுத் திட்டம் அமுலுக்கு வரும்

திருகோணமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட மாட்டாதென்று நம்பகமாக அறியப்படுகிறது. தேசியமயத் திட்டத்துக்குப் பதில் "நாகநாதன் திட்டம்" அமுலுக்கு வருமென்று தெரிகிறது.

திருமலைத் துறைமுகத்தைத் தேசிய மயமாக்கும் திட்டத்துக்குப் பதில் மற்றொரு மாற்றுத் திட்டத்தைத் தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இது ஒரு கூட்டுறவுத் திட்டம். (விபரம் 6-ம் பக்கம் காண்க) இதுவும் ஒரு சோஷலிஸத் திட்டமே. இத்திட்டம் பிரதமரைப் பெரிதும் கவர்ந்துள்ளதென்றும், திட்டத்தை அவர் பரிசிலனை செய்வதாகவும் அறியப்படுகிறது.

பிரதமரும் ஒரு திட்டம் வைத்துள்ளாராம். அவரது சொந்தத் திட்டத்திலிருந்தும் சில அம்சங்களை எடுத்து "நாகநாதன் திட்டத்துடன்" சேர்த்து ஒரு புதிய திட்டத்தை உருவாக்கித் திருமலையில் அமுல் நடத்துவார்களென்று அறியப்படுகிறது.

இத்திட்டம் திருமலையில் வெற்றிகரமாக அமுலாக்கிய பின்னர் காலி, கொழும்புத் துறைமுகங்களுக்கும் இத்திட்டம் அமுலுக்குக் கொண்டுவருவதற்கு பிரதமர் உத்தேசித்திருப்பதாக அறியப்படுகிறது.

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்படாவிட்டால், திருமலை, கொழும்பு, காலி ஆகிய மூன்று துறைமுகங்களிலும் பொது வேலை நிறுத்தம் செய்யப்போவதாக துறைமுக இடதுசாரித் தொழிற்சங்கங்கள் பயமுறுத்தியுள்ளன. இந்தப் பயமுறுத்தலுக்குப் பிரதமர் பணிந்து கொடுக்க மாட்டாரென்றும், வேலை நிறுத்தப் பயமுறுத்தல்களால் தேசிய அரசாங்கத்தை அசைக்க முடியாதென்றும் தேசியமய அமைச்சு வட்டாரம் சுட்டிக்காட்டியது.

இவ்வாறு திருமலைத் துறைமுகத்தைத் தேசியமயமாக்கக் கூடாதென்று தமிழரசுக் கட்சி செய்த கிளர்ச்சி வெற்றி பெற்றுள்ளது.



## பிரதமருக்கு உடுவில் எம்.பி. தந்தி

'வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பிற இடங்களிலிருந்து அரிசி கொண்டு வருவதற்கு தடைவிதிக்க அரசாங்கம் ஆலோசித்துவருகிறது என்ற வதந்தியால், வடபகுதியில் அரிசி நெல்முதலியவற்றின் விலை பாரதூரமான முறையில் அதிகரித்து விட்டது. இதனால் மக்கள் மிகுந்த கஷ்டமடைகிறார்கள். உடன் நடவடிக்கையெடுத்து நிலைமையை தெளிவுபடுத்தி மக்களின் கஷ்டங்களை நீக்குங்கள்'

இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அவசரத் தந்தி மூலம் பிரதம மந்திரியையும், உணவு அமைச்சரையும் கோரியுள்ளார்.



## மக்களே தீர்ப்பு கூறுக

மார்ட்டின் கமிஷன் அறிக்கையை உள்ளூராட்சி அமைச்சர் இவ்வாரம் மூதவையிற் சமர்ப்பித்தார். அறிக்கை மக்கள் மன்றத்துக்கு வந்துவிட்டது. இனி மக்களே அதன்மீது தீர்ப்பு கூற வேண்டும். மக்கள் தீர்ப்பு மகேசன் தீர்ப்பல்லவா? கமிஷன் சிபார்சுகள் தகுதியற்றவை, யாழ் மக்களின் முன்னேற்றத்தைத் தடுப்பவை என்று தமிழ் பேசும் மக்கள் கருதினால், அதனை நிராகரிக்கட்டும். யாழ் நகர மக்களினதும், நகரத்தினதும் முன்னேற்றத்திற்கும் அவசியமானவை என்று கருதினால், அச் சிபார்சுகளை உடனே அமுல் நடத்தும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கட்டும். பிரச்சினையை மக்களின் கையில் வைத்ததற்காக அமைச்சருக்கு எமது நன்றி.

திரு. பொன்னம்பலம் அவர்களே, இதோ ஒரு பொன்னான வாய்ப்பு — உடனே மக்களிடம் செல்லுங்கள்! கமிஷன் சிபார்சுகளை ஒவ்வொன்றாக எடுத்துவிளக்கி அவை நகரத்தை நாசமாக்குபவை என்று மக்கள் மத்தியில் நிரூபித்துக் காட்டுங்கள் பார்ப்போம்.

கமிஷனர் திரு. மார்ட்டின் பிற்காலத்தில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் பொதுத்தேர்தலில் போட்டியிட்டால் முன்பு அவர் செய்த சிபார்சு ஒவ்வொன்றும் தகுதியற்றது என்று பிரதமரிடம் கூறியதைப் போல மக்களிடம் சென்று கூறும்படி திரு. பொன்னம்பலத்துக்குச் சவால் விடுக்கின்றோம்.

திரு. மார்ட்டின் முன்பு நீதிபதியாக பணியாற்றியவர். ஒரு நீதிபதி பிற்காலத்தில் ஒரு கட்சியின் வேட்பாளரானால், முன்பு அவர் நீதிமன்றத்தில் வழங்கிய தீர்ப்புகளும் தகுதியற்றவையாகிவிடும் என்று திரு. பொன்னம்பலம் கூறப் போகிறாரா? அவர் கமிஷனராகப் பணி புரியும் போது எக்கட்சியிலும் உறுப்பினராக இருக்கவில்லையே! இந்த உண்மையை மறைக்க முடியாது.

கமிஷனர் யாராக இருந்தாலென்ன? அவரது சிபார்சுகள் யாழ். மக்களுக்கு நன்மை பயக்குமா? தீமை விளைவிக்குமா என்பதையே மக்கள் ஆராய்வர்.

இறுதியில் மக்கள் கைக்கே அறிக்கை வந்து விட்டது. எனவே யாழ்ப்பாண மக்களும், பொது ஸ்தாபனங்களும் அறிக்கையை அமுல் நடத்தும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இனி தாமதம் வேண்டாம்!


மெய்கண்டான்

## தீபாவளி வாழ்த்து இதழ்கள்

கண்ணைக்கவரும் வண்ண ஓவியங்கள்

36 விதமானவை

ஒவ்வொன்றிலும் வெவ்வேறு விதமான சந்தத்திலே தீந்தமிழ் வாக்கியங்கள் கொண்டவை

இந்திய வித்தோ படங்கள் போன்ற உயிரோட்டமுள்ள வண்ணப்படங்கள் இலங்கையில் இல்லையே என்று இதுகாறும் குறைப்பட்டவர்கள் மெய்கண்டான் தீபாவளி வாழ்த்து மடல்களைக் கண்டு மெய் சிலிர்க்கிறார்கள். வியப்பும் ஆச்சரியமும் அடைகிறார்கள். டசின் கணக்கில் வாங்கிச் செல்கிறார்கள்.

குரோம் ஆர்ட் அட்டையிலே, போஸ்ட் கார்ட்டின் அளவிலே, வானவில் வர்ணம் கொண்டு அழகுற வடிக்கப்பட்டவை, அதனால் 'பளபள' வென்று கண்ணைப் பறிக்கும் கவர்ச்சி கொண்டவை இந்த வாழ்த்து இதழ்கள்.

ஐந்துசத முத்திரை ஒட்டியே அனுப்பி விடலாம். அன்பில் நிறைந்தவர்களை அக மகிழச் செய்யலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஒன்றின் | விலை | சதம் | -25 |
| ஒரு டசின் | ,, | ரூபா | 2-40 |
| 100க்கு | ,, | ரூபா | 17-50 |

ஆடர் அனுப்பும்போது முழுத் தொகையும் முன்பணமாக அனுப்புவோருக்கு முத்திரைச் செலவும் பார்சல் செலவும் இலவசம்

இன்றே வாங்குங்கள் மெய்கண்டான் தீபாவளி வாழ்த்து இதழ்கள்

## மெய்கண்டான் பிரஸ் லிமிட்.

161, செட்டியார் தெரு, — கொழும்பு-11





"குழப்பப்பட்ட குட்டையில் மீன்பிடிக்க முயற்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பத்திரிகை விற்பனையில் மோசடி!

இந்தியாவிலிருந்து இங்கு இறக்குமதி செய்யப்படும் தமிழ் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விலையிலும் பார்க்க ஒரு மடங்கு அதிக விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிகிறது. இதனுல் இந்திய சஞ்சிகைகள் வாங்கும் வாசகர்கள் குறைந்து வருவதாக அறியப்படுகிறது. இந்தியப் பத்திரிகைகளை இங்கு இறக்குமதிசெய்யும் விற்பனையாளர்கள் இப்படி கொள்ளை லாபமடிப்பதைக் கைவிடும் வரை இந்தியப் பத்திரிகைகள் வாங்குவதை நிறுத்தி வைக்க வாசகர்கள் முன்வர வேண்டும்' என்று ஒரு வாசகர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகள் குறிப்பிட்ட விலையை விட ஏறத்தாழ ஒரு மடங்கு விலைக்கு ஏஜண்டுகளால் விற்கப்பட்டு வருகிறது. உதாரணமாக 50 சதம் விலை குறிக்கப்பட்ட சஞ்சிகை 80 சதம் வரையில் விற்கப்படுகிறது. உண்மையில் 50 சதம் குறிக்கப்பட்டுள்ள ஒரு இந்தியச் சஞ்சிகை இங்கு 35, 40 சதத்திற்கே விற்கப்பட வேண்டும். இந்திய நாணய மதிப்பை விட, இலங்கை நாணயத்தின் மதிப்பு பெறுமதி வாய்ந்துள்ளதே. இதற்குக் காரணம்.

இந்தியச் சஞ்சிகைகள் இப்படி ஆனை விலை, குதிரை விலை விற்பது இலங்கை வாசகர்களிடையே மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் வாங்குவோர் தொகையையும் குறைத்துள்ளது. பல ஆண்டுகளாகத் தொடர்ந்து இந்திய சஞ்சிகைகளை வாங்கி வந்த பலர், இப்போது அவற்றை வாங்குவதை அடியோடு நிறுத்திவிட்டார்கள் என்றும் தெரிகிறது'

இதுபற்றி ஒரு இந்தியப் பத்திரிகை இறக்குமதியாளரிடம் வினவியபோது, இலங்கையிலுள்ள நாணய மதிப்புப் படியே பணம் செலுத்தும்படி இந்தியப் பத்திரிகை முதலாளிகள் கோருவதாகவும், அதனுல் குறிக்கப்பட்டுள்ள விலையிலும் அதிகமாகவே தாம் விற்பனை செய்ய வேண்டியுள்ளதென்றும் கூறினுர்.

இந்த மோசடிக்கு இன்னுமொரு காரணம் இறக்குமதி பத்திரிகைகளின் கோட்டா குறைக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இந்தியச் சஞ்சிகைகளில் நடைபெறும் இந்த மோசடியை நிறுத்தாதவரை இந்தியப் பத்திரிகைகளை வாங்குவதில்லையென்று உறுதியெடுக்குமாறு வாசகர்களை தூண்டவும் சிலர் முயற்சியெடுத்து வருகின்றனர்.●

# சீர்திருத்தவாதியின் 450வது ஆண்டு விழா

## கி. ஜெர்மனியில் தீவிர ஏற்பாடு

கிறித்துவ மதத்தில் சீர்திருத்தம் ஏற்பட்டு இந்த அக்டோபர் மாதத்துடன் 450 ஆண்டுகள் ஆகின்றன. இந்த நானூற்றைம்பதாவது சீர்திருத்த ஆண்டுவிழாவினை, ஜெர்மனியில் உள்ள புரொடஸ்டண்ட் தேவாலயங்கள் யாவும் அக்டோபர் 31ந் தேதி அன்று கொண்டாட இருக்கின்றன.

இந்தச் சீர்திருத்தத்துக்கு முக்கிய காரணமாக இருந்தவரான மார்ட்டின் லூதருடன் பெரிதும் தொடர்பு கொண்ட விட்டன் பர்க், ஐஸெனுச் என்னும் இரண்டு நகரங்களும் கிழக்கு ஜெர்மனியில் உள்ளன. அத்துடன், இந்தப் பிரதேசத்தில் மட்டுமே ஒரு கோடியே முப்பது லட்சம் புரொடஸ்டண்ட் கிறித்துவர்கள் வசிக்கின்றனர். ஆகவே, கத்தோலிக்கக் கிறித்துவர்கள் பெருமளவு வசிக்கும் மற்ற ஜெர்மானியப் பகுதிகளைக் காட்டிலும் இந்தப் பகுதியில் இந்த விழா மிகப் பெரிய அளவில் கொண்டாடப்படும்.

### சீர்திருத்தவாதி

கிறித்துவ தேவாலயங்கள் மட்டுமல்லாமல், கிழக்கு ஜெர்மனி அரசாங்கமும் இந்தவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. மார்ட்டின் லூதர் கிறித்துவர்களுக்கும், அதே சமயத்தில் மார்க்ஸிய வாதிகளுக்கும்கூட "தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவர்" என்று கிழக்கு பெர்லின் அரசாங்க அதிகாரிகள் ஒரு புதிய முனைப்பு கொடுத்து அறிவித்திருக்கின்றனர்.

சீர்திருத்தவாதியான மார்ட்டின் லூதர் 'தொழிலாளர்கள், விவசாயிகள், ஆகியோரின் ஆதித்தலைவர்' என்ற புதுக் கருத்தை ஏற்படுத்தும் ரீதியில் லீப்ஸிக் சர்வகலாசாலை போதகர் ஒருவர் எழுதிவரும் 'மார்க்ஸிய லூதர் வரலாறு' என்ற நூலின் வழியில் இத்தகைய கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கு ஜெர்மனியிலுள்ள விட்டன்பர்க் என்னும் நகரில் தான் லூதர் படித்தார். அவர் போதித்ததும் அந்த நகரில் தான். அவருடைய பெயருடன் சம்பந்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இன்றும் நாம் அங்கே காணலாம்.

### வெண்கலக் கதவு இன்றும் உண்டு

கி. பி. 1517ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ந் தேதி அன்று அவர் தம்முடைய சித்தாந்தங்களைப் பொறித்த தேவாலயமும், அதன் மர நுழைவாயிலும் இங்கேதான் இருக்கின்றன.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் இந்த வாயிலுக்கு வெண்கலக் கதவு பொருத்தப்பட்டது.

இந்த தேவாலயத்திலுள்ள மதப் பிரசங்க மேடைக்குக் கீழே லூதரின் சமாதி இருக்கிறது.

மார்ட்டின் லூதர் 1483ஆம் ஆண்டில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்.

(14-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் பகுதிகளிலே...

❋ தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி, யூனியன் கல்லூரி, மாணவர்களின் வசதிக்காக, புன்னாலைக் கட்டுவனில் இருந்து குப்பிளான், குரும்பசிட்டி, கட்டுவன், தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியூடாக கீரிமலைக்கு செல்லும் புதிய பஸ்சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

❋ கொழும்புத்துறை குழாய் நீர் விநியோகத் திட்டம் நவம்பரில் ஆரம்பித்து வைக்கப்படும். இவ்விஷயத்தில் யாழ். மாநகர சபை விசேட ஆணையாளர்கள் துரித நடவடிக்கையெடுத்து வருகின்றனர்.

❋ மன்னர் மாவட்டத்திலிருக்கும் குளங்களைத்திருத்தவும உழவு இயந்திரங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களை தருவிக்கவும், மன்னர் மாவட்ட விவசாயப் பகுதிகளுக்கு போக்கு வரவு வசதி செய்து தரவும், உணவு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

❋ பொலிகண்டி சைவ வித்தியாசாலை கடந்த ஒருவருடமாக தலைமை ஆசிரியர் இன்றி இயங்கி வருவதால் அங்கு பயிலும்மாணவ, மாணவியரின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

❋ வல்லையில் ஒரு லட்ச ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் கூட்டுறவு ஆஸ்பத்திரி கட்டிடவேலைகள் பூர்த்தியடையும் தறுவாயிலுள்ளன.

❋ பட்டிருப்புத் தொகுதியில் வைக்கோல் கொள்வனவு நிலையமொன்றை நிறுவுமாறு கிழக்கிலங்கை தாளாலைக் கூட்டுறவை பழுகாமம் கி. ச. தலைவர் திரு. கே இராசரத்தினம் கோரியுள்ளார்.

❋ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் காங்கேசன்துறைப் பட்டினசபைக்கு ரூபா 20,000 அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது.

❋ புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையிலுள்ள காலி இடங்களுக்கு திருமலை வாசிகளையே நியமிக்க வேண்டுமென்று திருமலை எம். பியும், தமிழரசுத் தந்தையும் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளனர்.

❋ வாழைச்சேனையில் விரைவில் மக்கள் வங்கி கிளை நிறுவ நடவடிக்கையெடுக்கப் வருகிறது.

❋ காரைநகர் பகுதிக்கு குழாய் நீர்த்திட்டம் அமைக்க நடவடிக்கை யெடுக்கும் படி காரைநகர் ஊராட்சி மன்றம் உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரியுள்ளது.

❋ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏக்கும் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், இளவாலைக் கோஷ்டி வெற்றிபெற்றது.

❋ தையிட்டி கணேசவித்தியாலயத்தில் ஒரு வருடமாக ஆங்கிலம், சுதேசகலை ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர் நியமிக்கப்படாததால், மாணவ மாணவியர் கஷ்டப்படுகின்றனர்.

❋ திருவடிநிலை, பொன்னாலை ஆகிய இடங்களில் உள்ள முடிக்குரிய காணிகளை குடியிருப்பு நிலமற்ற சிறுபான்மைத் தமிழர்களுக்கு பெற்றுக் கொடுக்க வட்டுக்கோட்டை எம். பி. நடவடிக்கையெடுத்து வருகிறார்.

❋ வவுனிக்குளத் திட்டத்தின் கீழ் அமைந்துள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கும் வைத்திய அதிகாரிகள், ஊழியர்களின் வசிப்பிடங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

❋ அண்மையில் மட்டக்களப்புப் பகுதியில் பெய்த கடுமழையினுல், ஆரையம்பதியில் வீழ்ந்த 27 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் முயற்சியில் மட்டு நகர் எம்.பி. ஈடுபட்டுள்ளார்,

❋ ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே நடைமுறையிலிருந்து வந்த பஸ் சேவையை மீண்டும் ஏற்படுத்துமாறு சரவணை பஸ் பிரயாணிகள் சங்கம், இ. போ. ச. அதிகாரிகளை கேட்டுள்ளது.

❋ பொன்னாலைவரதராசப் பெருமாள் கோயிலுக்கு ஒரு புதிய தேர் செய்வதற்காக திருப்பணிச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளது.

❋ காரைநகர் தோப்புக்காடு கடற்றொழிலாளர்களுக்கு உடனடியாக குடி தண்ணீர் விநியோகத்துக்கு ஏற்பாடு செய்யும்படி கடற்றொழிலாளர்சமாஜத்தலைவர் உள்ளூராட்சி அமைச்சை கோரியுள்ளார்.

❋ யாழ். பொதுசன நூல் நிலைய கட்டிட இறுதி வேலைகளை உள்ளூராட்சி அமைச்சர் இவ்வாரம் பார்வையிட்டார்.

❋ யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பஸ் சேவைகளில் காரைநகர் — புதுக்குடியிருப்பு சேவைதான் அதிக வருமானத்தை கொடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❋ யாழ். மத்திய டிப்போவில் உள்ள 31 இரட்டைத் தட்டுபஸ்களில் 15 இரட்டைத் தட்டு பஸ்கள் பழுதடைந்துள்ளதன் காரணமாக, சேவைக்கு போதுமான பஸ்கள் விடப்படவில்லை. இதனுல் பொது மக்கள் கஷ்டமடைகிறார்கள்.

❋ கிளிநொச்சி பலநோக்குக் கூட்டுறவு சங்கருக்கு உடனடியாக கடன் தொகையை வழங்கும்படி உணவு அமைச்சை திரு. இரத்தினம் எம். பி. தந்தி மூலம் கோரியுள்ளார்.

❋ பருத்தித்துறையிலிருந்து நாயாறுக்கு புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் பரந்தன், தருமபுரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவுடாக நாயாறுக்கு சென்று யாழ்தேவி பிரயாணிகளை ஏற்றிச்செல்ல நண்பகல் பரந்தனை வந்தடையும்.

# ஈது அறிவாகுமா?

—காரை: செ. சுந்தரம்பிள்ளை.—

ஆழமான கடலை யளந்ததும்
ஆற்று நீரை மறித்தணை போட்டதும்
நீளமான பயணம தைச்சில
நிமிடநேர மதாக்கி முடித்ததும்
கோளு லாவிடு வானம திற்பல
குட்டிச் செய்மதி செய்து விடுத்ததும்
வாழும் மாந்தரின் நோய்களையும் பெரு
வைத்தியத் துறை யிற் சிறப்புற்றதும்;

மண்ணின் கீழே மறைந்து கிடந்திடு
மண்ணெய் யோடு நிலக்கரி கண்டதும்
எண்ணிலாத சுரங்கம் அமைத்துமே
ஈடிலாப் பெரும் பொற்குவை சேர்த்ததும்
பண்ணிசைத் திடு வானெலிப் பெட்டியும்
பரவசப்படுத் தும்படக் காட்சியும்
கண்ணிமைப் பதற்குட்பல காதம்
கடிது சென்றிடு தந்தி வசதியும்

மின்னல் ஒத்திடு மின் விளக்குப் பல
வீதிதோறும் அமைத்ததும்; மானிடர்
முன்னர் கண் டறியாத புதுமையால்
மூடக்கொள்கை பல்பறந் தோடவே
நன்மை செய்ததும் நானில மீதினில்
நாமடைந்த பெருஞ்சிறப் பாயினும்
என்ன கண்டனம் இப்புவி தன்னிலே
எங்கள் ஞானம் எமக்கழி வாகுதே.

மண்ணில் மாந்தரைக் கொன்று குவித்திடும்
மாபெரும் வலி வாய்த்த கருவிகள்
எண்ணிலாதன இன்று படைத்தனம்
இப்புவிக்கழி வோர்கணை மீதினில்
கொண்டு சேர்த்திடும் குண்டுகள் செய்தனம்
குவலயத்தினுக் கூறு விளைத்தனம்
கண்டஞான மில்காசினி மாந்தரைக்
காலனுக் கிரையாக்க உதவுதே.

அண்டை நாட்டைப் பிடித்திடு மாசையும்
ஆணவம் தரும் போரெனும் போதையும்
கொண்டதே சரியென்னுங் குறுகிய
கொள்கையும் புவிமாந்தரை யாட்டியே
சண்டைகள் பலமூட்டுவ தால்இனிச்
சகம் பிழைத்திடல் சாத்திய மில்லையோ
எண்டிசை புகழும் அறிவாற்றலால்
என்னகண்டனம்; ஈதறி வாகுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

செல்வி......
சிலாபம்

கே: காதலனை விரும்பாத கன்னி காதலன் தங்கையரை விரும்பலாமா?

ப: கூடாது -மேலைய நாடுகளிற்தான் அப்படி நடைபெறுகிறது. இங்கும் இருக்கிறதா இந்த விருப்பம்?

ஃ

க...தர்
ஆரையம்பதி-3

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் அதே பெண்ணை எனது நெருங்கிய நண்பன் எனக்குத் தெரியாமல்......

ப: அப்படியா சங்கதி? அந்தப் பெண்ணுக்கு இப்படி இன்னும் பல காதலர்கள் இருக்கலாம்! விசாரித்துப் பாருங்கள்!

ஃ

மொழி அரசி
கல்முனை

கே: தமிழ் அரசாங்க ஊழியர்களின் மொழி வழக்குக்கு தனிப்பெருந்தலைவர் பணஉதவி செய்வாரா?

ப: 'என்னிடம் பணம் ...ண்டுமென்று எழுது வினை...ர் சங்கத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி எனக்கு அதனை அனுப்பி வையுங்கள். அதற்குப்பிறகு அது பற்றி யோசிக்கிறேன்' என்று அவர் நிதி கேட்க வந்தவர்களிடம் கூறினாராம். இது போகாதவருக்கு வழிகாட்டுவதாகும். நிதி கேட்டுவந்தால் இப்படி பதில் அளிப்போரும் உலகில் உண்டா?

கே: இலங்கை-இந்திய உடன்படிக்கை மசோதாவைத்தமிழரசுக் கட்சி ஆதரித்தது என்றும் தாமும்தனது கட்சியும் எதிர்த்தது என்றும் திரு. பொன்னம்பலம் செய்யும் பிரசாரம் சரியா?

ப: பொய் — அவரும் அவரது சகா இருவரும் ஆதரித்தனர்.

ஃ

ராணி
யாழ்ப்பாணம்

கே: எனது வீட்டிற்கு அருகாமையில் வசிக்கும் வாலிபன் ஒருவன் என்னையே அங்கிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார் இதற்கு என்ன செய்ய வேண்டும்?

ப: நீங்களும் அவரையே பார்க்கிறீர்களோ? சரி, நயனங்கள்பேசுகின்றன போலும்! என்ன செய்ய வேண்டுமென்று கற்றுக்கொடுக்க வேண்டுமா? மீன் குஞ்சுக்கு நீந்தத் தெரியாதா என்ன?

ஃ

ஜே. ஜசிந்தா குமுதினி
கருக்குப்பனை

கே: காற்றிலும் கடியது எது?

ப: எண்ணம்.

ஃ

எஸ்.என்.கே.பாலசுந்தரம்
...னை

கே: நாடற்றவர்களை கச்சைதீவில் குடியேற்றினாலென்ன?

ப: தலைசிறந்த யோசனை: ஏனெனில் அந்தத் தீவே இப்பொழுது நாடற்ற தீவாகத்தான் இருக்கிறது. அது சொந்தம் இந்தியாவுக்கா அல்லது இலங்கைக்கா என்பது இன்னும் நிர்ணயிக்கப் படவில்லை.

கே: மனம் ஒரு குரங்கு மனிதன் ஒரு...

ப: ஒரு மரம்! குரங்கை மரம் தாங்குவதைப் போல மனத்தை மனிதன் தாங்குகிறான்.

ஃ

தா...ழூர் நாகராஜன்
...குடா

கே: 1900ல் பெண்களுக்கும் 1967 ல் பெண்களுக்கும் என்ன டிபரன்ஸ்?

ப: இந்த மினிஸ்கிர்ட்ஸ் அரை நிர்வாண உடை 1900ல் இருக்கவில்லையே.

கே: கருத்தடை மாத்திரையை பெண்கள் சாப்பிடுவது நல்லதா?

ப: வேறு எதுவும் சாப்பிடுவதற்கு இடைக்காவிட்டால் இதைச் சாப்பிடலாம்.

ஃ

செ. சரோஜாதேவி
கண்டி

கே: அரிசி-இறப்பர் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க சீனு மீண்டும் முன்வந்திருப்பதின் காரணமென்ன?

ப: இலங்கையின் துணிச்சல் தான் காரணம்.

ஃ

டி. எஸ். சதாசிவம்
கொழும்பு-6

கே: இலங்கையில்வேலையில்லாதோர் தொகை 600,000 பேராகக் கூடி விட்டதாமே!

ப: பூ! இதுவும் ஒரு தொகையா? இந்தியாவில் இவ்வாண்டில் வேலையில்லாது திண்டாடுவோர் தொகை எத்தனை தெரியுமா? 2680,000 பேர்.

ஃ

ம. சேகரன்
பதுளை

கே: தமிழகத்தில் தலைசிறந்த பகுத்தறிவு வாதி யார்? மிகச் சிறந்த காந்திய வாதி யார்?

ப: தலைசிறந்த பகுத்தறிவு வாதி பெரியார் ஈ.வெ.ரா. — மிகச் சிறந்த காந்தியவாதி அறிஞர் அண்ணா.

ஃ

அ. அ. சி. இறிஸ்ரி

கே: தற்கால மாணவர்கள் எல்லோரும் விஞ்ஞானக் கல்வியை அதிகம் விரும்புவதன் காரணம் என்ன?

ப: வேலையில்லாப் பிரச்சினையை விஞ்ஞானக் கண் கொண்டு பார்ப்பதற்காக.

ஃ

சா. தேவராஜ்தனசிங்
கருகுப்பனை

கே: உணவுப் பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் கூறும் புத்திமதிகள் எவை?

ப: முதலில் உழவர்களின் பிரச்சினையைத் தீர்த்தாலன்றி உணவுப் பிரச்சினையை தீர்க்க முடியாது. அதற்கான நீண்ட கால குறுகிய காலத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும்.

ஃ

எம். ஜீ. நில்லை
தாளங்குடா

கே: தட்டுங்கள் திறக்கப்படும் என்கிறார்களே எல்லாக் கதவும் திறக்கப்படுமா?

ப: இல்லை — உள்ளக்கதவு மட்டுமே!

ஃ

சொல்லின் செல்வன்
கொட்டடி

கே: பிரசாரத்தின் மூலம் நாம் எவற்றிலாவது வெற்றி பெறலாமா?

ப: பெறலாம். இட்லர் பிரசாரத்தின் மூலமே நாட்டின் உயர்பதவியைப் பெற்றான். கொள்கையைப் பரப்ப வேண்டுமானால் பிரசாரம்-பிரசாரம் -பிரசாரம் தேவை என்றார் மாமேதை லெனின்.

கே: தனிப்பெருந் தலைவர் தமது வாய்ச்சொல்லை செய்கையில் காட்டினால் என்ன?

ப: அப்படிச் செய்தால் அவர் தனின அரசியல் வாதியாக இருக்க முடியாதல்லவா?

ஃ

பாலன்
மட்டுநகர்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலித்தேன், அவளும் என்னை மனமாரக்காதலித்தாள் பிறகு நான் வேறு ஒரு இடத்துக்குப் படிக்கச் சென்றேன். அதன் பிறகு நான் அவளைச் சந்திக்கவில்லை, பின்பு என் நண்பர்களிடம் என்னை உட்பட எல்லோரும் 'கம்பக' என்றும் 'றவுடிகள்' என்றும்கூறியுள்ளார்கள். இதன் அர்த்தத்தை தாங்கள் தான் சொல்ல வேண்டும்?

ப: நீண்டகால இடவெளி காதலுக்குக் குழிதோண்டி விட்டது. இதற்கிடையே சில 'குறுக்கீடுகளும்' நிகழ்ந்திருக்கலாம். இது தான் அவளின் வெறுப்புக்குக் காரணம், காதலை புதுப்பிக்கத் தேவையானால் அவளுக்கு நிலைமையை விளக்கிக் கூறுங்கள்.

ஃ

'யாழினி'
மன்னிங்பட்டினம்

கே: ஒன்று மாறி மற்றொன்றாக உப தேர்தல்கள் நடத்துவதிலும் பார்க்க மக்கள் பிரதிநிதி சபையை கலைத்துவிட்டு ஓர் பொதுத் தேர்தலையே நடத்தலாமே?

ப: ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் தேர்தல், அது சதா நடைபெற்றுக் கொண்டிருந்தாலன்றி மக்கள் ஜனநாயகத்தை மறந்து விடுவா. எனவே கடந்த பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆரம்பமான இடைத் தேர்தல் இன்னும் தொடர்கிறது.

கே: திரு. பொ. கட்சியினர் மாவட்டசபையைஎதிர்த்துவாக்களிக்கும் சமயத்தில் அரசாங்கட்சியிலிருந்து விலகுவார்களா?

ப: யாழ்ப்பாணத்தில் அப்படிக் கூறினாலும் பாராளுமன்றத்தில் எதிர்த்து வாக்களிக்க மாட்டார்கள்! பொ. கட்சியின் உள்ளும் புறமும் ஒரே மாதிரியன்று.

ஃ

செல்வி மேரி,
கொக்பனித்தெரு.

கே: விகார மாதேவி பூங்காவில் சில சின்னஞ்சிறு காதல் சிட்டுகளைப் போலீசார் கைது செய்த பிறகு கொழும்பு காதல் மார்க்கட் எப்படி இருக்கிறது?

ப: அதற்குப் பிறகு தான் 'டொப்லெஸ்' டான்ஸ் நடக்கிறதாம்! இவ்வாரம் ஒரு பெரிய ஓட்டலில் பெரிய மனிதர்களின் விருந்தொன்றில் ஓர் அழகி ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைந்து இறுதியில் அரைக்குமேலே ஆடையின்றி (டொப்லெஸ்) நடனமாடியதாகப் பத்திரிகைகள் முறையிட்டனவே! பெரிய மனிதர்களின் விஷயமல்லவா? இதிலெல்லாம் ஏன் போலிஸ் தலையிடவேண்டும்?

ஃ

எல். இந்திராணி,
கொழும்பு-6.

கே: இடைத் தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதேன்?

ப: உணவுத் தட்டுப்பாடு தான் முக்கியகாரணம். இன்று பொதுத்தேர்தல் நடக்குமானால் பால் உணவுக்கு நாட்டிலே ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ஒன்றே போதுமே எதிர்க்கட்சிக்கு பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு!

ஃ

சு. பாலகிருஸ்ணன்,
வெள்ளவத்தை.

கே: இந்தோனேசியாவில் ஏற்பட்டுள்ள சமீபத்திய உள் நாட்டு புரட்சி எதைக் காட்டுகிறது?

ப: சீனுவின் தவறான கொள்கையை காட்டுகிறது.

ஃ

ஆரையூர் ஆசைத்தம்பி,
ஆரையம்பதி.

கே: பாடசாலைகளில் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு ஒரு கட்டுப்பாடு இருக்கின்றதல்லவா? அந்தச் சட்டம் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு இல்லையா?

ப: அவர்களுக்கு மட்டுமென்ன? வசதிபடைத்தவர்களிடம் இச்சட்டம் பலிக்காது. அது ஏழைகளுக்கென்றே இயற்றப்பட்ட சட்டம் போல் தெரிகிறது.

ஃ

வேம்பூர் கண்டன்,
கிரான்.

கே: உண்மையான அரசியல் வாதி எப்படி இருப்பான்?

ப: விலை உயர்ந்த உடைகளை அணிவான். கொழுத்த கார்களில் பறப்பான். தேர்தலுக்குத் தேர்தல் தலையைக் காட்டுவான், மற்றக் காலங்களில் அஞ்ஞாத வாசம் செய்வான். வெற்றி பெற்றாலோ உணவு உற்பத்திக்கு என்று கூறி சுமார் 100 ஏக்கரா அரசாங்கக் காணியைச் சொந்தமாக்கி 'ஸ்வாஹா' செய்வான்.

ஃ

க. பாலசந்திரம்,
பதுளை.

கே: பேதமை என்பது மாதர்க்கணிகலாம் என்று சொல்கிறார்களே சரியா?

ப: மாதரை மடையர்களாக்குவதற்காக தயாரிக்கப்பட்ட ஒரு பழமொழி இது.

கே: அன்பே உருவான கர்ணனை கொல்ல கண்ணபரமாத்மா உடந்தையாக இருந்தது சரியா?

ப: கதைக்கு காலுமில்லை தலையுமில்லை. கால் சரியாக இருந்தால், தலைசரியாக இல்லையே! எனவே எது சரி என்று கூறமுடியும்.

கே: பத்திரிகாசிரியர்கள் அகந்தையும் தற்பெருமையும் கொள்வதற்கு காரணம் என்ன?

ப: பிறர் கருத்துக்களை தனது கருத்தாக எழுதிக்காட்டும் வல்லமை அவர்களிடம் இருப்பதுதான் காரணம்.

ஃ

இ. திருச்செல்வம்,
குருக்கள்மடம்.

கே: ஒரு தனி மனிதன் தன் சொந்த சமூகத்தை எப்போது வெறுக்கிறான்?

ப: அவன் உலகப் பிரஜையாக மாறும் பொழுது.

ஃ

மணியம்,
யாழ்ப்பாணம்.

கே: காதலுக்கு கண் இல்லையாமே?


ப: கண்மட்டுமா இல்லை, அதற்கு கருத்துமில்லை.

ஃ

ஆர். பி. கண்ணன்,
புதுவட்டக்கொடை

கே: சில வாலிபர்கள் கூட்டங்களில் துணிவே துணை என்கிறார்களே ஏன்?

ப: துணைக்கு அழைப்பதற்கு வேறு யாரும் இல்லாததால்.


பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால அதன் உண்மை விளங்கும்.
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11
தொலைபேசி: 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வட இலங்கையில் அரிசி விலை சிறகு கட்டிப்பறக்கிறது. ரூ. 1.90 வரை பறந்துவிட்டது.

* அதன் விளைவு ஏழை மக்களுக்கு பசி பட்டினி அதிகரித்ததே!

* அரிசி விலை உயரும் போது இதர பொருட்களின் விலைவாசிகளும் கூடுகின்றன. அதன் விளைவு இதர பகுதிகளைவிட வட பகுதியில் வாழ்க்கைச் செலவு கூடுவதே!

### அரிசித்தடை வதந்தியின் எதிரொலி

# தமிழ்ப் பகுதியில் அரிசி விலையேறுகிறது

# அரசாங்கத்தின் மீது மக்கள் அதிருப்தி!

'வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஏனைய இடங்களிலிருந்து அரிசி கொண்டு செல்வதற்கு அரசாங்கம் தடைவிதிக்கஆலோசித்து வருவதன் பயனாக, இப்பகுதிகளில் அரிசி விலை திடீரென அதிகரித்து விட்டது. இதனால் வடக்கு, கிழக்கில் வாழும் நடுத்தர ஏழை மக்கள் மிகக் கஷ்டமடைவதுடன் அரசாங்கத்தின் போக்கில் அதிருப்தியுமடைந்துள்ளார்கள் என்று அறியப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படுவதாகவும் இதற்காக தென் னிலங்கையிலிருந்து அப்பகுதிகளுக்கு அரிசி எடுத்துச் செல்லப்படுவதாகவும், எதிர்க்கட்சியினர் அண்மைக் காலமாக பிரசாரம் செய்து வருவது தெரிந்ததே.

எதிர்க்கட்சியினர் இப்படிப் பிரசாரம் செய்த போதிலும். இதுவரை வடக்கு, கிழக்கிலிருந்து அரிசிகடத்தப்படுவதாக எத்தகைய ஆதாரபூர்வமாகவும் நிரூபிக்கப்படவில்லை.

இம்மாகாணங்களிலுள்ள சுங்கப் பகுதியினரும், பொலிசாரும், அரிசி, நெல்லு, கடத்தப்படுவதாகவோ அரிசி, நெல்லு கடத்தும் முயற்சிகள் நடப்பதாகவோ கூறப்படுவதை மறுத்துள்ளனர் என்று அறியப்படுகிறது.

யாழ். அரசாங்க அதிபரும் இதுவரை அரிசி கடத்தல் நடைபெற்றதாக எந்த நிகழ்ச்சியும் கண்டு பிடிக்கப்படவில்லையென்று அறிவித்துள்ளாராம்.

எதிர்க்கட்சியினரின் இந்தப் பொய்ப் பிரசாரத்தை மூதவையில் பேசிய செனட்டர் நடராஜாவும் கண்டித்து, வடக்கு, கிழக்கிலிருந்து அரிசி கடத்தப்படுவதாக கூறப்படுவது முழுப்பொய் என்று கூறியிருந்தார்.

ஆயினும், வட கிழக்கு மாகாணங்களுக்கு அரிசி, நெல் கொண்டு செல்வதை தடை செய்ய அரசாங்கம் ஆலோசித்து வருவதாக பத்திரிகைகளில் அண்மையில் ஒரு செய்தி வெளியாயிற்று.

இதைத் தொடர்ந்து இப்பகுதிகளில் அரிசி விலை மளமளவென்று ஏறத் தொடங்கி விட்டது. என்று தெரிகிறது.

ஒரு கொத்து ரூபா 1-20 விற்ற அரிசி இப்போது ரூபா 1-90 விற்கப்படுவதாக அறியப்படுகிறது. சில இடங்களில் இன்னும் அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகிறதாம்.

இந்தத் திடீர் விலையேற்றம். இப்பகுதி மக்களிடையே — குறிப்பாக ஏழை நடுத்தர மக்களிடையே— மிகுந்த கஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதென்றும் இதனால், அரசாங்கத்தின் மீது அதிருப்தி தோன்ற வழியேற்படுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

அரசாங்கம் அரிசி கொண்டு செல்லத் தடை விதிப்பதற்கு முன்பே விலைவாசி இப்படி அதிகரித்தால், தடை விதித்த பின்னர் நிலை இன்னும் பயங்கரமாகி விடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எதிர்க்கட்சியினரின் பொய்ப் பிரசாரத்துக்கு அஞ்சி, அரிசிக்கு தடை விதித்து வடக்கு, கிழக்கு மக்களின் அதிருப்தியை அரசாங்கம் சம்பாதிக்கப் போகிறதா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் இன்று எழுந்துள்ளது.

இது சம்பந்தமாக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விரைவில் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரிகிறது.

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் அச்சு வார்ப்பகத்தில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ் ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்த எங்கள் இயந்திரம் சாதாரண எழுத்துக்களையும், அலங்கார, எழுத்துக்களையும் வார்க்கக் கூடியது.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் அச்சு வார்ப்பகம்,**

194 ஏ. பண்டாரநாயக்கா வீதி,

கொழும்பு—12.

## தமிழ் வார ஏட்டின் மாபெரும் சாதனை

சமீபத்தில் வெளியான இந்தியப் பத்திரிகைப் பதிவாளர் அறிக்கையின்படி தமிழ் நாட்டில் வெளியாகும் ஒரு வாரப் பத்திரிகைதான இந்தியாவிலேயுள்ள பத்திரிகைகளில் அதிகமாக விற்பனையாகியிருக்கின்றது எனத் தெரிகிறது. 1965ல் இதன் விற்பனை 3,15 243. பிரதிகள். 1966ல் இது 326,500 பிரதிகளாக உயர்ந்திருக்கிறது.

1966ல் இந்தியாவில் மொத்தம் 414 தமிழ் பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டன. (விற்பனைத் தொகை 27,67 லட்சம்) இவைகளில் 385பத்திரிகைகள் தமிழ் நாட்டிலிருந்து வெளியானவை. இவற்றின்விற்பனைத் தொகை 26,29லட்சம்.

தமிழ்நாட்டைத்தவிர மகாராஷ்டிரத்திலிருந்து ஐந்து பத்திரிகைகள், மைசூரிலிருந்து 11 பத்திரிகைகள் புதுச்சேரியிலிருந்து ஐந்து பத்திரிகைள் வெளியாகின. தவிர கேரளத்திலிருந்து மூன்று பத்திரிகைகளும் டெல்லியிலிருந்து மூன்று பத்திரிகைகளும் வங்காளத்திலிருந்து ஒரு பத்திரிகையும் பிரசுரிக்கப்பட்டன.

இந்தியா பூராவும்1966ல் வெளியான பத்திரிகைகளின் எண்ணிக்கை 8840. 1961ல் 6823 பத்திரிகைகள் பிரசுரிக்கப்பட்டன. இதன்படி 30சதவிகிதம் பத்திரிகைகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்று தெரிகிறது. தினப்பத்திரிகைகள் 1961ல் வெளியானவை 484. 1966ல் இவைகளின் எண்ணிக்கை 601.

விற்பனையைப் பொறுத்தவரை 1965ம் ஆண்டுக்குத்தான் புள்ளிவிபரங்கள் முழுவதும் கிடைத்துள்ளன. இதன்படி எல்லாப்பத்திரிகைகளையும்எடுத்துக்கொண்டால் மொத்த விற்பனை 247லட்சம். இதில் ஆங்கிலப்பத்திரிகைகளின்விற்பனை நான்கில் ஒரு பங்காகும். சில மொழிப் பத்திரிகைகளின் விற்பனை விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| ஆங்கிலம் | — | 67.9 | லட்சம் |
| இந்தி | — | 46.9 | ,, |
| தமிழ் | — | 28.0 | ,, |
| மலையாளம் | — | 18.06 | ,, |
| குஜராத்தி | — | 15.09 | ,, |
| மராத்தி | — | 15.08 | ,, |

பத்திரிகைகளின் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்திய நாட்டில் வெளியாகும் பத்திரிகைகள் குறைவானது என்பதை புள்ளிவிபரம் சுட்டிக் காட்டுகிறது.

ஆயிரம் பேருக்கு இந்தியாவில் 13.7 தினப்பத்திரி

(14-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### தமிழ் தந்தி அனுப்ப வசதி வேண்டும்

தேசியஅரசாங்கத்தில் தமிழ் மொழி மசோதா நிறைவேற்றப்பட்டு இருபது மாதங்கள் ஆகின்றன. ஆனால் இதுவரை தமிழுக்கு உரிய இடம் அளிக்கப்பட்டு உள்ளதா என்றால் இல்லை என்ற பதிலைத்தான் சொல்லவேண்டியுள்ளது!

7-9-67-ந் திகதி திருக்குறள் முன்னணிக் கழக சார்பில் கழக அங்கத்தவர் ஒருவருக்கு தமிழ் வாழ்த்து தந்தியொன்றினை எழுதி கழக பொருளாளர் நோர்வூட் அஞ்சல் நிலையத்தில் கொடுத்தார். "தமிழ் தந்தி ஏற்க முடியாத நிலையில் உள்ளோம்" என்று கூறிய அஞ்சல் நிலைய அதிகாரிகள் ஏற்க மறுத்துவிட்டனர். "இது அட்டன் அஞ்சல் தலைமை நிலையத்தின் கட்டளை" என்றும் கூறினர்.

இதில் விசித்திரம் என்னவெனில் இதே அஞ்சல் நிலையத்தில் இத்தந்தி கொடுத்த ஒரு மாதத்திற்கு முன்பெல்லாம் தமிழ் தந்திகள் ஏற்கப்பட்டன என்பதுதான். இப்பொழுது என்ன வந்துவிட்டது? தமிழ் தந்தி எடுக்கக் கூடாது என்று ஏன் கட்டளை பிறப்பிக்க வேண்டும்? இதில் எது உண்மை என்பது எமக்கு தெரியாது.

இவ்விடயம் குறித்து நடவடிக்கை எடுத்து இப்பகுதி தமிழ் மக்கள் தமிழிலே தந்தி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யுமாறு திருக்குறள் முன்னணிக் கழகம் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் திரு. கா. பொ. இரத்தினம் பா. உ. அவர்களையும் பணிவன்போடு வேண்டுகிறது.

பி. எம்: லிங்கம்
என், கருப்பையா தலைவர்
செயலாளர்
திருக்குறள் முன்னணிக் கழகம்
நோர்வூட்

### கிராமச் சங்கங்கள்

கிராமங்களில் சங்கங்கள் சில, சிறு தகராறுகளாற் சுக்கு நூறுகின்றன. நாளுக்கு நாள் வலுவும் வளமும்பெற்று வளரவேண்டியன, மூளையிலே வாடுவது அச்சங்கங்களுக்கு மட்டுமன்றி, நம் நாட்டுக்கே பெரும் நட்டம்.

அதிக இடங்களில் சிறு வேற்றுமைகளைப் பெரிதாக்கி, பிரிவைத் தருபவர்கள் சுயநலவாதிகள். இவர்கள் நாடு நம்ப சில காரணங்களைக் காட்டி நல்லவர்கள்போல் நடித்து, சொந்த லாபத்தைத் தேடிக் கொள்ளுகின்றனர்.

சுயநல வாதிகளிடமிருந்து சங்கங்கள் காப்பாற்றப்பட்டாகவேண்டும். இதற்கு மக்கள் விழிப்படைய வேண்டும். பிளவுகள் தோன்றும்போது, பொறுமையாக, இரு பக்க வாதத்திற்கும் விளக்கங்களுக்கும் செவி சாய்க்க வேண்டும். பேச்சுவார்த்தைகளால் தீர்வு காணும் பண்புடையவர்களாக வேண்டும்.

சங்கங்கள் சகல கருத்துக்களுக்கும் கவனம் செலுத்தி அவசியமான மாற்றங்களைச் செய்து, சனநாயக அடிப்படையில் சரியான பெரும்பான்மை விருப்பு வெறுப்புக்கமைய செயலாற்றல் அவசியம். சுயநலவாதிகளின் பொய் வேடங்களையும், போலிகளையும்பொது சனம் அறியச் செய்தலும் வேண்டும். இன்றேல் சனநாயகம் வளராது, வாழாது. பொதுநலம் மலராது — நிலைக்காது.

— அமுதன்.

களவி;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாவுரிமை வழங்க தமிழரசாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாம்

## மார்க்சீய சர்வாதிகாரம் மீண்டும் தலை தூக்கும் அபாயம்

எந்த ஒருவிளையாட்டிலும் குழுமனப்பான்மை மிகவும் இன்றியமையாதது. ஒரு கிரிக்கெட் விளையாட்டுக் குழு அக்குழுவிலுள்ள எல்லோரது உறுதியான ஒத்துழைப்புமின்றி வெற்றிபெற முடியாது. இது நமது பிரதமருக்கு கூட தெரிந்ததுதான.

நான் இங்கு அரசியலில் இருக்கவேண்டிய குழு மனப்பான்மையைப்பற்றியே அலசியிருக்கிறேன். ஒரு இடைத்தேர்தல் வரும்போது, தங்கள் கடமையை செய்யாமல் உதாசீனஞ் செய்வதால் ஏற்படும் அபாயங்களைப் பற்றி பிரதமர் தனது குழுவிலுள்ள நண்பர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. டண்டாரகம இடைத்தேர்தலில் அரசாங்கக்கட்சிதோல்வியடைந்ததற்கு காரணம், தேர்தல் பிரசாரத்தின் போது அதன் சக்தி பலவீனமாக இருந்தது தான்.

வேறுபாடுகளை மறந்து விடும்படி அவர் விடுத்த கோரிக்கை, அரசாங்கக்கட்சிக்குள் சில உறுப்பினர்களால் கட்டுப்பாடுமீறப்பட்டு வருவதையே எடுத்துக் காட்டுகிறது. இதில்தான் உண்மையான ஆபத்து இருக்கிறது.

அரசாங்கக் கட்சிக்குள் கட்டுப்பாடு குறைவது, அரசியல் அதிகாரத்தை இழக்கும் நிலைக்கு கொண்டு செல்லும்.

இதன் பயன் மீண்டும் ஜனநாயகம் அழியவும், மார்க்சீய சர்வாதிகாரம் தலை தூக்கவும் வழிவகுக்கும். ஆகவே அரசாங்கக்கட்சி தனது கண்களை அகலத் திறந்தபடி இருத்தல் அவசியமானது.

### வேட்பாளர் புகார்

அரசாங்கக்கட்சியின் உறுப்பினர்கள் வாக்கு வேட்டையின்போது தம்மை தனித்து விட்டுவிட்டனர் என்றும், இதில் ஆக கேவலம் எதுவெனின், பிரசாரத்தின் உச்சக் கட்டத்தின்போது, தேர்தலுக்கு அண்மிய நாட்களிலும் தேர்தல் நடத்த அன்றும் கூட தமக்கு உதவிபுரிய கட்சி ஊழியர்கள் ஒருவரேவில்லையென்றும், அரசாங்கக்கட்சி வேட்பாளர் புகார் செய்திருக்கிறர்.

### கட்சி ஊழியர் வாதம்

தேர்தல் பிரசாரத்திற்குப் பொறுப்பாகவிருந்த உள்நாட்டமைச்சரும், கட்சி ஊழியர்கள் தமதுகட்சி வேட்பாளருக்கு ஒரு ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிக்கவில்லையென்று குற்றம் சாட்டியிருக்கின்றனர். ஆனல், கட்சி ஊழியர்களோ, உணவுத் திணைக்களம், வாக்காளர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் தேவையான அத்தியாவசிய உணவு வகைகளை விநியோகிக்கத்தவறிவிட்டதென்று உணவுத் திணைக்களத்தின் மீது பழியைப் போடுகிறார்கள்.

### விலைமதிப்பற்ற பாடம்

தோல்விக்கு எது காரணமாக இருந்த போதிலும், எதிர்காலத்தில்வரும் இடைத்தேர்தல்களில் எச்சரிக்கையாக இருப்பதற்கு விலைமதிப்பற்ற பாடம் ஒன்று இதிலிருந்து கிடைக்கிறது. 30வருட அரசியல் அனுபவத்தினுல் தாம் பெற்ற அரசியல் தந்திரத்தை பிரதமர் கையாண்டார். அவர் எவரையும் குற்றம் சுமத்த வில்லையென்றும், ஆனல் ஒவ்வொருவரையும் நல்ல பிள்ளைகளாக இருந்து அரசியல் விளையாட்டில் ஈடுபடும்படியும் கூறினரென்று சொல்லப்படுகிறது? எப்படி

## சபாநாயகரின் பொறுப்புக்கள்

### "அரசியல் ஞானி"

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சட்டமன்றத்தின் சபாநாயகர் பதவி ஒரு சாதாரண பதவியல்ல. அதிகப்படியான மன உறுதியும் உடலுறுதியும் தேவைப்பட்ட ஒரு பொறுப்பான பதவி அது. மோதல்களும் கைகலப்புகளும் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைக் கட்டுப்படுத்தி சபையை நடத்திச்செல்வதற்கு விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட நிலை தேவைப்படுகிறது.

பல்வேறு குழுக்களும் பல்வேறு கருத்துள்ளவர்களும் கூடும் பிரதிநிதிகள் சபையில் சட்டத்தையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்துவது இலேசான காரியமல்ல. ஆனல், இப்பதவிக்குத் தகுதியானவர்களை நமது சனப்பிரதிநிதிகள் சபையில் நாம் பெற்றிருக்கிறோம்.

சபாநாயகர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் முதன்முதலாகத் தெரிவுசெய்யப்பட்டவர் பிரான்சிஸ் மொலமுரே, எவரையும் கவரும் உருவமைப்பும், திறமையும் வளைந்துகொடுக்காத உறுதியுமுடையவராக அவர் விளங்கினர். பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் அவரைக் கண்டு அச்சமடைந்தார்கள். அவருக்குத் தொல்லை கொடுக்கும் நோக்குடன் உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட அர்த்தமற்ற ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு அனுமதியளிக்க மறுத்தார்.

அவருக்குப் பின் சபாநாயகராக வந்த அல்பேர்ட் பீரிசும், உறுதியுள்ளவராக விளங்கினர். ஏழு வருடங்களுக்கு சபாநாயகர் பதவியில் அவர் நீடித்திருந்தார். இலங்கைப் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை இது ஓர் நீண்ட காலமல்ல.

இவர்களைப் போன்றே, எமது தற்போதைய சபாநாயகரும் திறமையுடையவராக விளங்குகிறர். ஏற்கெனவே, உபசபாநாயகராக இருந்து, சபையை நடத்தி அனுபவம் பெற்றவர். அவர் முதன்முதலாக சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டபோது சரியாக எடுத்துரைத்தது போல, சபாநாயகர் பதவி கட்சிகளுக்கு முழுக்க முழுக்க அப்பாற்பட்டதே.

முந்திய சபாநாயகர்கள் கடைப்பிடித்த மூன்று முக்கிய கொள்கைகள்,

1. ஒரு கோஷ்டிக்குச் சார்பான கருத்துக்களைக் கூறுதிருந்தது.

2. உறுப்பினர்களிடமிருந்து தகவல் சேகரிக்கும் நோக்குடன் கேள்விகள் கேளாதிருந்தது.

3. உறுப்பினர்களை எப்பொழுதும் சபாநாயகரை நோக்கி உரையாற்றும்படி வலியுறுத்தியது.

இந்த மூன்று பண்புகளும் பாராளுமன்ற ஆட்சியின் தாய்

(14-ம் பக்கம் பார்க்க)

## எத்த செய்தியைத் திரிக்கிறது

இலங்கை — இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை அமுல் நடத்துவதற்காகப் புதிய பகுதியொன்று அக்டோபர் முதற் தகதி ஆரம்பிக்கப்பட்டதல்லவா? இந்த விசேட பகுதியில் எல்லாவித அலுவல்களுக்கும் பொறுப்பு அதிகாரிகளாக இருப்பவர்கள் தமிழரசு வாதிகளாவர் என்று 'எத்த' ஏடு 13-10-67ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

குடியேற்ற, வெளியேற்ற திணைக்களத்திலும், மத்திய வங்கியிலும் ஒப்பந்த அமுலுக்காகத் தொடங்கியுள்ள புதிய பகுதிகளுக்கு நியமிக்கப்பட்ட தமிழ் அதிகாரிகளில் பெரும்பாலோர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று இதுபற்றி விசாரணை செய்த 'எத்த' விசேட நிருபா தெரிவிப்பதாக எத்த மேலும் கூறுகிறது.

இலங்கை-இந்திய ஒப்பந்தச் சட்டத்தை அமுல் நடத்த முன்பு—அதாவது அக்டோபர் மாதம் பிறக்கும் போதே—குடியேற்ற வெளியேற்ற திணைக்களத்தின் 12 பகுதிகளினதும் தலைமை அதிகாரிகளாக மேற்கண்டவர்கள்தான் நியமிக்கப்பட்டிருந்தனர் என்று 'எத்த' எழுதுகிறது.

'ஒப்பந்த அமுலுக்கான நடவடிக்கைகளை அமுல் நடத்தும் முக்கிய அதிகாரிகள் பெயர்ப்பட்டியல் ஒன்றையும் 'எத்த' பிரசுரித்துள்ளது.

இதோ எத்த கொடுத்துள்ள பட்டியல்:-

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் விசா பெற்றிருப்பவர்களின் பகுதி உதவி அதிபர்:- திரு. எஸ். கணேசராஜா

அப்பகுதியின் தலைமை அதிகாரி—திரு. கே. சாம்பசிவம்.

வெளியூர்களில் விசா பெற்றிருப்பவர்களின் பகுதி உதவி அதிபர்:- திரு. அல்பிறெட் பொன்னையா.

விசா காலாவதியாகியுள்ளவர்களின் (கொழும்பு) பகுதியின் தலைமை அதிகாரி: திரு. சி. கணபதிப்பிள்ளை.

விசா காலாவதியாகியிருப்பவர்களின் (வெளியூர்) பகுதியின் தலைமை அதிகாரி:- திரு. என். பரமலிங்கம்.

இலங்கை பாஸ்போர்ட் பகுதி உதவி அதிபர்:- கே. முருகேசு.

இப்பகுதியின் தலைமை அதிகாரி: திரு. கியூ. அந்தோனிப்பிள்ளை.

இப்பகுதியில் பணிபுரியும் எழுதுவினைஞர்கள் 10 பேர்களில் 8 பேர்கள் தமிழர்களாவதுடன் அவர்களில் அநேகர் தமிழரசுக்கட்சியின் தீவிர அனுதாபிகளாவர்.

குடிவரவு விசா பகுதியின் தலைமை அதிகாரி: திரு. எஸ். வரதராசா.

விசா ஈட்டுப் பகுதியின் உதவி அதிபர்: திரு. கே. முருகேசு.

இந்தப் பகுதியின் தலைமை அதிகாரி: திரு. எஸ். செல்வஞானப்பிள்ளை.

கள்ளக் குடியேற்றப் பகுதியின் தலைமை அதிகாரி: திரு. ஏ. கருணைரத்தினம்.'

எத்த மேலும் கூறுவதாவது:

'ஒப்பந்த அமுல் சட்டத்திற்கிணங்க தாயகம் திரும்பும் இந்தியர்களுக்காக பணம் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குவது சம்பந்தமாக மத்திய வங்கியில் தனிப்பகுதியொன்று கடந்த முதற் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ளவர்களிலும் பெரும்பாலோர் தமிழரசு வாதிகளாவர்.'

'பிரசாவுரிமை வழங்கும் அதிகாரம் தமிழரசாருக்கு கொடுக்கப்பட்டுள்ள' என்று எத்த இந்தச் செய்திக்குத் தலைப்பு கொடுத்துள்ளது.

## பிள்ளைகளை அதிகமாக பெறும்படி பிரசாரம்

### குழந்தை வளம் குறைவதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி

பிள்ளை ஒரு தொல்லையாக இருப்பது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில்தான்! இன்னும் சற்று விரிவாகச் சொன்னல், ஆசியநாடுகளில்தான்!

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், 'பிள்ளையோ பிள்ளை' என்ற குரலை வேறு வகையில் முழக்குகின்றனர்!

இங்கு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக எவ்வளவு பிரயத்தனங்கள் உண்டோ அதுபோலவே கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் குழந்தைகள் அதிகமாகப் பிறக்கவேண்டும் என்பதற்காகப் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன.

போலந்து, அல்பேனியா ஆகிய இரு நாடுகள் நீக்கி, ஏறக்குறைய எல்லாக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் 'குழந்தைகள் இல்லாத நிலை'யைப் பெற்றிருக்கின்றன.

'பிள்ளைகள் பல தேவை' என்பது சில நாடுகளது கோரிக்கையாக இருக்கிறது!

### விவாகரத்துக்கு கட்டுப்பாடு

ருமேனியா, 'அதிகப் பிள்ளைகளைப் பெறுங்கள்' என்று மக்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

விவாக ரத்துக்கள் மலிந்தால், அதன் மூலம் மக்கள் தொகை பெருகுவது பாதிக்கப்பட்டுவிடுமோ' என்று பயந்து, ருமேனிய அரசு, விவாக ரத்துக்களை அதிக அளவுக்குக் கட்டுப்படுத்தி வருகிறது!

அப்படியே அனுமதித்தாலும், தரவேண்டிய வாழ்க்கைச் செலவுத் தொகையைக் கட்டாயப்படுத்தியும், அதிகரித்தும் வருகிறது அந்த நாடு.

### குழந்தை இல்லையேல் வரி!

கருச் சிதைவு சட்டபூர்வமாகத் தடைப்படுத்தபபட்டிருக்கிறது ருமேனியாவில்! குழந்தைகள் இல்லாத தம்பதிகள் — திருமணமாகாத ஆண் - பெண்கள் அனைவரும், அங்கே சட்டத்தின் கோபப் பார்வைக்கு ஆளாகின்றனர்! அதிக வரிக் கொடுமைக்கு ஆட்படுத்தப்படுகின்றனர்!

குழந்தைகளுக்கும் குழந்தைகளைப் பெற்றவர்களுக்கும் அங்கே அமோக செல்வாக்கு — அரசாங்க உபசரிப்பு!

சிறுவர்களுக்கான வசதி மிக்க பள்ளிகள் — எழில் கொழிக்கும் விளையாடுமிடங்கள் ருமேனியாவில் ஏராளம்; ஏன் தெரியுமா? — பெற்றவர்களுக்கு எவ்விதச் சிரமமும் பிள்ளைகளால் ஏற்படக் கூடாது' என்பதற்காக!

இப்பிரச்சினையில் அங்கேரி, ருமேனியாவைப் பின்னுக்குத் தள்ளுகிறது! அங்கே ஆயிரம் பேர்களுக்குப் 12பேர்கள்தான்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை துறைமுகப் பிரச்சினைகள் தீர
# நாகநாதன் தரும் கூட்டுறவுத் திட்டம்

## பிரதமருக்குக் கடிதம்

சென்ற ஓராண்டு காலமாக திருமலைத் துறைமுக வேலைகள் சீராக நடைபெறவில்லையென்பது அறிந்ததே. இதற்கு ஒரு தீர்வு காணுவது அவசரமானதும் அத்தியாவசியமானதுமாகும். எங்கள் அபிப்பிராயத்தின்படி தற்போதுள்ள (கண்டிராக்ட்) தொழில் ஒப்பந்த முறை செயல்படுத்தக் கூடியதாக இல்லை. துறைமுகத்தைத் தேசியமயமாக்கப்படுவதால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது. அப்படிச் செய்வதால் அது தேச நலன்களைப் பாதிப்பதாக இருக்கும். கொழும்பு, காலி துறைமுகங்களின் நிலைமையைக் கவனித்தால் இவ்வுண்மை புலப்படும்.

தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் நாகநாதன் பா. உ. திருகோணமலைத் துறைமுகத்தின் எதிர்காலம் பற்றி பிரதமருக்கு எழுதிய கடிதமொன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

### காலித்துறைமுகம்

1. 880 தொழிலாளர்களும் 110 சிப்பந்திகளும் உள்ளனர். ஆண்டுக்கு 50,000 தொன் பொருட்களே ஏற்றவும், இறக்கவும் படுகின்றன. தேசிய மயத்தினால் ஆண்டுக்கு 20 இலட்சம் ரூபா அரசாங்கத்திற்குத் தொடர்ச்சியான நட்டம் ஏற்பட்டு வருகிறது.

### கொழும்புத் துறைமுகம்

2. கொழும்புத் துறைமுக தலைவராக திரு. ஏ. டபிள்யூ. டபிள்யூ. அபயகுணசேகரா அவர்கள் பொறுப்பேற்ற பின் துறைமுகம் அபார முன்னேற்றமடைந்துள்ளது. அப்படி இருப்பினும் சோம்பல் காரணத்தாலும் நமது ஜனநாயக ஆட்சி அமைப்பில் துறைமுகத் தேசிய மயம் பற்றிய தெளிவற்ற நிலையாலும் நமது கொழும்புத் துறைமுக (ஏற்றுமதி — இறக்குமதி) பொருளாதார வரவு செலவுகளின் சீர்கேடுகள் ஏற்பட்டிருப்பதைக் காணலாம்.

(அ) ஆசியாவிலேயே அதிக கூடுதலான துறைமுகச் செலவுத் தயாராகக் காத்திருக்கும் (ஸ்டான்ட்பை) தொழிலாளருக்கு ஆண்டுக்கு 20 இலட்ச ரூபாவும் சம்பளமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) உலகிலேயே கொழும்புத் துறைமுகத்தில்தான் மிகக் குறைந்த அளவான வேலை செய்யப்படுகிறது.

நவீன இயந்திர சாதனங்களும், வசதிகளுமிருந்தும் மணிக்கு 8 முதல் 10 தொன் மட்டுமே ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகிறது.

ஆனால் எவ்விதமான நவீன சாதனங்களும், வசதிகளும் இல்லாத காங்கேசன்துறைத் துறைமுகத்தில் மணிக்கு 23 தொன் வீதம் ஒவ்வொரு வேலைக்குழுவினரும் செய்யும் ஏற்றுமதி இறக்குமதியை ஒப்பிடும்போது கொழும்புத் துறைமுகத்தின் நடை முறை வேதனையளிப்பதாகவுள்ளது.

(உ) மெதுவாக வேலைசெய்யும் கொள்கையாலும், வேலைநிறுத்தங்களாலும் வீணடிக்கப்பட்ட வேலை நேரங்களின் புள்ளிவிபரங்களை அறியமுடியவில்லை.

#### தேசியமயம் தொல்லையை அதிகரிக்கும்

ஆனால் 1965 லிருந்து இந்த தேசிய ஆட்சி ஏற்பட்டது முதல் வேலை நிறுத்தங்களும் மெதுவாக வேலை வேலை செய்யும் போக்கும் வெகுவாகக் குறைந்துள்ளன. அதற்கு முன் தேசியமயத் திட்டங்களின் விளைவால் கொழும்புத் துறைமுகம் ஒன்றே உலகில் உள்ள ஏனைய துறைமுகங்களிலெல்

(1) கொழும்பில் தொன் ஒன்றுக்கு வேலைக்கூலி 20 ரூபாவாக இருக்கும்போது திருமலையில் தொன் ஒன்றுக்கு 8 முதல் 9 ரூபாவாகவே இருந்தது.

(2) 1959 — 66ல், கப்பல் தங்கும் மேலதிக (டெமரேஜ்) கட்டணம் கொழும்பைவிட மிகக் குறைவாகவே இருந்தது.

(3) தொழிலாளர் குழுவின் வேலை அளவு கொழும்பில் மணிக்கு 8 முதல் 10 தொன்னாக இருக்க திருமலையில் மணிக்கு 10 முதல் 14 தொன்னாக இருந்தது.

(4) இலங்கை அரசாங்கத்தினருக்கு திருமலைத் துறைமுக நிர்வாகத்தால் எவ்வித நட்டமும் ஏற்படவில்லை.

#### திட்டமிடப்பட்ட செயல்

சென்ற 12 மாதங்களில் கொழும்புத் துறைமுகத்தைப் பார்க்கிலும் அதிகமான தொழிலாளர் பிரச்சி

இதனால் தேசத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதை இந்தச் சங்கங்கள் எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும்

தொழிலாளர் குழுவினர்களும் (கண்டிராக்ட்) ஒப்பந்தக்காரர்களும் தொழிலாளர் பிரச்சினைகளை கொடூரமாகவும், ஆத்திர மூட்டும் வகையிலும் வளர்த்துள்ளனர்.

மற்றும் ஓரிரண்டு (கண்டிராக்ட்) ஒப்பந்தக் காரர்கள் தங்கள் வியாபார வேலைகளை விருத்தி செய்து கொள்வதற்காகத் தொழிற் சங்கத் தலைவர்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு தங்களின் தொழில் போட்டிகளில் மற்ற (கண்டிராக்ட்) ஒப்பந்தக்காரர்களின் வேலை வாய்ப்புக்களைத் தடை செய்ததன் மூலமாகவும் துறைமுகத்தில் சண்டைசச்சரவுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

#### தூண்டி விடப்பட்டவை

உண்மையில் இந்த வேலை நிறுத்தங்களும், துறைமுக தொழில் சீர்கேடுகளும் தேசாபிமானமில்லாத குறிப்பிட்ட தொழிற் சங்கங்களினால் தூண்டிவிடப்பட்டவை என்பதையும், துறைமுகத்தைத் தேசியமயமாக்குவதற்கான

## துறைமுக வருமானத்தில் தொழிலாளருக்கு பங்கு

னைகளும், அமைதியற்ற நிலைகளும் திருமலைத் துறைமுகத்தில் நிகழ்ந்துள்ளன. தொழிலாளர் வேலை நிறுத்தங்களும், ஒழுங்கீனச் செயல்களும் திருமலைத்துறைமுகத்தைத் தேசியமயமாக்குவதற்காகவே வேண்டுமென்றே வெளிப்படையாகத் திட்டமிட்டுத் தூண்டி விடப்பட்டன.

திருமலையில் இயங்கும் தேசியக் கொள்கைகளுக்கு எதிரான இலங்கை வர்த்தகச் சிப்பந்திகள் சங்கமும், ஐக்கியத் துறைமுகத்தொழிலாளர் சங்கமும் வெளிப்படையாகவே தேசியமயத்தைக் கோரியதுடன் வேலைநிறுத்தங்களையும்

அரசாங்கத்தை ஏமாற்றும் சூழ்ச்சித் திட்டங்களே இவை என்பதையும், இந்தக் (கண்டிராக்ட்) ஒப்பந்தக்காரர்கள் கூற முன் வருவார்களானால் அது சிறப்பாக இருக்கும்.

முன் கூறியது போல ஒப்பந்த (கண்டிராக்ட்) முறைகளுக்கு இனி எதிர்காலமில்லை என்பதை நாங்கள் காணுகின்றோம். மேலும் எதிர்காலத்தில் இந்த முறை நீக்கப்பட்டு விடும் என்பதிலும் எங்களுக்குச் சந்தேகமில்லை. தேசத்தின் பொருளாதார நிலையை அவதானிக்கும் போது, துறைமுகத் தேசியமய நோக்கத்தைக் "சட்டியிலிருந்து அடுப்பில் விழும் கதையாகத்தான் நாங்கள் கருதுகிறோம்.

#### மாற்றுத் திட்டம் நாம் தருவோம்

தேசியமயத் திட்டம் சேவைக்குப் பாதுகாப்பையும், நிரந்தரமான தொழிலாளர் சம்பளத்தையும் உறுதிப்படுத்துகிறதானாலும், இதை விடச் சிறந்ததும் தொழிலாளர் சேம நலன்களைப் பூரணமாகப் பாதுகாப்பதும், தேசத்துப் பொருளாதாரத்தில் புது மலர்ச்சியும் ஏற்படுத்தக்கூடியதுமான திட்டத்தை நாங்கள் கூற விரும்புகிறோம்.

## சாவித்திரிதான் சரசுவதியா?

நடிகையர் திலகம் சாவித்திரிதான் நாமகளா? பத்மினிதான் துர்க்கையா? தேவிகாதான் இலட்சுமியா? இக் கேள்விகள் இம்மாதம் 11-ம் திகதிய சிந்தாமணிப் பத்திரிகையை பார்த்த இந்துக்களின் மனங்களில் எழுந்தன.

'தினபதி'யின் வாரப் பத்திரிகையான 'சிந்தாமணி' கலைவாணி விழாவை முன்னிட்டு இம் மாதம் 11-ம் திகதி இதழில் முன்பக்கத்தில் துர்க்கை, இலட்சுமி, சரசுவதி யென்று கூறி சாவித்திரி, தேவிகா, பத்மினியாகிய மூன்று நடிகைகள் ஒரு படத்தில் போட்ட வேடப் படங்களை வெளியிட்டிருந்தன. படங்களின் அடியில் இன்ன படத்தில் இன்ன வேடத்தில் நடித்த நடிகைகள் இவர்கள் என்று விளக்கம்கூட தரப்படவில்லை.

துர்க்கையும், சரசுவதியும், இலட்சுமியும் சாவித்திரியும், பத்மினியும், தேவிகாவும் தானா?

இப்படங்களை அதுவும் கலைவாணி விழாவின் போது பிரசுரித்ததன் மூலம், இந்து சமயத்தை 'சிந்தாமணி இழிவுபடுத்தி விட்டதாக இந்துக்கள் ஆத்திரமடைந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இப் படங்களை சிந்தாமணியில் பார்க்கும் இந்துக் குழந்தைகள், நடிகைகள்தான் கடவுளர்கள் என்று கருத வாய்ப்புண்டு என்றும், 'சிந்தாமணி' இந்து மக்களின் மனங்களை புண்படுத்திவிட்டதென்றும் ஒரு இந்துப் பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் ஆத்திரத்துடன் கருத்து வெளியிட்டார்.

## 'தேசியமயம் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்காது'

வுகளைக் கொழும்புத் துறைமுகத்தில் காணலாம்.

உதாரணமாகக் கல்கத்தாவில் தொன் ஒன்றுக்கு 8 முதல் 10 ரூபாவும், திருமலைத் துறைமுகத்தில் 7 முதல் 9 ரூபாவும் காங்கேசன்துறை துறைமுகத்தில் 5 முதல் 7½ ரூபாவும் செலவாகும்போது கொழும்பில் தொன் ஒன்றுக்கு 20 ரூபா செலவாகிறது.

(ஆ) 1959—66 வரை உலகில் எந்தத் துறைமுகத்திலும் இல்லாத அளவு மிகக் கூடுதலான கப்பல் தங்கு வரி (டெமரேஜ்) கட்டணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) மேலதிக வேலை நேரத்துக்கென தொழிலாளருக்கு ஆண்டுக்கு 130 இலட்ச ரூபாவும், அதே வேளையில் வேலைக்

லாம் பார்க்க மிகவும் அமைதியற்றதாக இருந்து வந்துள்ளது.

ஆதலினால் தேசியமயமாக்கும் நோக்கம் தேசிய இன்னல்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் அதிகப்படுத்துவதாகுமேயல்லாது அவற்றை நீக்குவதற்கு உதவ மாட்டாது.

முக்கியமாக சென்ற ஆண்டிலே திருமலைத் துறைமுக வேலைகள் மிகவும் சீர்கெட்டுப் போயின. என்றாலும் தேசியமயமாக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுகத்தைப் பார்க்கிலும் நல்ல வருமானமுடையதாகவே இருந்துள்ளது.

அமைதியற்ற நிலையையும் இதற்காகவே உண்டாகியுள்ளன.

#### அவர்களுக்கு கவலை இல்லை!

தேசிய மயமாக்குவதன் மூலம் தமது சங்க அங்கத்தவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்குவதற்கும் அவர்களுடைய சம்பளம், மேலதிக நேர வேலைக்குரிய பணம், வேலைக்குத் தயாராக காத்திருப்பதற்கான (ஸ்டான்ட்பை) சம்பளம் ஆகியன தொழிலாளர்கள் வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் அளிக்கப்பட்டாக வேண்டுமென்பதற்காக இந்தச் சங்கங்கள் தேசிய மயத்திட்டத்தை ஆதரிக்கின்றன.

#### கூட்டுறவு திட்டம்

திருமலைத் துறைமுகத்தில் ஓர் கூட்டுறவுத் திட்டத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

இந்தக் கூட்டுறவு திட்டம் இரு வகை கூட்டுறவுத் சங்கங்களாக இயங்கும்.

ஒன்று ஏற்றுமதி சாமான்களை ஏற்றுவோரின் சங்கம், மற்றது இறக்குமதிச் சாமான்களை இறக்குவோரின் சங்கம்.

இவ்விரண்டு கூட்டுறவுச் சங்கங்களிலுமிருந்து இரு பிரதிநிதிகளும், உத்தியோகப் பூர்வமற்ற அங்கத்தவர்களாக திருமலை அரசாங்க அதிபர், வெளிவிவகார அமைச்சின் (கப்பற் பகுதி) பிரதிநிதி, இராஜாங்க அமைச்சின் (இறகுமதிப் பகுதி) பிரதிநிதி, தபால் தந்தித் தொடர்பு அமைச்சின் (போக்குவரத்துப் பகுதி) பிரதிநிதி, தொழிலமைச்சின் பிரதிநிதி ஆகியோர் திருமலைத் துறைமுக பரிபாலனச் சபையினராக இருத்தல் வேண்டும்.

#### தொழிலாளர் அங்கம் வகிப்பர்

கூட்டுறவு சங்கங்களைப் பொறுத்த மட்டில் வேலை செய்யும் தொழிலாள அங்கத்தவர்களையும், சிப்பந்திகளையும், நிர்வாக உத்தியோகத்தர்களையும் கொண்ட சபையாக இருக்கும்.

#### மூலதனம் 10 லட்சம்

திருமலைத் துறைமுகத்தின் இப்படியான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி நடத்த பத்து இலட்ச ரூபா மூலதனமாகத் தேவைப்படும்.

தொடக்கத்தில் தொழிலாள அங்கத்தவர்கள் கூட்டு

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்!

இந்தியாவுக்குச் செல்லவிரும்பும் மலைத் தோட்டத் தமிழர்கள் அங்குள்ள விலைவாசி விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமல்லவா?

நல்ல அரிசி ஒரு படி ரூ. 1-75.
சாப்பிட முடியாத அரிசி ஒரு படி ரூ. 1-25.
குரக்கன் ஒரு படி ரூ. 1-25.
வெல்லம் ரூ. 3-50.
தேங்காய் எண்ணெய் ஒரு போத்தல் ரூ. 8-00.
நல்லெண்ணெய் ஒரு போத்தல் ரூ. 6-50.
லக்ஸ் சோப் ஒரு கட்டி -75.
சன்லயிட் சோப் ஒரு கட்டி -70
லைபாய் சோப் ஒரு கட்டி -75.
மண்ணெண்ணெய் ஒரு போத்தல் -60.
பருப்பு ஒரு படி ரூ. 3-00.
ஒரு றாத்தல் பாண் -55.

மேற்கண்ட விபரங்கள் தென்னகத்தில் சென்னை நகரை அடுத்துள்ள செங்கல்பட்டு பகுதியில் நிலவும் விலைவாசி நிலவரமாகும்.

இந்த விபரங்களை திரு. எம். பெரியசாமி என்பவர் எழுதி அனுப்பியுள்ளார்.

# "ஆறு மாதங்களாக சீனியும் மாவும் கண்ணில் படவில்லை"

திரு. பெரியசாமி மஸ்கெலியா பகுதியில் லெட்சுமி தோட்டத்தில் வசித்து வந்தவர். அவர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு தனது குடும்பத்துடன் இந்தியாவுக்குத் திரும்பினார்.

திரு. பெரியசாமி செங்கல்பட்டு ஜில்லா காயரம்பேடு, கள்ளிவாக்கம், 15 ம் எண் விலாசத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. எஸ். கலியப்பெருமாளுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் மேற்கண்ட விலைவாசி விபரங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. பெரியசாமி இலங்கையிலிருக்கும்போது இ. தொ. கழகத்தில் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

### அங்கும் கஷ்டம்

இலங்கையிலிருந்து 5½ இலட்சம் பேர் இந்தியாவுக்கு வந்தால் இந்தியாவிலுள்ளவர்களின் கஷ்டங்கள் அதிகரிக்கும். இலங்கையிலுள்ளவர்களுக்கும் கஷ்டம் ஏற்படும்.

நான் இந்தியாவுக்கு வந்த பின்னர் ஒரு கட்சியிலும் சேரவில்லை. இங்கு நிலைமையை நன்கு புரிந்து கொண்ட பிறகு தான் சேர விரும்புகிறேன்.

இங்கு பட்டணங்களில் வசிப்பவர்களுக்கு பங்கீட்டுக் கூப்பன் உண்டு. படி அரிசி ரூ. 1/- மாவு, சீனி, கோதுமையும் கிடைக்கிறது.

### மாவும் சீனியும் காணவேயில்லை

ஆனால் நாட்டுப்புறத்திலுள்ளவர்கள் படி அரிசி ரூ. 1-75 அல்லது ரூ. 1-50, சாப்பிட முடியாத அரிசி 1-25, கேப்பை 1-25, வெல்லம் 3-50 தேங்காயெண்ணெய் ஒரு போத்தல் ரூ. 8-00 நல்லெண்ணெய் 6-50, லக்ஸ் சோப் -75 சன்லைட் -70, லைப்பாய் -75 லாம்பெண்ணெய் ஒரு போத்தல் -60, பருப்பு ஒரு படி 3-00, ஒரு றாத்தல் ரொட்டி -55,

நான் வந்து ஆறு மாத காலமாகியும் இன்னும் மாவும் சீனியும் கண்ணால் பார்த்ததேயில்லை.

அவற்றைக் கூப்பன் உள்ளவர்களிடம் கேட்டாலும் கொடுக்க முடியாதென்கிறார்கள். அவர்கள் அதை வாங்கி கூடுதல் விலைக்கு விற்கிறார்கள்.

கூலிவேலைக்கு போகிறவர்கள் காலை 9 மணிக்கு வேலை துவங்கி சாயந்தரம் 6 மணிக்குத்தான் வீடுதிரும்புவார்கள். பகல் சாப்பாடு கொடுத்து பெண்களுக்கு ரூபா 1ம் ஆண்களுக்கு ரூபா 2ம் கூலி கிடைக்கிறது.

பெரியாஸ்பத்திரியில் ஒருவரை பார்க்கப்போகவேண்டுமென்றால் சாயந்திரம் 4 மணிக்குத்தான் போகமுடியும். அதற்குமுன் பார்க்கவேண்டுமென்றால் பணம் கொடுத்தால் தான் போக முடியும்.

### 6 மாதங்களில் ரூ. 2000 காலி

நான் 1952 ல் ஒரு காணி நிலம் ரூபா 2300க்கு வாங்கினேன். அதே நிலம் இப்பொழுது ரூபா. 6500 க்கு கேட்கிறார்கள். காணி வாங்குவதாயிருந்தாலும் விலை அதிகம். எனக்கு காணி வீடு இருந்தும் கூட நான் இலங்கையிலிருந்து கொண்டுவந்த 2000 ரூபாயும் 6 மாதத்திற்குள் செலவாகி விட்டது.

இன்னும் இலங்கையிலிருந்து எனக்கு சேமலாபநிதிப்பணம் கிடைக்கவில்லை, கைரேகை வைத்தது சரியில்லை என்று கடிதம் வந்திருக்கிறது.

கொழும்புத் தபால் வந்து சேர ஒரு மாதகாலமாகிறது.

### திருச்சியில் மும்மடங்கு விலை

இந்தியாவில் சாமான்களுக்கு கட்டுப்பாட்டு விலையில்லை. சென்னையில் ஒரு சாமான் 1 ரூபா என்றால் திருச்சியில் 3 ரூபாவாக விற்கப்படுகின்றது.

கர்ப்பிணி பரிசோதனை வசதியெல்லாம் நாட்டு பகுதிகளுக்கும் உண்டு. இது நெடுகிலும் நடந்து வருகின்றது. வீதிகளுக்கு லைட் வசதியும் உண்டு.

வயது சென்ற அநாதைகளுக்கு மாதம் 5 ரூபா கிடைத்து வந்தது. இது இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிப்பிள்ளைக்கு பகல் 12 மணிக்கு கோதுமை, ரவை உணவு தானியங்கள் சாப்பாடும் சாயந்திரம் 4 மணிக்கு கஞ்சி பவுடர்பாலும் தருகிறார்கள். சில இடங்களில் சோறும் போடுகிறார்கள்.'

## தயக்கம் வேண்டாம்

அன்றும் இன்றும் சிங்கள தீவிரவாதிகளின் கைவரிசைக்குப் பேர்போன ஒரு அலுவலகம் தபால் தந்தோர் சேமிப்பு வங்கியாகும். இன்றுவரை தமிழில் கடிதம் எழுதியவர்களுக்கு இந்தவங்கி தமிழில் பதில் அனுப்பவில்லையென்றும் தனிச்சிங்களத்திலேயே பதில்கள் அனுப்பப்படுகின்றதென்றும் அங்கு கடமை புரியும் தமிழ் உத்தியோகத்தர்கள்கூட இந்தத் தமிழ்ப் புறக்கணிப்புக்கு உதவுமாறு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்றும் அறியப்படுகின்றது.

இந்த வங்கியின் தீவிர சிங்களத் திணிப்பையும் தமிழ்ப்புறக்கணிப்பையும் நூற்றுக்கணக்கான மக்கள் கிளிநொச்சி பா. உ. திரு. கா. பொ. இரத்தினத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து திரு. இரத்தினம் அமைச்சர் மொண்டேகு ஜயவிக்கிரமாவுக்கு இதுபற்றி அறிவித்துத் தமிழ் மக்களின் குறையை நீக்குமாறு கேட்டிருந்தார்.

பின்னர் மூன்று நினைவூட்டுக் கடிதங்களும் அமைச்சருக்கு அனுப்பப்பட்டனவென்றும் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

கடைசியாக திரு. இரத்தினம் அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் 'நாங்கள் சலுகையோ தயவோ கேட்கவில்லை. தமிழ் மொழிச்சட்டப் பிரமாணங்களை நடைமுறைப்படுத்துவிக்குமாறு தான் கேட்கிறோம். தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகிய உங்களுக்கு மக்களின் குறைகளை விரைவில் நீக்கவேண்டிய அவசியத்தை நாங்கள் விளக்கவேண்டியதில்லை. நீங்களோ நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றீர்கள் என்பது தான் தெரியவில்லை. எத்தனையோ நினைவூட்டல்கள் அனுப்பியேன். ஒன்றும் நடைபெறவில்லை. இன்னும் காலந்தாழ்த்தாமல் உடனே நடவடிக்கை எடுத்து அறிவியுங்கள்' என்று கேட்டிருக்கிறார்.

## செனட் தேர்தல்; தமிழரசார் நிலை

1969ம் ஆண்டுதான் தமிழரசுக்கட்சி செனட் சபை தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பு ஏற்படுமென்று தமிழரசுப் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

அண்மையில் காலியாகும் 10 செனட் சபை ஸ்தானங்களில் எதற்கும் போட்டியிடுவதில்லையென்று கட்சி தீர்மானித்திருப்பதாகவும் அப்பிரமுகர் தெரிவித்தார்.

"இதற்குக் காரணம் 1965ம் ஆண்டு செனட்டர் நடராசாவைத் தெரிவு செய்த போது தமிழரசுக் கட்சிக்கு ஐ.தே.க. அளித்த 13 வாக்குகளை இத்தேர்தலின் போது நாம் ஐ.தே. கட்சிக்கு திருப்பி கொடுக்க வேண்டியிருப்பதே" என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தமிழ் கடிதத்துக்கு தமிழிலேயே பதில்! மொழிச் சட்டம் கூறுவது இதுதான்!

## பீரிசுக்கு எஸ். ஜே. வி. விளக்கம்

'தமிழ்க் கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் எழுதப் படவேண்டும். தமிழில் எழுதப் படும் கடிதங்களுக்கு சிங்களத்தில் பதிலும் அதன் மொழிபெயர்ப்பு தமிழிலும் அனுப்பப்படுவது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கும் தமிழ் மொழிச்சட்டத்தின் இரண்டாவது (பி) சரத்துக்கும் முரண்பட்டது' இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் வர்த்தக மந்திரி திரு. பீரிசுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.



அண்மையில் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழில் பதில் கிடைப்பதில்லையென்றும் அது குறித்து நடவடிக்கையெடுக்கும்படியும் தமிழரசுத் தந்தை வர்த்தக அமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக் கடிதத்துக்கு பதில் எழுதிய அமைச்சர் தமிழ்க்கடிதங்களுக்கு சிங்களத்தில் பதிலும் அதன்மொழிபெயர்ப்பு தமிழிலும் அனுப்பப்படுவதாக சா. ஜே. வேக்கு தெரிவித்திருந்தார். அமைச்சரின் இக்கருத்துக்கு மறுப்புக் கூட பதிலளித்து தமிழரசுத் தந்தை எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

'அரசாங்கத்தின் கொள்கை எதுவென்பது உங்களுக்கு சரியாக விளங்கவில்லையென்றே தொன்றுகிறது. அரசகரும மொழிச் சட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. ஒன்று 1956ம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம். மற்றது 1958ம் ஆண்டின் தமிழ் மொழி விசேடவிதிகள் சட்டம். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் அரசகரும மொழிச் சட்டமாகும்.

1958ம் ஆண்டின் தமிழ் மொழிச் சட்டத்துக்கு விதிகள் கூட நிறைவேற்றப்பட்டு விட்டன. இச் சட்டத்தின் இரண்டாவது (பி) பிரிவுப்படி இலங்கையின் எந்தப்பகுதியிலிருந்தென்றாலும், தமிழில் ஒருவர் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெற உரிமையுடையவராகின்றார்.

தமிழில் எழுதப்படும் கடிதத்துக்கு தமிழிலேயே பதில் எழுதப்படவேண்டும் என்பது அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

எனவே காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து தமிழில் எழுதப்படும் கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அனுப்பப நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## "இதற்கொரு எல்லையில்லையா? பண்டிதர் கேட்கிறார்

"கிளிநொச்சி பகுதியில் தொடர்பாகவும், அரிசிப் பங்கிட்டுப் புத்தகத்துடன் வாழும் நாடற்றோர் பொலீஸாரால் தேவையற்ற சோதனைக்குள்ளாக்கப் படுவதுடன்படுமோசமாக இம்சிக்கப் படுகிறார்கள். இதற்கு ஒருஎல்லையில்லையா?" என்று கிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் சட்டவிரோத குடியேற்ற தடுப்பு பொலிஸ் அதிகாரி திரு. லயனல் சேனநாயக்காவுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளார்.

"போதிய ஆராய்வும் சான்றுமில்லாமல் இவர்கள் தொல்லைப் படுத்தப்படுவதால் இம்மக்களின் உழைப்பும், உணவுற்பத்தியும் பாதிக்கப்படுகிறது" என்று அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழர்கள் ட

# மார்ட்டின் கமிஷன் அறிக்கை விபரம்

யாழ்ப்பாண மாநகரசபை வட்டாரங்களை 17 வட்டாரங்களிலிருந்து 23வட்டாரங்களாக அதிகரித்திருக்கிறேன். புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்காக 2வட்டாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் புதிய மாநகரசபையின் உறுப்பினர்கள் தொகை 25ஆக உயரும். கூடியவரை எல்லா வட்டாரங்களும் சம அளவு பரப்பளவும், சம அளவு வாக்காளர் தொகையும் கொண்டதாக உருவாக்கியிருக்கிறேன். பின்தங்கியுள்ள கரையோரப்பகுதி மக்களுக்கும், சிறுபான்மைத்தமிழர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய முறையில் புதிய வட்டாரங்கள் வகுக்கப்பட்டுள்ளன' இவ்வாறு யாழ் மாநகரசபை வட்டார. எல்லை விஸ்தரிப்பு பற்றிய தமது அறிக்கையில் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் கூறியிருக்கிறார்.

யாழ். மாநகரசபை வட்டார டவரையப்பு, எல்லை விஸ்தரிப்பு சம்பந்தமாக திரு. மார்ட்டின் சமர்ப்பித்திருந்த அறிக்கையை இம் மாதம் 13ம் திகதி மூதலவையில் அமைச்சர் திருச்செல்வம் சமர்ப்பித்தார்.

மார்ட்டின் அறிக்கையின் முழு விபரமும் கீழே தரப்படுகிறது.

நான் 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ம் திகதி உள்ளூராட்சி அமைச்சரின் பணிப்புரைப்படி, உள்ளூராட்சி அமைச்சின் நிரந்தரச் செயலாளரால் யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லை விஸ்தரிப்பு பற்றியும், வட்டாரங்களை அதிகரிப்பது குறித்தும் விசாரணை செய்து, சிபார்சுகளைச் செய்யும்படி நியமிக்கப்பட்டேன். பின்வரும் மூன்று விஷயங்கள் பற்றி விசாரணை செய்யும்படியும் எனக்கு ஆலோசனை கூறப்பட்டது.

(அ) தேவையானல், தற்போதைய யாழ். மாநகர சபை எல்லைக்கு வெளியேயுள்ள பகுதிகளையும்சேர்த்துக் கொள்ளுதல்.

(ஆ) வட்டாரம், சனத்தொகை, ஏனைய முக்கிய காரணங்களினடிப்படையில் யாழ். மாநகர சபை கொண்டிருக்க வேண்டிய மாநகர சபை உறுப்பினர் தொகை.

(இ) ஒவ்வொரு வட்டாரத்தின் எல்லை வரையறுப்பு.

## பொதுமக்கள் ஆர்வம்

எனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை செம்மையாகச் செய்வதற்கு இதுபற்றி பொது மக்களுக்கு நல்ல முறையில் விளம்பரப்படுத்துதல் அவசியமானதென்பதை உணர்ந்தேன். ஏனெனில், இப்பிரச்சினையில் பொதுமக்கள் அதிக ஆர்வம் காட்டி வந்தனர்.

எனது பணியின் தன்மையை விளக்கியும், பொதுமக்களிடமிருந்து ஆலோசனையையும் ஒத்துழைப்பையும் கோரியும், தமிழ், ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது. மாநகர எல்லைக்குட்பட்ட இடங்களிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் ஆலோசனை கோரி பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

## 45 ஆலோசனைகள்

அரசியல் கட்சி பிரதிநிதிகள் யாழ்ப்பாணம், நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர சபையின் மாஜி உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள் சகலருக்கும் அறிவிப்புகள் அனுப்பப்பட்டன. எழுத்து மூலமாக 45 ஆலோசனைகள் கிடைத்தன.

பொதுமக்கள் ஆலோசனை கூறுவதற்கு ஒரு மாதம் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. எழுத்து மூலமாக ஆலோசனைகள் சமர்ப்பித்தவர்கள் கூட நேரடியாகத் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூற விருப்பம் தெரிவித்திருந்தபோது அவர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது.

## எங்கும் பார்வையிட்டேன்

நான் 1964-ம் ஆண்டு ஜூன் 17-ம் திகதி யாழ்ப்பாணம் சென்றேன். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளையும், அதைச் சுற்றியுள்ள உள்ளூராட்சிப் பகுதிகளையும் பார்வையிட்டேன். பின் தங்கிய நிலையிலிருப்பதாகக் கூறப்படும் குறிப்பிட்ட சில வட்டாரங்களுக்கும் விஜயம் செய்தேன். இவ்வட்டாரங்கள் பற்றி எனக்கும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் விசேட மகஜர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நகர நில அளவைக்கு பொறுப்பான ஒரு உலாந்தாவின் உதவியும் எனக்கு கிடைத்தது.

## யாழ். எம். பி. கருத்து

நான், யாழ். மேயர், மாநகர கமிஷனர், யாழ்ப்பாணத்தையும் அதையடுத்த பகுதிகளினதும் மாவட்ட காரியாதிகாரிகள், கிராம சேவகர்கள், உதவித் தேர்தல் அதிகாரி ஆகியோருடன் விவாதங்கள் நடத்தினேன். யாழ். பாராளுமன்ற உறுப்பினர் எனக்கு எழுத்து மூலம் ஒரு மனு சமர்ப்பித்திருந்தார். அத்துடன் வாய் மூலமும் சாட்சியமளிக்க விரும்பினார். துரதிருஷ்டவசமாக அவர் அப்போது நாட்டுக்கு வெளியேயிருந்தார். நான் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய அன்றுதான் அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவரது சாட்சியத்தைக் கேட்க நான் ஆவலாயிருந்ததால், அவரை கொழும்புக்கு வரவழைத்து அவரது கருத்துக்களைக் கேட்டேன். எனது அறிக்கையை முடிக்கு முன், மீண்டும் யாழ்ப்பாணம் சென்று, 4 நாட்கள் தங்கி விசாரணை நடத்தினேன்.

நகர சபையாக இருந்து வந்த தற்போதைய யாழ். மாநகர சபை 1-1-1949ல் தான் மாநகர அந்தஸ்தைப் பெற்றது 14 வட்டாரங்களைக் கொண்டிருந்த யாழ். நகர சபை 15 வட்டாரங்களைக் கொண்ட மாநகர சபையாக உருவெடுத்தது.

மாநகர சபையின் எல்லை நிர்ணயமோ, அன்றி வட்டாரப் பிரிவினையோ மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து விசாரணை நடத்தி வகுக்கப்பட்டதாகக் காணப்படவில்லை.

## பழைய எல்லைகள்

உள்ளூராட்சி அமைச்சில் கிடைத்த தகவலின்படி உள்ளூராட்சிக் கமிஷனர், நடைமுறையிலிருந்து வந்த நகர சபையின் எல்லைகளையே ஏற்றுக்கொண்டு, வட்டாரங்களைப் பதினான்கிலிருந்து பதினைந்து ஆக உயர்த்தினார் என்பது தெளிவாகிறது. 1949-ம் ஆண்டு மாநகர சபை இயங்கத் தொடங்கிய நாளிலிருந்து எல்லையை விஸ்தரிக்கவும், வட்டாரங்களை புனரமைக்கவும் கோரி ஒரு கிளர்ச்சி இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

## முயற்சி ஆரம்பம்

1949 ஆகஸ்ட் மாதத்திலிருந்தே எல்லை விஸ்தரிப்புக்கான முயற்சிகள் தொடங்கிவிட்டன.

',சனப் பிரதிநிதிகள் சபையிலுள்ள யாழ்ப்பாணத் தொகுதி இரண்டு தொகுதிகளாகப் பிரிந்துவிட்டதாலும், யாழ்ப்பாண நகரில் சனத்தொகை அதிகரித்துவிட்டதாலும், யாழ். மாநகர சபை 25 வட்டாரங்கள் உள்ளதாக விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று இச்சபை தீர்மானிக்கிறது'' என்ற தீர்மானம் 1959 மேமாதம் 15-ம் திகதி, யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## நடவடிக்கை இல்லை

யாழ். மாநகர சபை புதிய முறையில் சனத்தொகை விதாசாரப்படி குறைந்தது 21 வட்டாரங்களாகவேனும் பிரிக்கப்பட வேண்டுமெனவும், அப்படிப் பிரிக்கப்படும்போது நாவாந்துறையில் ஒரு வட்டாரம் விசேடமாக மீனவர்களுக்காக ஒதுக்க வேண்டுமெனவும் 10-3-61ல் மாநகரசபைக் கூட்டத்தில், தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மனம் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனினும், 13-11-62ல் நடந்த யாழ். மாநகர சபைக் கூட்டத்தில, கரையோர மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வட்டாரங்கள் வகுக்கப்பட வேண்டுமென மற்ருெரு தீர்மானம் வந்தது. ஏனைய சிறுபான்மை வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவம் வகிக்க வழி செய்யப்பட வேண்டும் என்று சிலர் கருத்து வெளியிட்டனர். என்ருலும் தீர்மானம் நிறைவேறியது.

வாக்குப்பலம் மட்டு... தங்... ளுக்கு இரு தனிவட்டார... களை அமைத்துத்தரக் கூடியத... என்றும் புகார் செய்தனர்... யாழ் மேயர். திரு. டி. எஸ்... துரைராஜாவும் இதைக் கடு... மையாக ஆட்சேபித்தார்.

## சிறுபான்மைத் தமிழர்... அதிருப்தி

சிறுபான்மைத் தமிழ் மக்க... ளும் இதில் திருப்தியடைய... வில்லை. நம்பிக்கையில்லாத்... தீர்மானம் மூலம் செனட்டர்... நல்லையா தமது எதிர்ப்பைத்... தெரிவித்தார். சன நெருக்க... முள்ள வட்டாரங்களான, வண்ணார்பண்ணை, அரியாலை, கந்தர்மடம், நல்லூர் ஆகிய... பகுதிகளைச் சேர்ந்த மக்களும்...

# எல்லா வட்டாரங்... சம பிரதிநிதித்...

இதுபற்றி ஆலோசிக்க மாநகரசபையால் ஒருவிசேட குழு நியமிக்கப்பட்டது. இத்தீர்மானத்தை நடைமுறைப் படுத்த அப்போதைய உள்ளூராட்சி அமைச்சர் நடவடிக்கைகள் மேற்கொண்டார். இப்பிரச்சினையில் அவர் புயலுக்கூடாக் கப்பலைச் செலுத்த வேண்டிய நிலையேற்பட்டது.

## துண்டு போடுவதற்கு எதிர்ப்பு

மாநகரசபையால் திரு. எம். ஜேக்கப் தலைமையில் நியமிக்கப்பட்ட வட்டாரப்பிரிவினை ஆலோசனைக்குழு, கரையோரப்பகுதி வட்டாரங்களுக்கு புதிய எல்லை நிர்ணயிப்பதில் தமக்கு ஆட்சேபனையல்லையென்று உள்ளூராட்சி கமிஷனருக்கு அறிவித்தது.

புதிய இரண்டு வட்டாரங்கள் அமைப்பதையோ, அன்றி ஏனைய சிறுபான்மை மக்களுக்கு சலுகைகள் அளிப்பதையோ யாழ். மாநகரசபையும், யாழ் மக்களும் எதிர்க்கவில்லையென்பதும், ஏற்கனவே இருந்து வரும் வட்டாரங்களை மேலும் துண்டு போடுவதைத்தான் அவர்கள்எதிர்த்தார்கள் என்பதையும் அறியக் கூடியதாயிருந்தது.

## கொந்தளிப்பு ஏற்பட்டது

எனினும், 13.10.62ம் திகதிய தீர்மானத்தில் காணப்பட்ட சிபார்சுகளை அமுல் நடத்துவதில் அமைச்சர் அக்கறை காட்டினர். கரையோரப் பகுதி மக்களுட்பட சகல பகுதியினரிடையும் இது கொந்தளிப்பை ஏற்படுத்தியது. புதிய வட்டாரத்தின் குறுகிய எல்லைக்குள் கட்டுப் பட்டு இருப்பதை பாசையூரைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்கள் விரும்பவில்லை. குருநகரிலுள்ள கரையோரப் பகுதி மக்களோ, தங்கள் 4000பேருடைய வாக்கு பலமும்4000 வாக்காளர்களைக் கொண்ட இரண்டு வட்டாரங்களுக்குள் சேர்க்கப்பட்டு விட்டதென்றும், தங்கள்



இப்புதிய வட்டாரப் பிரிவினை... யை வெறுத்தனர்—

## பாராளுமன்றத்தில் தீர்மானம்

17 வட்டாரங்களாக யாழ்... மாநகர சபை திருத்தியமை... க்கப்பட்டதை ஆட்சேபித்துப்... நகரத்தின் உண்மையான... தேவைகளைப் பொறுத்து வட்... டாரப் பிரிவினைக்கு உள்ளூ... ராட்சி அமைச்சர் நடவடிக்கை... யெடுக்க வேண்டுமென்றும்... 1963ம் ஆண்டு ஜூலை மாதம்... பாராளுமன்றத்தில் ஒரு தீர்... மானம் கொடுக்கப்பட்டது... (இத்தீர்மானத்தில் தமிழ்... காங்கிரசைச்சேர்ந்த திரு. மு... சிவசிதம்பரம் எம். பியு... கையெழுத்திட்டிருந்த... குறிப்பிடத்தக்கது.)

எப்படியிருந்த போதிலும்... புதிய இரண்டு வட்டாரங்க... வகுக்கப்பட்டு, 17 வட்டார... களின் அடிப்படையில் 1963... ஆண்டு டிசம்பரில் தேர்த... நடத்தப்பட்டது.

## மாநகர சபை கோரிக்கை

17-1-64ல் கூடிய புதி... யாழ். மாநகர சபை... மாநகர சபைப் பகு... 21 வட்டாரங்களாக பிரிப்... தற்கு ஒரு சுதந்திரமுள்ள... குழுவை உள்ளூராட்சி அமை... சர் நியமிக்க வேண்டும் என்... கோரியது.

இந்த நிலையிற்தான் நான்... இவ்வேலைக்கு நியமன... செய்யப்பட்டேன்.

எனது முதல் வேலை, யாழ்... மாநகரசபை எல்லையை அடு... துள்ள பகுதிகள் மாநகரசபை... எல்லைக்குள் சேர்த்துக்-கொள்... ளப்பட வேண்டிய தேவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரதிநிதித்துவம் பெற வாய்ப்பு

...யுண்...ா என்பதை ஆராய்வதாகவேயிருந்தது.

### எல்லைகள்

இப்பிரச்சினை குறித்து, தனிப்பட்ட பிரமுகர்களிடமிருந்தும் ஆலோசனைகள் பெறப்பட்டன. யாழ். மாநகர சபை, வடக்கிலும், மேற்கிலும் கொக்குவில் கிராமசபையாலும் வடக்கிலும், கிழக்கிலும் முறையே நல்லூர், கோப்பாய் கி. சங்கங்களாலும், ஏனைய திசைகள் குடாகடலாலும், கடலாலும் சூழப்பட்டது.

### தமிழரசார் கருத்து

இப்போதைய எல்லையை விஸ்தரிப்பதற்கு ஆதரவாக பெரும்பாலோர் சாட்சிய...

## ...களிலும் ...துவம்

...மளித்தனர். எனினும் பழைய ...ர்களான ஜேக்கப்பும், ஜோனும் அதை எதிர்த்தனர். தமிழரசுக்கட்சியும் தமிழரசு வாலிப முன்னணியும் எல்லைகளை விஸ்தரிப்பதை விரும்பவில்லையெனினும் எல்லைகளை விஸ்தரிக்க முடிவு செய்தால் அதற்கு ஒரு வரையறை வேண்டுமெனவும் கருத்து வெளியிட்டனர்.

### துரையப்பாவின் இருமனம்

அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை, கொக்குவில் கிராமசபை நல்லூர் கிராமசபை, மானிப்பாய் கிராமசபையிலுள்ள ஆனைக்கோட்டை கிராமம், ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் எல்லைகள் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று கோரியது. மக்கள் முன்னேற்ற மன்றம் எவ்வித எல்லை விஸ்தரிப்புக்கும் ஆதரவு தெரிவிக்கவில்லை. திரு. டி. எஸ். துரைராஜா ஆதரிக்க, எஸ். சி. மகாதேவா எதிர்த்தார். அட்வகேட் நாகராஜாவும், ஏனைய சில மாநகர சபை உறுப்பினர்களும் ஆதரவு தந்தனர். திரு. அல்பிறட் துரையப்பா எழுத்து மூலம் ஆதரவு தெரிவித்தார். ஆனால் என்னைச் சந்தித்தபோது, நடைமுறைக்...

94,248 பேர் மக்கள் தொகையையும் கொண்டது. விஸ்தீரணத்தையும், மக்கள்தொகையையும் கொண்டு பார்க்கும்போது, யாழ். மாநகரசபையே இலங்கையின் இரண்டாவது பெரிய மாநகரசபையாகும். தமிழ் பேசும் மக்களின் பிரதான நகரம் என்ற முறையில் அது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### தமிழரசார் எதிர்த்த காரணம்

தற்போதைய மாநகரசபை எல்லையை விஸ்தரிப்பதற்கு தமிழரசுக் கட்சி எதிர்ப்பு தெரிவித்ததற்கு முக்கிய காரணம், யாழ். மாநகரசபையின் நிர்வாகம் வெற்றியடையவில்லையென்பதும், இந்த நிலையில், சுற்றியுள்ள கிராம பகுதிகளையும் அதனுடன் சேர்ப்பதால், அக்கிராமங்களுக்கு நன்மைக்கு பதில் இமையே ஏற்படும் என்பதே.

இதில் ஓரளவு உண்மையிருக்கத்தான் செய்கிறது. இப்போது நிலைமை சீர்திருந்தி வருகிறது என்பதும் உண்மைதான். மாநகர சபை எல்லை விஸ்தரிக்கப்படும்போது, அபிவிருத்தியடைந்த பகுதிகளே அதனுடன் சேர்த்துக் கொள்ளப்படும் எனபதும் கவனிக்கப்பட வேண்டும். இதன் பயனாக வருமானம் அதிகரிக்கும்.

அதனால் மாநகர எல்லைக்குள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் பகுதிகள் இப்போதைய வரி செலுத்தும் மக்களுக்கு ஒரு பாரமாக இருக்க மாட்டாது.

### ஆகக் குறைந்த விலை மதிப்பு விதம்

யாழ். மாநகர சபையும் எல்லை விஸ்தரிப்பை எப்போதும் ஆதரித்தே வந்திருக்கிறது. இந்நிலையில் இவ் விஷயம் பற்றி முறையான ஆலோசனை செய்யப்பட வேண்டியதவசியம். கிராம சபைப் பகுதியைச் சேர்ந்த மக்களின் வரி அதிகரிக்குமே என்ற பயமும், அரசியல் ரீதியாக சிலரது பயங்களும், இப்பிரச்சினையில் ஒரு முறையான முடிவெடுக்க முடியாமற் செய்துவிட்டன.

யாழ்ப்பாணத்து விலை மதிப்பு விதம், இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயே குறைவானது என்று கூறப்படுகிறது.

## புதிய மாநகரசபையின் சனத் தொகை 107,000 விஸ்தீரணம் 10 மைல்

...கஷ்டம் கருதி எல்லை விஸ்தரிப்பதைதாம் ஆதரிக்க முடியாது என கூறிவிட்டார்.

### டாக்டர் கருத்து

நல்லூர் பிரதிநிதி தமிழரசுக்கட்சியின் கருத்துக்களை எடுத்துக் கூறினார். கொக்குவில் கிராமசபை யாழ். மாநகர சபையுடன் இணைவதை விரும்பியது. நல்லூர் கிராமசபை அபிவிருத்தியடையாத மூன்றுபகுதிகளை மாநகரசபையுடன் சேர்த்துக் கொள்வதை மட்டும் விரும்பியது. நல்லூர் கி. ச. வின் இம்முடிவுக்கு காரணம் அரசியலே.

யாழ். மாநகரசபை ஏழே முக்கால் சதுரமைல் பரப்பும்

### நிதிப் பிரச்சினை

யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் சில யாழ். வாசிகளும், நிதிப் பிரச்சினை காரணமாக எல்லை விஸ்தரிப்பை எதிர்த்தனர் எல்லையை விஸ்தரிக்கும்போது புதிதாக மாநகர சபைக்குள் சேரும் பகுதிகளை ஒரு பாரமாக கருதக்கூடாது. சேர்த்துக் கொள்ளப்படும் பகுதிகளிடமிருந்தும் வருமானம் கிடைக்கும் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

நல்லூர் கிராமசபையின் 4, 5, 7, 8, 9ம் வட்டாரங்கள், கொக்குவில் கிராமசபையின் 15ம், 16ம் வட்டாரங்கள், கொக்குவில் கி. ச. வின் 1, 7,

# யாழ். மாநகரசபையுடன் சேரும் புதிய பகுதிகள்

8, 9ம் வட்டாரங்களிலிருந்து ஒவ்வொரு பகுதிகள், மாநகர சபை எல்லைக்குள் சேர்க்கப்படவேண்டுமென்று நான் சிபார்சு செய்கிறேன். இதன்படி, யாழ் மாநகர சபை, 10 சதுரமைல் பரப்பு கொண்டதாயும்107,000சனத்தொகை கொண்டும் விளங்கும்.

### தனித்து இயங்கும்

கொக்குவில்கிராமசபையும், நல்லூர் கிராம சபையும் இரண்டு தனித்தனி சபைகளாக தொடர்ந்து இயங்க வேண்டுமென்றும் நான் சிபார்சு செய்கிறேன். யாழ்ப்பாணம் பிரிவுக் காரியாதிகாரியும் உள்ளூராட்சி உதவிக் கமிஷனரும், இக்கிராம சங்கங்களின் ஒரு பகுதி மாநகர சபையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னும், இவை தனித்து இயங்கலாமென திருப்தி தெரிவித்துள்ளனர்,

### புதிய எல்லை

சிபார்சு செய்யப்பட்ட புதிய எல்லைகளின்படி யாழ் மாநகர சபை பின்வருமாறு விளங்கும்.

களின் துயரத்தைப் போக்குவதற்கு அவர்களுக்கென அவர்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ள இடங்களில் பிரத்தியேக வட்டாரங்களை ஏற்படுத்துதல் பற்றி வற்புறுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இதனால் நன்மையடையலாம். இந்தக் கருத்தை நான் முற்றும் ஆதரித்து அது நடைமுறையில் ஏற்படுவதை வரவேற்கிறேன்.

### கரையோர மக்களின் நிலை

கரையோர மக்களின் நிலையைப் பற்றி வேறு அடிப்படையில் கருத்துக்கள் ஏற்கப்பட்டன.

1962ல் யாழ்ப்பாண உப தேர்தல் அதிகாரியும் உத்தியோகத்தர்களும் கரையோர மக்களுக்கு மேலும் பிரதிநிதித்துவம் வேண்டும் எனக் கோரினர். பொதுவாக வே நகரசபை எல்லைக்குள் கரையோர மக்களின் நிலை சீர்திருந்தியதாக காணப்படவில்லை.

| | | |
|---|---|---|
| 4 | கொய்யாத்தோட்டம்— | 1669 |
| 5 | கொழும்புத்துறை— | 1595 |
| 6 | அரியாலை— | 3324 |
| 7 | நாயன்மார்கட்டு— | 2448 |
| 8 | நல்லூர்— | 2581 |
| 9 | கந்தர்மடம்— | 3213 |
| 10 | வண்ணார்பண்ணை— | 4509 |
| 11 | பழைய பள்ளிவாசல்— | 1842 |
| 12 | புதிய பள்ளிவாசல்— | 1903 |
| 13 | பெரியகடை— | 2486 |
| 14 | ஸ்டேசன்— | 4326 |
| 15 | கண்டிக்குளி— | 2366 |
| 16 | நவாந்துறை— | 1171 |
| 17 | பாஷையூர்— | 1116 |

### 1ம் வட்டாரம் கோட்டை

இந்த வட்டாரத்துடன் இணைந்திருந்த தாராக்குளம் பகுதியைச் சிறுபான்மைத் தமிழர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்டேசன் வட்டாரத்துடன் சேர்த்துள்ளேன்.

### 2ம்3ம் வட்டாரங்கள் சென் ஜேம்ஸ் கதிட்ரல்

இந்த வட்டாரத்தில் குருநகர் கரையோர மக்களும் கதிட்ரல் பகுதியிலுள்ள சிறுபான்மைத்தமிழரும் சேர்ந்து 8015 வாக்காளராவர் இந்தப் பகுதியை நான்கு வட்டாரங்களாகப் பிரிக்க வேண்டுமென ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதில் கரையோரப் பகுதி மக்களுக்கு இரண்டு வட்டாரங்களும் சிறுபான்மைத் தமிழருக்கு ஒரு வட்டாரமும் பொதுவாக ஒரு வட்டாரமும் அமைப்பதெனவும் ஏற்கப்பட்டது.

சிறுபான்மைத் தமிழருக்கென ஒதுக்கப்பட்டுள்ள எல்லைப் பகுதிகள் அவர்களின் பிரதிநிதிகளாகவுள்ள தமிழரசுக்கட்சி, சிறுபான்மைத் தமிழர் மகாசபை, மக்கள் முன்னேற்ற மன்றம் தனிப்பட்ட சிறுபான்மைத் தமிழர் தலைவர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கு இசைந்ததாகவே தீர்மானிக்கப்பட்டது.

இந்த புதிய வட்டாரத்தில் 70% சிறுபான்மைமக்களுள்ளனர். இந்த வட்டாரத்திற்கு பெத்தூஸ் வட்டாரம் எனப் பெயர் சூட்டப்பட வேண்டுமென வற்புறுத்தப்பட்டது. இந்த வட்டாரத்

(11-ம் பக்கம் பார்க்க)

## 17 வட்டாரங்கள் 25 ஆக அதிகரிக்கும்

வடக்கில், கோவில வளவு ஒழுங்கையும் ஆடியபாதம் ரோட்டும், கிழக்கும் மேற்கும் தற்போதைய மாநகர எல்லைகள். தெற்கு தற்போதைய மாநக எல்லையும் காகதீவு ரோட்டும், பிடாரி அம்மன் கோவில் ஒழுங்கையும் சந்திக்கும் கோவில் வளவு ஒழுங்கையும்.

எழுத்து மூலமாகவும், வாக்கு மூலமாகவும் கூறப்பட்டவைகளிலிருந்து ஒவ்வொரு வட்டாரமும் 2000 வாக்காளர்களை உடையதாக இருத்தல் வேண்டுமென்பது புலப்படுத்தப்பட்டது. இவ்வாறு வட்டார வாக்காளரின் பலத்தையொட்டிப் பார்த்தால் தற்போது 22 வட்டாரங்கள் தேவைப்படுகின்றன. சாட்சியமளித்தவர்கள் வலியுறுத்தியதெல்லாம்:

(அ) சிறுபான்மைத் தமிழர்களின் வேண்டுகோளை ஆராய்தல்.

(ஆ) கரையோர மக்களின் நிலையைக்கவனித்தல்.

(இ) வட்டாரங்களை விரிவு, படுத்தல் ஆகியனவாம்.

வட்டாரங்களை அமைப்பதில் சாதிவேறுபாடுகள் அடிப்படை ஏதுவாக இருக்கக் கூடாது என்பதை சாட்சியமளித்த அநேகர் வற்புறுத்தியதை நான் ஆதரிக்கிறேன்.

### சிறுபான்மைத் தமிழருக்கு நன்மை

ஆனால் சென்றகால துர்ப்பாக்கிய நிலைகளினால் சாதிபேதங்களினால்பின்தங்கிய மக்...

பல கோணங்களிலிருந்து கவனிக்கும்போது யாழ்ப்பாண நகரசபைக்குரிய எல்லைகள் 23 வட்டாரங்களாகப் பிரிக்கப்படவேண்டுமென எனக்குத் தோன்றுகிறது. இதுவே சகலருக்கும் சமசந்தர்ப்பத்தை அளிக்குமென நம்புகிறேன்.

### 25 வட்டாரங்கள்

நான் கூறியுள்ள வட்டார பிரிவுகளால் 4000 அதிகப்படியான வாக்காளர்களை அடையலாம். இதனால் புதிய வட்டாரங்களுடன் நகர சபைக்கென 25 வட்டாரங்களிருக்கும்.

தற்போதைய வட்டார நிலை

| | | |
|---|---|---|
| 1. | கோட்டை— | 1385 |
| 2 | சந். ஜேம்ஸ்— | 3889 |
| 3 | கதிட்ரல்— | 4126 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழைகள்

## தற்கொலை செய்துகொள்பவர்கள் எல்லாம் கோழைகள் என்றால் சமூகத்தில் நீதி நேர்மை, உண்மை ஆகியவற்றிற்கு திரையிட்டு வாழும் கோழைகள்...?

## இவ்வாரச் சிறுகதை

கே. எஸ். ஆனந்தன்

சிலர் அவளை நவீனநல்லதங்காள் என்று சொல்லிக் கொண்டனர். சிலர் அவளை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டித் தீர்த்தனர். அவை எதையும்பொருட்படுத்தும் நிலையில் அவள் இருக்கவில்லை.

ஊரே திரண்டுகூடிவிட்டது. நிமிடத்துக்கு நிமிடம் அயலூர்களிலிருந்தவர்கள் கூடக் கேள்வியுற்று வண்டிகளில் வந்து கொண்டிருந்தனர். இத்தனை பேரையும் பார்க்க அவள் கொடுத்து வைக்கவில்லை. அவள் வாழ்ந்த போது திரும்பிப் பார்க்காத சனங்களெல்லாம் தங்கள் அவசர சோலிகளையும் ஒத்திப் போட்டுவிட்டு ஓடோடியும் வந்து இராசாத்தியையும், பிள்ளைகளையும் பார்க்கத் துடித்தனர்.

பொலிஸ் மரியாதைகள், விதானை, உடையார், விசாரணை அதிகாரி உட்பட ஊரில் பெரிய பிரமுகர்கள் எல்லோரும் அங்கு கூடியிருந்தனர்.

இராசாத்தி பிறந்தபோது எப்படிப் பேசத் தெரியாதவளாக விருந்தாளோ அப்படியே வளர்ந்து பெரியவளான போதும் பேசாமடந்தையாக விருந்தாள். பேசத் தெரியாத அந்த ஜன்மத்தை நொண்டியாகவோ, குருடாகவோ அல்லது அசிங்கமாகவோ படைத்திருக்கப்படாதா இந்தக்கடவுள்! கொள்ளை அழகு. பெண்களே அவள் அழகைக் கண்டு பொறாமை கொள்ளும் அளவுக்கு அவளது அங்கலாவண்யங்களின் வளர்ச்சி அளவோடும், அழகோடும்விளங்கின. எந்தக்கோணத்தில்நின்று நோக்கினாலும் அவளது அழகுருவம் பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் பேரெழில் படைத்து துலங்கியது. பிறந்தது தான் பிறந்தாள் ஒரு பணக்கார வீட்டில் பிறந்திருக்கக் கூடாதா?

அழகுள்ள உடலையும், தன் உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளையும் வெளியிட முடியாதபடி வாயில்லாப்பூச்சியாக வறுமையின்கோரத்தாண்டவம்நிலவும் ஒரு குடும்பத்தில் மூத்த பெண்ணாகப் பிறந்து விட்டாள். பிறந்த போது அவள் பெற்றோருக்கு உள்ள மகிழ்ச்சியின் பிரவாகத்தில் தமது நிலைமைக்கு மேலான ஒரு பெயரை இராசாத்தி என்று சூட்டியும் விட்டனர்.

வாய் பேசாத் தன்மையாலோ என்னவோ அவள் உடலின் வனப்புச்சக்தி மேம்பட்டு மின்னியது. அவள் உடலைக் கண்டு பல்லிளித்து சொந்தங் கொண்டாட முயன்ற பலர் அவள் வாயில்லாப் பூச்சிஎன்று தெரிந்ததும் அடுத்தவார்த்தை பேசாமல ஓட்டமெடுத்தனர்.

படைத்தவன் படியளப்பான் என்பார்கள். மானுடங்களை ஆட்டுவிக்கும் ஒரு சூத்திரதாரியான ஓர் அருவசக்தி, மக்கள் நம்பிக்கையைப்பெற்ற சக்தி அந்த ஊமைக்கும் ஓர் துணையைக் கொடுக்காமல் விட்டு விடுமா என்ன?

காலத்தின் சுவடு அவள் கன்னித்தன்மைக்கு மெருகு பூசிக் கொண்டே வந்தது. ஞானியும் தன்னிலை இழந்து தவிக்கும் எழில் அவள் சொத்தாக விருந்தது. அவளது கொள்ளை அழகை கொஞ்சும் உரிமை ஒரு நொண்டிக்குக் கிடைத்தது.

துருவ வாழ்க்கை வாழும் இருவரை காலம் தன் கரங்களால் வாரி அணைத்து ஒன்று சேர்த்து உள்ளத்தால் ஒருவராக இணைந்து வாழும் உரிமையை ஏற்படுத்தி விடுகின்றது. இதற்குப் பெயர் சூட்ட ரீதியாகவும் சம்பிரதாயமாகவும் திருமணம் என்றால், அழகுப் பதுமையான ஊமையும், நொண்டி இராசையாவும் ஒன்று சேர்ந்ததும் திருமணம் தான்.

அந்தத் திருமணத்தரகனை முத்தையாவுக்கு நொண்டியும் இராசாத்தியின் தகப்பனும் சேர்ந்து கொடுத்த தொகை ரூபா நூறு என்றால் அந்தளவு கூட அவர்கள் திருமணத்துக்குச்செலவு செய்யப்படவில்லை. இராசையாவும் இராசாத்தியும் ஒன்றாக இருந்து உணவு உண்ணு முன்பு மஞ்சள் முடித்து ராசாத்தியின் கழுத்தில் கட்டினான் இராசையா. பொழுது சாயும் வேளையில் நடைபெற்ற இத்திருமண விபரம் மறுநாட் காலையிலே தான் அந்தப் பகுதிக்குப் பரவியது.

கல்யாணம் நடந்த தினத்தன்றே அந்தக் கலியாண மகிழ்ச்சியை அனுபவிக்க முடியாமல் தனியாய் கொதித்துக் கொண்டிருக்கும் உணர்வுகளோடு போராடிக் கொண்டிருந்தான் இராசையா. அத்தகையதோர் நிர்க்கதியான நிலைமை குறித்து இராசாத்தியும் வருந்துகிறாள் என்பதை உணர்ந்தவுடன் அவன் மீதிருந்த மோகம் பன்மடங்கு பெருகியது. அவள் உள்ளத்துள்ளே கனத்து நிற்கும் ஆழமான சிந்தனையும் — மனப் போராட்டமும் வானத்தில் மழையிருள் அடிக்கடி மாறியோடுவது போன்று பல்வேறு விதமாக மாறுபடும் தன்மையை அவன் அழகு முகத்தில் பார்த்தபோது திருமணமானமுதலிரவென்றாலும் இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டு இரண்டு மூன்று நாட்கள் அவர்கள் விலகியே இருந்தனர்.

திருமணம் முடிந்த நாலாம் நாள். முழுகி விட்டு அள்ளிச் செருகிய கொண்டையுடன், தன்னிலை மறந்த இன்ப நினைவுகளுடன் திண்ணையில் தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் கணவனைப் பார்த்தாள் இராசாத்தி. முழுகி விட்டு வந்ததால் சங்கு போல் பளபளக்கும் அழகான கழுத்தை ஆசையோடு தடவி விட்டான் இராசையா.

மழைச் சாரலினால் ஏற்படும் கிளுகிளுப்பு அவள் உள்ளத்தில சொல்ல வொண்ணாத சுகந்த நிலையை ஏற்படுத்தியது. மேனி அனலாகக் கனன்றது. ஆனந்த பரவசத்திலாழ்ந்துவிட்ட அவள் உள்ளத்தில் வீசிய இன்பச் சாரல் உடலின் சாளரமான விழியின் கடையில் துளிர்த்து பனித்து நின்றன.

அவள் மௌனமே உருவாக பனியில் நனைந்த தந்தச் சிலை போல நிற்பதைப்பார்த்த இராசையா அவள் முகத்தில் துள்ளும் இன்ப அலைகளை என்னவென்றுஎண்ணினானோ? அவள் மேனியில் தவளும் தன் கரத்தை வெறித்து நோக்கினான். வறுமையில் உழன்றவளானாலும் மதத்து வளர்ந்த பயிர் போல செழுமைநிறைந்த அவள் உடலுடன் அவன் கரத்தை ஒப்பிட்டால்...... பளிங்குக்கும் — இரும்புக்கும் எத்தனை வித்தியாசமோ, அப்படித்தானிருந்தது. திடீரெனக் கையை எடுத்து விட்டு 'இராசாத்தி' என்றான்.

சொர்க்கத்தில் இருப்பவனைப் பூலோகத்திலிருந்து யாராவது அழைத்தால் எப்படியிருக்குமோ அது போலிருந்தது இராசாத்திக்கு. பேச முடிந்தவர்களே பேச முடியாது தவிக்கும் நிலையில் அவள் இருந்த போது பேசாமடந்தையான அவளால் என்ன சொல்ல முடியும். உள்ளத்துள் போராடும் உணர்வுகளோடு அவன் கரத்தைப் பற்றினாள்.

'இராசாத்தி...' நடுங்கும் குரலுடன் அழைத்தான் இராசையா. உறுதியான வலுவடைந்த அவன் கரம்கூட அவளது மென்மையான ஸ்பரிசத்தால் வெட வெட என நடுங்கியது.

குடிசையின் தட்டிக் கதவை அவள் விழிகள் நோக்கின. புரிந்து கொண்டான் இராசையா. அணை போட்டு வைத்திருந்த ஆவல்கள், கற்பனைகள் உடைசல் கண்டு அக்கணமே பிரளயம் போல அவன் உள்ளத்தில் ஓர் பூகம்பமே நடந்துவிட்டது.

பட்டப்பகல். வெளியே சென்றுவிட்ட அவள் பெற்றோர்கள் வந்துவிட்டால் என்ற நினைவு ஏற்பட்ட போது "இராசாத்தி", ஆக்கப் பொறுத்தவள் ஆறப்பொறுக்கக்கூடாதா? உன் ஆத்தையும் அப்பனும் வாற நேரம். உன் உடன் பிறப்புக்கள் கோடிப் பக்கமாக விளையாடுதுகள். வந்து........" என்று இழுத்தான்.

ஆழமான பெண்மையின் உணர்வுகள் கிளர்ந்து பொங்க ஆரம்பித்துவிட்டால் பின் விளைவுகளைப் பொறுத்துத்தான் அது தன்னிலை அடையும். அதுவரை அது அடங்குதல் எளிது அல்ல என்பது ஒரு அனுபவ ரீதியான கண்டு பிடிப்பு. அது மனிதவர்க்கம் மட்டுமல்ல ஜீவ உருவெடுத்த எதற்கும்ஓர் இயற்கைநியதியாயிருக்கையில் குடிசையில் பிறந்துவிட்டதற்காக இராசாத்திக்கு இல்லாமல் போய் விடுமா? தவிர ஊமைப்பெண்ணை அவளுக்கு அப்போது எது சொன்னாலும் கேட்டிருக்க மாட்டாள். அவன் கரங்களை இறுக்கமாக அழுத்தி இழுத்தாள்.

அடுத்த கணம் குடிசையின் கதவு திறந்து மூடப்பட்டது. சிருஷ்டிகர்த்தாவின் ஜீவப் படைப்பில் மானுடங்களுக் [illegible] [illegible] அவர்கள் [illegible] சத்தின் கருப்பொருட்களாக சிருஷ்டி காரணிகளாக விளங்கும்போது செயல் முறை நிகழ்ச்சிகளில் குறையின்றி மற்றும் மானுடங்களைப் போன்றே நிறைவுப் பாதையை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர். வெளியே பேச்சுக் குரல்கள்—காலரவங்கள். அவை குடிசையின் வாசலை நோக்கி வரும் ஒலி. அவர்களது களிப்புப் பயணத்தின் இடையில் அமங்கலமான ஒரு தடை. இராசாத்தியின் உள்ளம் குமுறியது.

காலத்தின் சுவடுகள் துரிதகதியில் இயங்கிக்கொண்டிருந்தன. இராசாத்தியின் பெற்றோர் காலமாகி விட்டதுடன் அவளுக்குப் பிந்திய இருவரும் எங்கெங்கோ சென்றுவிட்டிருந்தனர்.

இத்தனை கொடுமைகளும் போதாதென்று அவளும், கணவனும் தமது தாம்பத்திய வாழ்க்கை வயலில் விதைத்த அறுவடையாக இரண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்தனர்.

பட்டகாலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது போல அவள் கணவன் நொண்டி இராசையா நோய்வாய்ப்பட்டு இறந்து போனான். காலம் ஊமைப் பெண்ணை இராசாத்தியை நிர்க்கதியாக இரு குழந்தைகளுடன் கலங்கிக் கொண்டிருந்தது.

வேலைக்குத் திரிந்தாள். வேலை கிடைக்கவில்லை. எங்காவது கிடைக்கும் அற்ப பிழைப்பினால் வரும் வருவாயைக் கொண்டு மூன்று வயிற்றை நிரப்ப வேண்டியவளானாள். பேசக் கூடியவர்களே கோழைகளாக வாழ்க்கையில் பேசமுடியாத அவள்...?

அவளுடைய உடற்கட்டு தளர்ச்சியடைந்திருந்தாலும் கண்ணுக்குக் கவர்ச்சியான தோற்றம் காண்பவர்கள் தீய நோக்கிற்குவழிவகுத்தது. அத்துடன் கட்டுக்காவல் இல்லாத பெண். கேட்பதற்கு யாருமற்றவள். வாய் பேச முடியாத மனிதப் பிண்டம்.

(2)

அவள் குடியிருந்த குடிசைக்குச் சற்றுத் தள்ளி ஒரு வயிரவர் கோவில். வருடத்துக்கொருமுறை வாயற்ற ஜீவன்களைக் கொண்டு வந்து ஆண்டவன் பெயரால் பலியிடும் கொலைக் களமாக விளங்கிய அந்த இடத்துக்கு கோயில் என்ற பெயரை நிலைநாட்ட ஒரு சூலாயுதம். அதற்குப் பூசை கூட வருடத்தில் ஒரு முறை. அதற்கென ஒரு பண்டாரம். அந்த ஆசாடபூதி வருடமடைக்கு வரும்போது அந்தப் பேதை ஊமையைப் பார்த்து பல்லிளிப்பான். அவளும் ஓர் வாயில்லா ஜீவன் தானே? அவள் பெண்மையைப் பலி கொள்ள அவன் வருடக்கணக்காகத் துடித்துவந்தான்.

தெய்வம் விரும்பாத பலியை மனிதக்கோழைகள் அதற்குக் கொடுத்து நிறைவேற்றுகின்றார்கள். அதே போன்று இராசாத்தி விரும்பாத போதும் அவளைப் பலிகொள்ளக் காத்து நின்றான் பண்டாரம்.

இராசாத்தியின் கணவன் இறந்து மூன்று மாதத்திற்கு பின்பு அந்தக்கோவிலின்வருடமடை வந்தது. அன்று கோவிலுக்கு இராசாத்திவராத காரணத்தை அறிந்து கொண்டான் ஆசாடபூதியான பண்டாரம்.

அந்த வருடத்திய வருடமடை முடிந்து விட்டது. அவன் உள்ளத்தில் கொந்தளிக்கும் எண்ணப்பேரலைகளுடன் இராசாத்தியின் வீட்டை அடைந்தான். படையலுக்குக் கிடைத்த பண்டங்களை அந்த ஏழைப் பிள்ளைகளுக்கு வழங்கினான். கோயில் பண்டாரமாச்சே! பயபக்தியுடன் பணிவுடன் நடந்து கொண்டாள் இராசாத்தி.

(3)

நடு இரவு. மதுவையும் இறைச்சியையும் உண்ட களிப்பில் ஊரே உறங்கிக்கிடந்தது. பண்டாரத்தின் மனம் பரவச நிலை காணத்துடித்தது. இராசாத்தியின் குடிசைக்கு விரைந்தான். அங்கே இரவின் போர்வையில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் இராசாத்தி.

வெறிகொண்ட மிருகம் வசமாக அவள் மீது பாய்ந்து விட்டது. கத்தவோ முடியாத நிலையில் அவன் வெறிக்கு ஆதரவற்ற பெண்மை பலியிடப்பட்டு விட்டது. தடுமாறி எழுந்த இராசாத்தி அந்தப் புண்ணியவாளனைப் பார்ப்பதற்காக அவன் கால்களைக் கட்டிப்பிடித்துக்கொண்டாள். அவன் திமிறிப் பறிக்க முயன்றான். மறுகணம் தடுக்கி விழுந்தவன் பேச்சு மூச்சின்றித் துடிப்பதை உணர்ந்து கொண்டாள். உடனே எழுந்து தகர விளக்கைப் பற்ற வைத்துப் பார்த்தாள். அங்கே......

வயிரவர் கோவில் பண்டாரம் குருதி கொப்பளிக்கப் பிணமாகக் கிடப்பதைக் கண்டாள். விளக்கை ஏந்தி நின்ற விரல்கள் பதறின. செய்வதறியாது திகைத்து விட்டாள்.

வாயில்லா ஜீவன்களைப் பலியிடும் கோயிலின் பூசகரான பண்டாரத்தை இராசாத்தி வீட்டில் வைத்திருந்த அரிவாள் பலி கொண்டு விட்டது. திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்பார்கள். அந்தத் தெய்வம் அரிவாள் உருவில் கிடப்பதை அறியாத பண்டாரம் அவள் பிடியினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளத் திமிறியபோது, தடுமாறி அரிவாளின் மேல் விழுந்து விட்டான்.

அவள் வாழ்க்கை என்ற பந்தலில்புகுந்த அன்றே இயற்கை சதி செய்தது. அது முடிந்து முதலின்பம் பெற விழைந்த போதும் அமங்கலமான தடை. தொடர்ந்து வாழ்க்கையில் ஏற்பட்ட புயல் தன் வாழ்வையே முடித்துக் கொள்ளும் அளவுக்கு வந்து விட்டதை எண்ணிக்கலங்கினாள்.

அவளோ ஊமை. கோழை உள்ளம் படைத்தவர்கள் நிறைவேற முடியாத ஆசைகளோடு மடிந்து விடுகின்றனர். ஆனால் ஊமையாய்ப் பிறந்தாலும் அழகுடன் இருந்தாள்!

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ட்டின் கமிஷன் அறிக்கை

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தில் 1849 வாக்காளர் உள்ளனர்.

கரையோர வட்டாரங்கள் கரையோர மக்களின் விருப்பத்திற்கிணைய யவே ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய வகையில் குருநகர் கிழக்கு வட்டாரம் குருநகர் மேற்கு வட்டாரம் என இரு புதிய வட்டாரங்களைச் சிபார்சு செய்துள்ளேன். குருநகர் கிழக்கில் 1841 வாக்காளர்களும் குருநகர் மேற்கில் 1900 வாக்காளருமிருப்பர். நாலாவது வட்டாரமாகக் கருதப்படுவது கதீட்ரல் வட்டாரமாகவே இருக்கும். இதன் வாக்காளர் தொகை 2309. ஆகஇருக்கும்.

## வட்டாரம் 4. கொய்யாத் தோட்டம்

பாஷையூர் வட்டாரத்தை விரிவுபடுத்தி வடக்கு, வடமேற்குப் பகுதியிலுள்ள வாக்காளர்களை உள்ளடக்கியதாக இந்த பாஷையூர் வட்டாரம் இருக்கும். இதில் 1457 வாக்காளர் இடம் பெறுவர்.

கொய்யாத் தோட்ட வட்டாரத்தை வடக்கு — வடமேற்கில் விஸ்தரித்து வாக்காளர் தொகையை 1871 ஆகப்

# புதிய வட்டார அமைப்பில் செய்யப்பட்ட மாற்றங்கள்

பெருக்கியுள்ளேன். இந்த வட்டாரம் தற்போதுள்ளதைப் போன்றே இயங்கும்.

## 5ம் வட்டாரம் கொழும்புத் துறை

கரையோர மக்களின் நலனை முன்னிட்டு அபிவிருத்தியடையாத பகுதிகளை அரியாலை வட்டாரங்களுடன் இணைத்துள்ளேன். இதில் வாக்காளர் தொகை 1411 ஆகவிருக்கும்.

## வட்டாரம் 6,7,8. அரியாலை, நாயன் மார்கட்டு, நல்லூர்

அரியாலை வட்டாரத்தின் வாக்காளர் தொகை 3324. நாயன் மார்கட்டு வட்டாரம், 2446. நல்லூர் வட்டாரம் 2561.

அரியாலை, நாயன்மார்கட்டு ஆகிய பகுதிகளில் வாழும் பின்தங்கிய மக்களுக்கு பிரதிநிதித்துவமளிக்கக் கூடிய முறையில் ஒரு வட்டாரம் அமைக்க முடியுமா என்று ஆராயும்படி என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இந்த இரு வட்டாரங்களிலும் வசிக்கும் குறித்த வகுப்பு மக்களுக்கென்று தனி வட்டாரம் அமைக்க முயன்றால் அது நாயன்மார்கட்டு வட்டாரத்தைப்பாதிக்கும். நாயன்மார்கட்டு வட்டாரம்மாற்றமடைவதால் பாரதூரமான நிலைமை ஏற்படாதென்றும் பின் தங்கிய சிறுபான்மைத் தமிழருக்கு உதவி செய்வதே பிரதானமானதென்றும் வற்புறுத்தப்பட்டது.

குறித்த வகுப்பு தனி வட்டாரமமைக்குமளவுக்கு எண்ணிக்கை பலம் பொருந்தியதல்ல வென்றாலும், தேர்தலில்அவ்வகுப்புகளது செல்வாக்கைகாட்டுமளவுக்கு ஒரு வட்டாரத்தை ஏற்படுத்தமுடியும். அதன் பிரகாரம், கலைமகள் வட்டாரம் என்று தனியொரு வட்டாரத்தையுண்டாக்கியுள்ளேன். இந்த வகுப்பு, கலைமகள் வட்டாரத்தைக் கைப்பற்றக்கூடிய ஒரு வாய்ப்புண்டு.

அரியாலை கிழக்கு, அரியாலை மேற்கு என்று இரு வட்டாரங்களையும் நான் ஏற்படுத்தியுள்ளேன். வாக்குப்பலம் இதற்கு போதுமானதாக இருந்தது.

எஞ்சியுள்ள பகுதியில் மேலும் இரு வட்டாரங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை நல்லூர்வட்டாரமும் கைலாசபிள்ளையார் வட்டாரமும். நாயன்மார்கட்டு வட்டாரத்தைச்சேர்ந்த பெரும்பாலான வாக்காளர்கள்புதியநல்லூர்த் தொகுதியில் சேர்க்கப்படுவார்கள். அவர்களுக்கு இவ்வட்டாரத்தேர்தலின் போது நல்ல பிடி இருக்கும்.

## வட்டாரம் :— கந்தர் மடம்

இவ் வட்டாரத்தின் வாக்காளர் தொகையைப் பொறுத்து அதன் எல்லைகளை மாற்றியுள்ளேன். இப்பிரச்சினையில் அப்போதைய உறுப்பினரின் ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டேன்.

வாக்காளர் தொகையைப் பார்க்கும்போது இவ் வட்டாரத்தை இரண்டு வட்டாரங்களாகப் பிரிப்பது நீதியானது. வண்ணார்பண்ணை கிழக்கு, வண்ணார்பண்ணை மேற்கு என்று இருபகுதிகளாக பிரித்துள்ளோம்.

## 11ம்,12ம் வட்டாரங்கள்

இந்த வட்டாரங்களில் பெரிய மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை. பறைச்சேரியின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டுள்ளதுடன் நாவாந்துறை வட்டாரத்தைச் சேர்ந்த சிறுதொகை வாக்காளர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பழைய பள்ளிவாசல் வட்டாரத்திலிருந்து முஸ்லிம் அல்லாத வாக்காளர்கள் பிரித்தெடுக்கப்பட்டு, வண்ணார் பண்ணையுடன் சேர்க்கப்பட வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் இப்படியொரு வேண்டுகோள் பழைய பள்ளி வாசல் வட்டாரத்து மக்களிடமிருந்தோ வண்ணார்பண்ணை வட்டார மக்களிடமிருந்தோ விடுக்கப்படவில்லை. இவ் வட்டாரத்திலிருந்து முஸ்லிம் அல்லாத வாக்காளர்களை பிரித்தெடுப்பதால், இவ்வட்டாரத்தின்வாக்குப்பலம் இன்னும் பலவீனப்படும். ஏதாவது உண்மையான பலாபலனின்றி நான் இதை செய்ய விரும்பவில்லை. வாக்காளர்களைமாற்றுவதால் ஏதாவது விசேட நன்மை கிடைக்குமென்று நான் கருதவில்லை.

## 13ம் வட்டாரம் பெரியகடை

இவ்வட்டாரத்தின் தென் பகுதியை நீக்கி விட்டதுடன், இவ்வட்டாரத்தின் வாக்காளர்தொகை சிராகியது. நீக்கப்பட்ட தென்பகுதி கோட்டை வட்டாரத்துடன் இணைக்கப்பட்டது.

## 14ம் வட்டாரம் ஸ்டேசன்

இவ்வட்டாரத்தின் இப்போதைய வாக்காளர் தொகையைக் கொண்டு

# முஸ்லிம் வட்டாரங்களில் மாறுதல் கிடையாது

யில், இவ்வட்டாரம், இரண்டாகப் பிரிப்பதற்கு ஏற்றது. இவ்வட்டாரங்களில் ஒன்று, சிறுபான்மைத் தமிழர்களின் குரலுக்கு மதிப்பளிக்கக் கூடிய முறையில் உருவாக்கப்பட வேண்டும் என்று பலமாக வற்புறுத்தப்பட்டது. இப்பகுதியில் சிறுபான்மைத் தமிழர்கள் அக்கறை செலுத்துவது நீதியானதே. புதிய ஸ்டேசன் வட்டாரம் அவர்களின் கோரிக்கை வெற்றிபெற வழி வகுக்கும். இவ்வட்டாரத்துடன் தாராகுளம் பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

## 15-ம் வட்டாரம் சுண்டிக்குளி

இவ்வட்டார அமைப்பில் மாற்றம் செய்யக் கூடாதென்று வற்புறுத்தப்பட்டது. எனினும், கொய்யாத்தோட்டம் அரியாலை கிழக்கு ஆகிய வட்டாரங்களின் வாக்காளர் தொகையைப் பலப்படுத்துவதற்காக இவ்வட்டாரத்திலிருந்து சிறு பகுதி எடுக்கப்பட்டு விட்டது. இதை இவ்வட்டார உறுப்பினர் ஆட்சேபித்ததாக தெரியவில்லை. இவ்வட்டாரத்தின் இப்போதைய அமைப்பே தொடர்ந்து இருந்துவரும்;

## 16-ம், 17-ம் வட்டாரங்கள் பாஷையூர், நாவாந்துறை

நாவாந்துறை வட்டாரம் ஆக 1166 வாக்காளர்களுடன் 1063-ம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகும். 1963-ம் ஆண்டுக்கு முன்பு நாவாந்துறை முஸ்லிம் பெரும்பான்மையாகவுள்ள 11-ம் 12-ம் வட்டாரங்களுடன் சேர்ந்திருந்தது.

முஸ்லிம் உறுப்பினர்கள் தனியான வட்டாரம் உருவாக்க வேண்டுமென்று அவர்களாகவே விரும்பினார்கள். போதுமான வாக்காளர் தொகையில்லாததால், இவ்வட்டாரத்தைத் தொடர்ந்து வைத்திருக்க நான் விரும்பவில்லை. எனினும், இவ்வட்டாரம் தொடர்ந்தியங்க வேண்டும் என்ற கோரிக்கை பலமாக இருந்தது. இது ஒரு பின்தங்கிய கரையோரப் பகுதி. இதனால், இவ்வட்டாரம் எனது ஆழ்ந்த ஆலோசனைக்கு எடுக்கப்பட்டது. இவ்வட்டாரம் தொடர்ந்தும் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தேன்.

இத்துடன், வண்ணார் பண்ணை வடக்கு, திருநெல்வேலி ஆகிய புதிய இரு வட்டாரங்களையும் நான் ஏற்படுத்தச் சிபார்சு செய்கிறேன்;

## சிபார்சு செய்யப்பட்ட புதியவட்டாரங்களும் வாக்காளர் தொகையும் வருமாறு:—

1. கோட்டை — 1937
2. குருநகர்மேற்கு—1900
3. குருநகர் கிழக்கு—1841
4. கதீட்ரல் — 2309
5. மத்தியூஸ் — 1849
6. கொய்யாத்தோட்டம்-1871
7. பாஷையூர் — 1457
8. [illegible] —1411
9. அரியாலை கிழக்கு—1890
10. அரியாலை மேற்கு—1833
11. கலைமகள் — 1506
12. நல்லூர் — 2386
13. சுண்டிக்குளி — 2194
14. ஸ்டேசன் — 2184
15. கைலாசபிள்ளையார்-2408
16. கந்தர் மடம் — 2418
17. பெரிய கடை — 2011
19. புதிய பள்ளி — 1802
20. நாவாந்துறை— 1406
21. பழைய பள்ளி — 1842
22. வண்ணார்பண்ணை மேற்கு—2064
23. வண்ணார் பண்ணை கிழக்கு — 2100
24. வண்ணார் பண்ணை வடக்கு — 2168
25. திருநெல்வேலி—1931

புதிய வட்டாரப் பிரிவின்படி எல்லா வட்டாரங்களும ஏறத்தாழ சம [illegible] வாக்காளர் தொகையையும், சம அளவு பரப்பளவையும் கொண்டுள்ளன.

## பொழிப்பு

பின்வரும் இடங்கள்வரையாழ், மாநகரசபை எல்லை விஸ்தரிப்புக்குள் இடம்பெறுகின்றன.

(1) ஆடியபாதம் வீதிக்கு தெற்கிலிருக்கும் நல்லூர், கொக்குவில் கிராமசங்கப் பகுதிகள்.

(2) கொக்குவில் கிராமசபையின் 16ம் வட்டாரம்.

(3) மாநகரசபையின் தற்போதைய எல்லைக்கு மேற்குப் புறமாக இருக்கும் பறைச்சேரி வயல்கள்.

மாநகரசபையின் வட்டாரங்கள் 17லிருந்து 23 ஆக அதிகரிக்கப்படுகின்றன.

விஸ்தரிக்கப்பட்ட எல்லைகளுக்கு பிரதிநிதித்துவப்படுத்தும்வகையில், இரு வட்டாரங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன;

புதிய மாநகரசபைக்கு 25வட்டாரங்கள் இருக்கும்.

பாரபட்சமான முறையில் எந்த வித மாறுதல்களுக்கும் சிபார்சு செய்யப்படவில்லை. உண்மையில் நியாயமான தேவையோ, அன்றி போதுமான கோரிக்கைகளோ இருந்தாலன்றி புதிய மாற்றம் எதுவுக்கும் சிபார்சு செய்யப்படவில்லை. முடிந்த இடங்களில் வட்டாரங்கள் இப்போதிருந்துவரும் நிலையை ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

தனிப்பட்ட முக்கிய பிரமுகர்கள் கூறுகிறார்கள் என்பதற்காக அவர்கள் கூறும் ஆலோசனைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

எனது சில தீர்மானங்களும், முடிவுகளும் அவர்களின் கருத்துடன் ஒத்துவர முடியாதிருக்கலாம். எனது முடிவுகளை அவர்கள் நேர்மையுடன் ஆலோசிப்பார்கள் என்று நம்புகிறேன்.

விஷயமறிந்த எந்த வட்டாரங்களிலிருந்தும் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ள நான் பின் நிற்கவில்லை. என்னிடம் சாட்சியமளிக்க முன் வந்த எவரிடமும் சாட்சியம் கேட்பதற்கும் நான்பின் வாங்கவில்லை.

எந்தவொரு சமபிரதிநிதித்துவத் திட்டத்தின் கீழும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு விசேட அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டுமென்பதையும் நான் மறக்கவில்லை;

எந்த விதமாகவும் எவரும் ஒதுக்கப்படுவதை தவிர்த்து, ஐக்கியத்தை ஏற்படுத்தும் சமபிரதிநிதித்துவ முறையே சிறந்தது என்று உணர்ந்திருந்தேன்.

ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிக அக்கறையுள்ள எந்த ஒரு வகுப்பு மக்களும் தேவையற்று பல்வேறு வட்டாரங்களிலும் பிரிக்கப்படவில்லையென்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.


**இதோ ஒரு தலைசிறந்த வாய்ப்பு!**

சு ★ நியாயமான கட்டணத்தில்...
த ★ குறித்த நேரத்தில்...
ந் ★ கவர்ச்சியான அமைப்பில்...
தி ★ திறமையான வேலைப்பாட்டுடன்...
ர ★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து
ன் கொடுப்போம்.

**அச்சகம்**

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்தீரியா நோய் ஏன் பரவுகிறது?

**பேராசிரியர் அ.கி.ரா. பெசன்ட்,**
எம். ஏ. (தத்துவம்) எம் .ஏ. (உளவியல்)

படித்தவராலும் பாமரராலும் மிகத் தவருகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ள ஓர் உளநோய் இஸ்தீரியாவாகும். ஒரு மனிதர் சித்தம் கலங்கி நிலை தடுமாறி நிற்கும் போது அவருக்கு இஸ்தீரியா பிடித்திருக்கிறது. எனக் கூறத் தலைப்படுகிறோம் குறிப்பாக, பித்தராகி நிற்கும் பெண்கள் அனைவரும் இஸ்தீரியா நோயாளிகள் எனக் கருதப்படுவதையும் காண்கிறோம். மேலும் இஸ்தீரியாவின் தன்மையை ஓரளவு புரிந்து கொண்டுள்ளவர்களும், அந்நோயின் அறிகுறிகளைப் புரிந்துகொள்ள முடியாது குழம்புகின்றனர்.

உளநோய்கள் (Mental diseases) இரு வகைப்படும். கடுமையானதும், மிக அபாயகரமானதுமான உளநோய்களை உளப்பிணிகள் (psychoses) என்பர். மிதமான உளநோய்களை உள வழி நரம்பு நோய்கள் (psychoneuroses) எனலாம். இவற்றைச் சுருக்கமாக நரம்பு நோய்கள் (neuroses) என்பதுமுண்டு. நரம்பு நோய்கள் பலவகைப்படும். அவற்றுள் இஸ்திரியா என்பதுவும் ஒன்ருகும்.

### மிகப் பழைய நோய்

இஸ்தீரியா என்னும் நரம்பு நோய் பழங்காலம் தொட்டே இருந்து வந்துள்ளது என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. இஸ்தீரியா என்னும் சொல் கருப்பை(uterus) எனப்பொருள் தரும் கிரேக்க சொல்லினின்றும் பிறந்ததாகும். இந் நோய் பெண்களுக்கே தோன்றும் நோய் எனவும், கருப்பை உடலில் மேவி நிற்பதால்இந் நோய் தோன்றுகிறது எனவும் அவர்கள் நம்பினர். ஆனல் அண்மைக் காலத்தில் பல உளவியல் அறிஞர்கள் இக்கருத்துத் தவறென நிரூபித்துள்ளனர்.

### 75 சதவீதம் பெண்களுக்கே

மேலும், ஆண்களுக்கும் இந் நோய் வருகிறது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்நோய் கொள்வோரில் 75 சதத்தினர் பெண்களே. மேலும் கலவியின் போது முழுமன நிறைவு பெருதிருப்பவருக்கு இந்நோய்தோன்றுகிறது எனக் கூற முற்படும் சில அறிஞர்களுமுண்டு.

### காரணிகள்

வாழ்வில் பெரும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. அவற்றைச் சமாளிக்கும் ஓர் உபாயமே இஸ்தீரியா என்னும் உள நோய் எனப் பெருவாரியான உளவியல் அறிஞர்கள் இன்று நம்புகின்றனர். காதலில் தோல்வி, தொழிலில்மனமுறிவு, செல்வம், பதவி, செல்வாக்கு என்பனவற்றை இழத்தல் என்பன இந்நோயைத் தூண்டும் காரணிகளாக அமைகின்றன.

இந்நோயின் அறிகுறிகள் மலைப்பூட்டுவனவாக அமைகின்றன என முன்னரே கூறினோம். இந்நோயின் அறிகுறிகளை உடல் அறிகுறிகள், உள அறிகுறிகள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

### இந்நோயின் சிறப்பு இயல்பு

உடல் உறுப்புகள் நல்ல நிலையிலிருந்தும் கூட, அவற்றை இயக்க முடியாது இருப்பது இந் நோயில் காணும் ஒரு சிறப்பியல்பு ஆகும். இந்நோயில் "எண்ணங்கள் உடலைக் கட்டுப்படுத்தி, உடலின் இயக்கங்களைச் சீர்கேடடையச் செய்கின்றன" என பி. ஜே. மோபியஸ் என்னும் அறிஞர் கூறியுள்ளார். இந் நிலையில் கண் நல்ல நிலையில் உள்ளபோது நோயாளி குருடராவதும், செவிகளில் கோளாறு எதுவும் இல்லாத போது நோயாளி செவிடராவதும் காணப்பட்டுள்ளது.

அதுபோல் உடற்குறை எதுவுமின்றியே தோல் உணர்விழத்தல் கைகால்கள் செயலற்றுப் போதல், குரல் இழப்பு, உடல் நடுக்கம் என்பன தோன்றுகின்றன. சுருங்கக் கூறின் மூளையின் அடிப்புறம், தண்டுவடம் (spinal cord) என்பனவற்ருல் கட்டுப் படுத்தப்படும் உடல் உறுப்புகளின் செயல்கள் இந்நோயின் போது பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

உடற்பகுதிகள் தமது செயல் திறனை இழந்து விடுதல் நிரந்தரமாக ஏற்பட்டு விடுவதில்லை வாழ்க்கைச் சிக்கல்களினின்று தப்பும் ஓர் உபாயமாகவே இந் நோய் தோன்றுகிறது எனக் கண்டோம். வாழ்க்கைச் சிக்கல்கள் எழும் நிலையில் இச் செயல் திறன் இழப்பு நேருகிறது. அச் சூழ்நிலை மாறும் போது நோயாளி மீண்டும் தனது உடலின் செயல் திறனைப் பெற்று விடுகிருர். இவ்வாறு உள்ளப் போராட்டங்களின் ஓர் எதிரொலியாகவே இந்நோயின் உடலின் செயல். திறன் இழப்பு நேருகிறது.

### உள்ளத்தில் ஏற்படும் போராட்டங்கள் உடலைப் பாதிக்கும்

உள்ளத்தில் ஏற்படும் போராட்டங்கள் உடலைப் பாதிக்குமோ? ஆம் என உளவியல் அறிஞர்கள் நிரூபித்துள்ள

## காதிருந்தும் கேட்காது கண்ணிருந்தும் பார்க்காது

னர். இதுபோன்ற ஒரு சிறு கட்டுரையில் இதை விவரமாக எடுத்துக் கூற இயலாது ஆயினும் ஒரு சிறு ஆதாரம் காட்டி இதனைப் புரிய வைக்க முயலுகிறோம்.

நீங்கள் மிகவும் பசியாக இருக்கும் வேளையில் ஒருவர் உங்களிடமிருந்து ஓர் உதவி நாடி வந்து தொல்லைசெய்கிருர் என்போம். உங்களுக்குச் சினம் எழுவது இயல்புதானே? நன்ருக உணவருந்திபசியின்றி இருக்கும்வேளையில் அம்மனிதர் வந்தால் அவரை இன்முகத்தோடு வரவேற்று உதவி செய்கிறீர்கள். இங்கு பசியென்னும் உடல் கிளர்ச்சி சினம் என்னும் உள்ளக்கிளர்ச்சியைத் தோற்றுவிக்கிறது. உங்கள் முயற்சி ஒன்றில் தோல்வியுற்று மனம் நொந்து போயிருக்கும் வேளையில் உங்கள் உடலும் சோர்ந்து காணப்படுவதில்லையா? இவ்வாறு உடல், உள்ளம் என்பன இணைந்து செயலுறுகின்றன. ஒன்று மற்றொன்றின் இயக்கத்தை எளிதில் பாதிக்கிறது; இதன் காரணமாகத்தான் இஸ்தீரியா நோயில் உடற்காரணிகள் உடற்கோளாறுகளைத் தோற்றுவிக்கின்றன.

### விநோத அறிகுறிகள்

இஸ்தீரியா நோயில் காணப்படும் உள அறிகுறிகளும் விநோதமானவையாகவே காணப்படுகின்றன. இஸ்தீரியா நோய் கொண்ட மனிதர்கள் தம் பழைய நினைவுகளை மறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். தாம் யார் என்பதையும் தமது சுற்றத்தினர் நண்பர் யார் என்பதினையும், தமது பழங்கால வாழ்வையும்கூட இந்நோயாளிகள் மறந்து விடுதல் உண்டு. ஆயினும் இவர்கள் எல்லா நினைவுகளையும் அறவே இழந்து விடுவதில்லை. உள்ளத்திற்கு ஏற்காத நினைவுகள் மட்டுமே இழக்கப்படுதல் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்ததாகும்.

### ஆளுமை சிதைவுறுதல்

இந்நோயில் காணப்படும் மற்றொரு சிறப்பான உள அறிகுறி ஆளுமைச் சிதைவுறுதலாகும். மறக்கடிக்கப்படும் நினைவுகள், நனவினின்று தனியாகப் பிரிந்து நின்று தனியாகச் செயலுறுவதுண்டு. இதன் காரணமாக அந்நோயாளிகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வகைகளில் நடந்து கொள்வதுண்டு, ஒரே மனிதர் ஒரு வேளையில் முற்றிலும் வேறுபட்ட வேறொரு மனிதர போலும் நடந்து கொள்ளலாம்.

### இரட்டை ஆளுமைகள்

இவ்வாறு இருவகையான மனிதர்கள் ஒருவரிடம் உறைவதை இரட்டை ஆளுமைகள் (Dual personalities) என்பர். உதாரணமாக, ஒரே மனிதர் இயல்பான ஆளுமையின்போது நல்லவராகவும், ஆளுமை மாற்றம் நேரும்போது கொடுமையான குணமுடையவராகவும் காணப்படலாம். இரண்டிற்கும் அதிகமான ஆளுமைகள் ஒரே மனிதரிடம் உறைவதைப் பல ஆளுமைகள் (Multiple Personalities) எனலாம்.

ஒரு பெண்ணிடம் தேவதை பெண், பேய் என்பதற்கு ஒப்பிடத்தக்க மூன்றுவகை ஆளுமைகள் இருந்த வரலாறு ஒன்றினை மார்ட்டன் பிரின்ஸ் (Morton Prince) என்னும் அறிஞர் ஆராய்ந்துள்ளார்.

### தோன்றும் காரணங்கள்

இஸ்தீரியா என்பது உளப் போராட்டங்களால் தோன்றும் ஒரு நரம்பு நோயாகும். எனவே சாதாரண மருத்துவ சிகிச்சையின் மூலம் இந்நோயினைக் குணப்படுத்துவதற்கில்லை. மேலும், இந்நோயினை முற்றிலும் குணப்படுத்த வேண்டுமாயின் நோயாளியின் உள்ளத்தில் உள்ள போராட்டங்களைச் சரிவரக் கண்டறிந்து அவற்றைக் களைதல் வேண்டும். எனவே இந்நோய் காணும் நிலையில் உள மருத்துவரின் துணையை நாடுவதே காலச் சிறந்தது.

---

## அமரர் நினைவு விழா

கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அமரர் வன்னியசிங்கத்தின் பிறந்த தினமான 13-10-67, வெள்ளிக் கிழமை நினைவு விழாவும் நினைவுமலர் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. அச்செய்திகள் அடுத்த வார சுதந்திர [illegible]

---

# திரைவாணன் பதில்கள்

கே. இராசையா
கண்டி

கே: 'ஜீவபூமி' 'ஞாயிறும் திங்களும்' படங்கள் வெளிவருமா?

ப: ஜீவபூமி எப்போதோ ஜீவனற்று விட்டது. ஞாயிறும் திங்களும் வெளிவரலாம்.

கே: 'லட்சுமி கலியாணம்' படத்தில் சிவாஜி கௌரவ நடிகரா?

ப: ஆம்.

ஃ

சு. மாரிமுத்து
ஒப்பல்கல

கே: சிவாஜிகணேசன் நடித்த படங்கள் இலங்கையில் ஏன அதிக நாட்கள் ஓடுவதில்லை?

ப: சிவாஜியின் ரசிகர்கள் இலங்கையில் குறைவாகஇருப்பதுதான் காரணமாக இருக்குமா?

ஃ

சந்திரன்
கொளளுப்பிட்டி

கே: ஜெயலலிதாவின் விலாசம் என்ன?

ப: 8/1 சிவஞானம் வீதி, தி. நகர், சென்னை-17.

கே: எம். ஜி. ஆரின் விலாசம் என்ன?

ப: எம்.ஜி.ஆர், சென்னை-17 என்று முகவரியிடுங்கள்! கடிதம் பத்திரமாக அவரிடம் சேர்ந்துவிடும்.

ஃ

பொ. சந்திரசேகரன்
ஆரையம்பதி-3

கே: எங்கள் அண்ணு எம்.ஜி. ஆருக்கு கிடைத்துள்ள பட்டங்கள் எத்தனை?

ப: பட்டங்களை விட உங்களைப் போன்றவர்களால் அன்புடன் அண்ணு என்று அழைக்கப்படுவதையே எம். ஜி. ஆர். விரும்புகிருர்!

ஃ

பௌ. பரநிருபசிங்கம்
திருமலை

கே: சென்னையில் தங்கையா அதே கண்களா அதிக நாட்கள் ஓடியது? எது வெற்றிப்படம்?

ப: தங்கைதான்!

கே: குழந்தையும் தெய்வமும் படத்தில் வரும் பிருந்தாவனம் எவ்விடத்தில் உள்ளது?

ப: மைசூரில்!

கே: தீபாவளிக்கு இலங்கையில் வெளிவரும் படங்கள் எவை?

ப: தாயே உனக்காக, படகோட்டி, பவானி, கல்யாண மண்டபம்.

ஃ

த. ரவீந்திரநாதன்
ஆரையம்பதி

கே: சிவாஜி கணேசன் பெருமைக்காரர் என்று சிலர் சொல்கிருர்களே, இது உண்மையா?

ப: திறமையிருக்குமிடத்தில் பெருமையும் இருக்கத் தானே செய்யும்?

கே: சிவாஜி கணேசன் மறைந்த நடிகர் ஸ்ரீராமின் ஜீவபூமியையும், மறைந்த உதவி டைரக்டர் சடகோபனின் 'ஞாயிறும் திங்களும்' படத்தையும் அவர்கள் குடும்பத்துக்கு உதவி புரியும் நோக்குடன் நடித்துக் கொடுக்கப் போகிருராமே! உண்மையா?

ப: சிவாஜிக்கு இந்த எண்ணம் எப்பொழுதோ வந்திருந்தால், மேற்கண்ட படங்கள் எப்போதோ திரையிடப்பட்டிருக்குமே! அநதத் திருப்தியுடன் இருவரும் கண்ணை மூடியிருப்பார்கள். சிவாஜியை நம்பி பணத்தைக் கொட்டி படமெடுக்க ஆரம்பித்தவர்கள், சிவாஜியின் ஒத்துழைப்பு கிடைக்காததினுல் மனமுடைந்து அந்த ஏக்கத்தில் இறந்தார்களென்று சென்னை சினிமா வட்டாரங்களில் கூறப்படுகிறது. வெறும் வாய்ப்பேச்சுடன் நிற்காது இந்த இருபடங்களையும் சிவாஜி முடித்துக் கொடுத்தாரென்ருல், இருவாது ஆத்மாவாவது சாந்தியடையுமே!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மர்த்தனை

கே: அரசகட்டளை, சென்னை, மதுரை கோவை ஆகிய இடங்களில் நூறு நாட்கள் ஓடியதாமே உண்மையா?

ப: தொடர்ச்சியாக எங்கும் நூறு நாட்கள் ஓடவில்லை!

கே: நாம் மூவர் படத்தில் ஜெய் உண்மையில் ஓடும் ரயிலின் தான் சண்டை செய்கிருரா?

ப: ஓடும் ரயிலில் தான் அக்காட்சி படமாக்கப்பட்டது.

ஃ

கு. ஆறுமுகம்
திருமலை

கே: திரையுலகில் நடிக்கின்ற நடிகர்களின் படங்களின் தொகைகளுள் கூடியது யாருடையது? குறைந்தது யாருடையது?

ப: வெளிவந்த படங்களின் தொகையைக் கொண்டு கேட்கிறீர்களா? அல்லது இப்போது நடித்துக் கொண்டிருக்கும் படங்களின் தொகையைக் கொண்டு கேட்கிறீர்களா?

ஃ

எச். ஆர். ஒஸ்மான்
திருமலை

கே: பேபி பத்மினியா பேபி சகிலாவா சிறந்த நடிகை?

ப: இருவரும் ஒப்பிட்டுப் பேசக் கூடிய பருவத்தினர் அல்லர்.

கே: ஜெய்சங்கர் கல்யாணம் செய்துவிட்டாரா?

ப: செய்து விட்டார். பல நடிகைகளை பல படங்களில்!

கே: வெள்ளி விழாக் கொண்டாடிய படங்களில் சிவாஜியின் படங்கள் அதிகமா? அல்லது எம். ஜி. ஆரின் படங்கள் அதிகமா?

ப: சிவாஜியின் படங்களே அதிகம்!

கே: சிவாஜியின் படம் ஒன்று அனுப்ப முடியுமா?

ப: சிவாஜியின் முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

ஃ

எம் ஜி. நாதன்,
த்ளாங்குடா

கே: எம். ஜி. ஆ. நடித்து முதல் வெளிவந்த படத்தின் பெயர் என்ன?

ப: சதிலீலாவதி.

திரைவாணன்,
சுதந்திரன் கேள்விபதில் பகுதி
த. பெ. இல. 1183.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

# சின்னஞ் சிறு உலகம்

கே. எஸ். ஜியின் படங்கள் என்றாலே எதுவும் சோடை போனதில்லை. பொய்சொல்லக் கூடாதுஎன்ற தத்துவத்தை இப் படத்தில்பரிசோதனை செய்கிறார் ஐயாக்கண்ணு என்றவரை மூலம். கடவுளுக்கு பயந்து உண்மை யே பேசி வாழும் ஒரு சின்னஞ் சிறு உலகத்தைப் படைத்துக் காட்டுகிறார்.

பூக்காரன் ஐயாக்கண்ணுவாக ஜெமினி கணேசனும் அவனது தங்கை சின்னப் பொன்னு வாக விஜயாவும் நடிக்கிறார்கள். நடிக்கிறார்கள் என்று சொல்லுவது தவறு. அப்பாத்திரங்களாகவே மாறி விட்டார்கள்!

தனது தங்கை கூறி விட்ட ஒரு சொல்லுக்காக குமுறும் கட்டத்திலும், பூந்தோட்டத்தை அழித்தவர்கள் முன்பு நின்றுகடவுள் பெயரால் "சாபம்" இடும் கட்டத்திலும், காத்தி கிலே முன்பு கசிந்துருகும் வேளையிலும் ஜெமினியின் நடிப்பு அற்புதம்!



சின்னப் பொன்னுவாக வரும் விஜயா சின்னப்பெண்ணுவேதான். கள்ளங் கபடமின்றி, அசமஞ்சமென்பது இன்னதென்றே விளங்காத கிராமியப் பெண்ணை அனாயாசமாக நடித்திருக்கிறார் விஜயா!

விஜயாவிடமிருந்து இத்தனை சிறந்த நடிப்பை வெளிக்கொணர கே. எஸ். ஜி. ஒருவரால்தான் முடியும் என்பதற்கு இப்படம் எடுத்துக்காட்டு.

நாகேஷுக்கு இப்படத்தில் ஒரு புதுமையான பாத்திரம். 'அழுகுணி'யாக வந்தாலும், அவர் அழும் போது நமக்கு சிரிப்புத்தான் வருகிறது.

பாடல்கள் காதுக்கினிமையாக இருக்கின்றன.

கோபாலகிருஷ்ணனின் வசனங்கள் பொருள் பொதிந்துள்ளன. ஒப்பாரியில் வரும் ஒரு அடிக்கு சுந்தரிபாய் மூலமாக அவர் கொடுக்கும் விளக்கம் வேடிக்கையாகவும், பொருள் பொதிந்தும் உள்ளது.

மறக்க முடியாத உலகம்.

— மகேஸ்

# 'மக்கள் திலகத்தை திகைக்க வைத்தேன்'

## சச்சு சொல்கிறார்

ஆம் முன்பெல்லாம் நான் எம். ஜி. ஆர். அவர்களை 'ஸார்... ஸார்' என்று தான் அழைத்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் 'சச்சு! என்ன ஸார் வேண்டியிருக்கு...? அண்ணு என்று கூப்பிடு' என்று அவரே தான் சொன்னார். அதன் பிறகு இப்போதெல்லாம், 'அண்ணு' என்று தான் அழைக்கிறேன்.

கோவை, ஜூபிடர் ஸ்டுடியோவில், 'ராணி' படம் தயாராகி வந்த நேரம். அதில் சிறுமி பாத்திரத்தில் நான் நடித்து வந்தேன்.



அப்பொழுது அங்கு 'நாம்' படமும் தயாராகி வந்தது. முதன் முதலில் நான் எம். ஜி ஆரைச் சந்தித்தது அங்குதான்.

அன்று தொடங்கி, எப்பப் பார்த்தாலும் என்னை ஓயாமல் எம். ஜி. ஆர். பேச்சு,' என்று பாட்டியும் சகோதரர் சகோதரியரும் கடிந்து கொள்ளும் அளவுக்கு நான் அவர் ரசிகையாகி விட்டேன்.

எம். ஜி. ஆர். அண்ணுவை நான் ஒரு சமயம் திணற வைத்திருக்கிறேன். 'பாக்தாத் திருடன்' படப்பிடிப்பில் அவர் நடித்துக் கொண்டிருந்தார். நான் அங்கு போய் அவரிடம் "உங்கள் படத்தை ஒன்னரை ரூபாய்க்கு நான் வாங்கியிருக்கிறேன்," என்று சொன்னேன்.

அவர் நடித்த திரைப்படம் ஒன்றைத் தான் எனக்கு வேண்டியவர்கள் யாராவது ஒன்னரை (லட்சம்) ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்களோ என்று நினைத்த அவர், 'எந்தப் படம்? என்ன ஏரியா (பகுதி)க்கு?' என்று கேட்டார்.

உடனே, நான் மறைத்து வைத்திருந்த, முதல் நாள் பார்க்லேபர் கண் காட்சியில் வாங்கி வைத்திருந்த, அவர் போட்டோவைக் காட்டித் திகைக்க வைத்தேன்!



முத்துராமன்—கீதாஞ்சலி, எஸ். எஸ். ஆர்—காஞ்சனு ஆகிய இந்த இரு ஜோடிகளும் இணைந்து நடித்திருப்பது கலைஞர் கருணாநிதியின் 'மறக்க முடியுமா?' படத்தில் தான்!

திரை விமர்சனம்

# தங்கை

அண்ணன் தங்கை பாசத்தை வைத்து பின்னப்பட்டிருக்கும் ஒருஉணர்ச்சிமயமான கதைதான் ஜெமினி மா திரையில் இப்பொழுது காட்சிதரும் சுஜாதா சினி ஆர்ட்ஸாரின் 'தங்கை'

சூதாடுவது தீயது என்று தெரிந்தும் தங்கையின் நல்வாழ்வுக்காக சூதாடத் துணிந்து அதில் தொல்லையடையும் ஒரு பாசமுள்ள வாலிபனின் சோகக்கதை 'தங்கை'

சிவாஜி கணேசன் எத்தனை பாத்திரங்களில் நடித்தாலும், சோகக் கட்டங்களிலும், பாசமுள்ள அண்ணனாக நடிக்கும் போது தான் அவரது உயர்ந்த நடிப்பு நம் கண்களில் கண்ணீரைத் தருவித்து விடுகிறது. இதற்கு சாட்சி 'தங்கை'

நடிகர் திலகம் அவர்! அவரது நடிப்புத் திறனை விமர்சிக்க வார்த்தைகளேது! ஒவ்வொரு கட்டத்திலும் நடிப்பின் எல்லையைத் தொடுகிறார்.

எச்சில் இலையை நக்கும் தங்கையைக்காணும் போது அவர் படும் துயரமும், தங்கைக்கு டி.பி. என்பதறிந்து குமுறுவதும், தன்னால் ஒருவன் இறக்க நேரிட்டது அறிந்து துடிக்கும் நிலையும் ஒரு சில 'சாம்பிள்கள்'.

வாயில் சிகரெட்டுடன், கடதாசி விளையாட்டின் போது கடதாசிகளை அவர் பிரித்துப் போடும் அழகே தனி!

இதில் இன்னொரு சிறப்பம்சம், பல நாட்களுக்குப் பின் இப்படத்தில் சிவாஜி சண்டை போடுவதே! சண்டை போடுவதும் ஒரு நடிப்பா என்று கேட்டவரை, சண்டை போடும் நிலைக்கு கொண்டு வந்து விட்டார் திருலோக சுந்தர்.

டாக்டராக வரும் விஜயா சிவாஜியைக் காதலிக்கிறார். அமைதியான நடிப்பு.

சுந்தரராஜன் சூதாட்டத் தலைவர். நாகேஷ், சூதுக்கு ஆள் சேர்க்கும் ஏஜன்ட்.

பேபி கௌசல்யாதான் 'தங்கை'. குறை சொல்ல முடியாத நடிப்பு.

தங்கை மற்றொரு 'பாசமலர்'

— மகேஸ்

# கே. எஸ். ஜி. ஆதரவு பெற்ற பஞ்ச சீல நடிகை இவர்

ராதிகா. பெற்றோர் இட்ட பெயர் அல்ல இது. சின்ன அண்ணாமலை மாற்றி வைத்த பெயர். பெற்றோர் ராதிகாவுக்கு இட்ட பெயர், ஆனந்த மேரி.

ஆனந்த மேரியின் வாழ்க்கையும் ஆனந்தமயமானது தான். செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்த இவருக்கு குறையொன்றுமே இல்லாது வளர்த்து வந்தார்கள் இவரது பெற்றோர்கள். ராதிகா நடனம் என்று வாய்திறந்த போதே இந்தியாவின் தலை சிறந்த நடன ஆசிரியர்களான ஹீராலால் ஜனக்கோபி கிருஷ்ணு, லட்சுமிநாராயணன் மூவரையும் இவருக்கு நடன ஆசிரியர்களாக அமர்த்தி விட்டார்கள் இவரது பெற்றோர்.

முதல் இருவரும் கிராமிய நடனங்களையும் மூன்றுமவர் பரத நாட்டியத்தையும் ராதிகாவிற்கு சொல்லிக் கொடுத்தார்கள். இப்போது ராதிகா நடனக்குழு ஒன்றை நடத்தி வருகிறார். பல இடங்களுக்கும் சென்று நடனக் கச்சேரிகள் நடத்திக் கொடுத்து வருகிறார்.

மேல்நாட்டு 'டுவிஸ்ட்' நடனமும் நன்றாக ஆடும் ராதிகா படவுலகில் சேரவேண்டும் என்று அவரைவிட, அவரது தாயார் தான்அதிகம் விரும்பினார்.

ராதிகா முதல் முதல் நடித்த படம் பட்சிராஜாவின் 'கல்யாணியின் கணவன்' இதில் நகைச்சுவைப்பாகத்தில் டி. ஆர். ராமச்சந்திரனுடன் ஜோடியாக நடித்தார். அடுத்து இவர் 'ஒருவிரல்' படத்தில் கதாநாயகியாக நடித்தார்; மூன்றாவதாக 'சின்னஞ் சிறு உலகம்' படம் வந்தது. திரைக்கதை கோபால கிருஷ்ணன் என்னை அழைத்து இந்த வேஷத்தை எனக்கு கொடுத்தார்.

செட்டில் கோபால கிருஷ்ணன் நடிப்புச் சொல்லிக் கொடுத்ததையும் கே. ஆர். விஜயா, ஜெமினி கணேசன் முதலியோர் காட்சிகளில் நடிக்கும் போது ஊக்குவித்ததையும் என்னால் என்றென்றும் மறக்க முடியாது என்று சொல்கிறார் ராதிகா.

அறுபத்திநான்கு அங்குல உயரமும் சுமார் இருநூற்றுப்பதினறு மாத வயசும் நிறைந்த ராதிகாவுக்கு கார் ஓட்டத் தெரியும்; நல்ல இசையை நன்றாக ரசிக்கவும் தெரியும்.

இரண்டு தமிழ் படங்கள் (ஒரு விரல், சி. சி. உலகம்) இரண்டு மலையாளப் படங்கள் ஆக நான்கு படங்களில் பிரதம பாகத்தில் நடித்துள்ள இவர், இப்பொழுது நடித்து வரும் எல்லாத்தமிழ் [illegible] கதாநாயகியாகத்தான் வருகிறார். [illegible] மற்றும் வில்லியாக வருகிறார்.

எனக்கு வில்லியாக நடிக்கப் பிடிக்காது. என்ன செய்வது? என் நடன ஆசிரியர் சிபாரிசு செய்த படக் கொம்பனி. அதனால் தான் வில்லி வேஷத்தை இதில் ஏற்றிருக்கிறேன் என்று சமாதானம் சொல்லுகிறார் ராதிகா.

நல்ல வேஷங்கள் கிடைத்தால் போதும்; என் ஊதியம் இரண்டாம் பட்சம் தான் என்கிறார். இதுவரை இருபது நாடகங்களில் நடித்துத் தன் நடிப்பையும் வளர்த்திருக்கிறார். ராதிகா ஒரு ஆங்கில நாடகத்தில் ஜப்பானிய மொழி பேசி நடித்துள்ளார்.



மொழிகளில் இவர் பஞ்ச சீலத்தைக் கடைப் பிடித்து வருகிறார். இவருக்குத் தெரிந்த மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம்.

வந்தது யோகம்.

இது தான் யோகம் என்று இரண்டு யோகப்படங்களில் நடிக்கும் ராதிகாவுக்கும் சின்னஞ்சிறு உலகத்திற்குப் பின் நல்ல யோகம் அடிக்க ஆரம்பித்திருக்கிறது.

எஸ். எஸ். எல். சி. வரை படித்துள்ள ராதிகா நிறையப் பத்திரிகைகள் படிக்கிறார். எதிர் காலத்தில் ஒரு சிறந்த நடிகையாக வர வேண்டும் என்பதே என் லட்சியம் என்று சொல்கிறார், இந்த இளம் நடிகையான ராதிகா.

# அத்திப்பூ

'அத்திப்பூ' என்ற பெயரில் ஆலங்குடி சோமுவுக்குச் சொந்தமான ஆலங்குடி மூவிஸார் ஒரு படம் தயாரித்து வருகிறார்கள்.

இதில் கடமைக்காக வாழ்ந்து உயர்த் தியாகம் செய்யும் போலீஸ் இன்ஸ் பெக்டராக ஜெமினிகணேசன் நடிக்கிறார்.

நாகேஷ், அசோகன், சுந்தரராஜன், பாரதி ஆகியோரும் நடிக்கும் இந்தப் படத்திற்கான பாடல்களை ஆலங்குடி சோமு எழுதுகிறார்.

குமார் இசையமைக்க, கதை, வசனம் டைரக்‌ஷன் ஆகிய பொறுப்புகளை கே. பாசைசந்தர் ஏற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைத் துறை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

றவுச் சங்கங்களில் தங்கள் மூல தனத்தைச் செலுத்தும் பங்கு தாரர்களாகச் சேர்வர்.

இதற்கு அரசாங்கம் சுமார் 70 வீத முற்பணமாக மூலதனப் பங்கிலிருந்து தொழிலாள அங்கத்தவருக்கு வழங்குதல் வேண்டும். எஞ்சியுள்ள 30வீத மூலதனப் பங்கை நிர்வாகிகளுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் மூலதனப் பங்காக அளிக்கப்படல் வேண்டும்.

தற்போதுள்ள வேலை இயக்க குழுவினரைத் தொழிலமைச்சு தேர்ந்தெடுப்பதும், தேவையற்றவர்களை நீக்குவதும் தொழில் அமைச்சரின் விவேகத்தைப் பொறுத்தது.

## நிர்வாக அதிகாரிகளின் பங்கு

நிர்வாக அதிகாரிகளின் மூல தனப் பங்கு மூன்று இலட்ச ரூபாவாகும். தற்போதுள்ள (கண்டிராக்ட்)ஒப்பந்தக்காரர் களின் சாதனங்களான படகுகள், வாஞ்சுகள் முதலியனவைகளை ஏற்க வேண்டியிருப்பதற்கு இப்பணம் செலவு செய்யப்பட்டாலும், ஏறத்தாழ கூட்டுறவுச சங்கத்தின் கொள் முதலாகவே இருக்கும்.

## இலாபம் பெற முடியும்

தொழிலாளி அங்கத்தவர்கள் தங்கள் சொந்த ஸ்தாபனம் எனக்கருதி சேவை புரிவார்களானல் அவர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களால் நல்ல இலாபத்தை அடைய முடியும். கப்பல் டெமரேஜ்க் கட்டணம் மேலதிகமாக செலுத்த வேண்டியிராது. இதற்கு மாறாக கப்பல்களை விரைவில் திருப்பியனுப்புவதன் மூலம் போனஸ்முதலியன அளிக்கப்படலாம்.

துறைமுகத்தின் வேலைத் தரம் உயர்ந்ததனல் அதிகமான கப்பல்கள் திருமலைத் துறைமுகத்திற்கு வரும் சாத்தியமுண்டு. அதனல் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பயனை அடையும்.

## மூன்று மாதத்திற்கொரு தடவை இலாபப் பணம்

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வருமான இலாபத்தில் 2/3 பங்குவீகிதம் தொழிலாள அங்கத்தவர்களின் பெயரில் வரவு வைத்தும் அதில் 3/1 பங்கு விகிதப் மூன்று மாதத்துக்கு ஒரு முறை பகிர்ந்தளித்தும் வரலாம்.

ஆண்டு முடிவில் வரவிலுள்ள 2/3 பங்கு இலாபப் பங்கிலிருந்து அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ளவைகளை அங்கத்தவர்களின் பெயரிலேயே வாங்குவதற்கு இடமளிக்கப்படலாம். இப்படியே 5 அல்லது 6 ஆண்டுகளில் அரசாங்கம் அளித்த 7 இலட்சம் ரூபாவும் 7 இலட்சம் ரூபா (70வீத) தொழிலாள அங்கத்தவர்களால் திருப்பியளிக்கக் கூடிய சாத்தியம் உண்டு.

## தொழிலாளரின் சொந்தமாகும்

அதன் பின் அவர்கள் தங்களது சொந்தமான கூட்டுறவு ஸ்தாபனங்களிலிருந்து தங்கள் இலாப நலன்களை முற்றாக அடையலாம் எனக் கருதுகிறோம்.

ஏழாவது ஆண்டில் தொழிலாளர்கள் மேலும் 10 வீத விகிதம் நிர்வாகப் பங்குகளையும் அவர்களின் இலாபத்திலிருந்து பெறக் கூடும். ஏழாவது ஆண்டின் இறுதியில் தொழிலாள அங்கத்தவர்கள் 80வீத விகிதமும், நிர்வாக அங்கத்தவர்கள் 20 வீத விகிதமும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் பங்குகளை உடையவராக இருப்பர் என்பதும் எங்கள் அபிப்பிராயமாகும்.

## நிர்வாகிகள்

அரசாங்க சேவையிலுள்ளவர்கள் அடிக்கடி உத்தியோக இடமாற்ற முடையவர்களாக இருக்க நேரிடுவதால் துறைமுகச் சீர்திருத்தத்தில் அதிக கவனம் செலுத்த முடியாதவர்களாகிருர்கள். ஆதலால் அரசாங்க உத்தியோகத்தராக இல்லாதவர்களும், இந்தக் கூட்டுறவுத் தொழிலில் அனுபவமுள்ளவர்களும், கூட்டுறவுச் சங்கங்களில் தமதுசொந்த மூலதனத்தைப் போட்டு அனுபவப்பட்டவர்களுமே நிர்வாகிகளாக நியமிக்கப்பட வேண்டுமெனவும் விரும்புகிறோம்.

இவ்வித ஏற்பாடுகளால் தொழிலாள அங்கத்தவர்கள் பெருந் தொகையான கூட்டுறவு பங்குகளை உடையவராவர். இதிலிருந்து அவர்களின் முன்னேற்றம் துறைமுகத்தில அபிவிருத்தியிலிருந்து ஏற்படுகிறது என்பதை அவர்களே உணர்வர்.

ஆதலால் திருமலைத் துறைமுகம் தேசத்தின் பொருளாதாரத்திற்கும் தேச முன்னேற்றத்திற்கும் ஓர் வரப்பிரசாதமாக இயங்கும் என நம்புகிறோம்.

இந்த ஆலோசனைகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதனல் இலங்கைக்கு மட்டுமல்ல ஏனைய உலக நாடுகளின் துறைமுகங்களுக்கும் ஓர் உதாரணமாக இந்தத் திட்டம் அமைவதுடன் இலங்கையிலும், கொழும்பு, காலித்துறைமுகங்களும் இதுபோன்ற கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தித் தருமாறு கேட்கவும் கூடும்.

—

# தமிழ் வார ஏட்டின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தான் விற்பனையாகின்றன. ஆனல் இங்கிலாந்தில் 488 தினசரிகளும் அமெரிக்காவில் 311 தினசரிகளும் ஜெர்மனியில் 315 தினசரிகளும் ரஷியாவில் 216 தினசரிகளும் விற்பனையாகின்றன.

இலங்கையிலும் இந்தியாவைவிட இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆயிரம் நபருக்கு இலங்கையில் விற்பனையாகும் தினப்பத்திரிகைகள் 36.

—நன்றி: தினகரன்

# பிள்ளைகளை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைச் செல்வத்தை உடையவர்களாக இருக்கிருர்கள்! ஐரோப்பாவிலேயே இப்படிப்பட்ட குறைந்த 'குழந்தைவள' த்தையுடைய நாடு வேறெதுவும் இல்லை!

நாளுக்கு நாள் 'கிழவர்கள் பெருகுகிருர்களே தவிர, அந்த அளவுக்குப் புதிய பரம்பரையைக் காணுேமே' என்று — கவலை மிகக் கொள்ளுகிறது அங்கேரி அரசு! ஏனெனில், நாட்டின் தொழில் உற்பத்திக்குத்தேவைப்படுபவர்கள் இளைஞர்களே தவிர, 'பென்ஷன்' பெறுபவர்கள் அல்லரே!

எனவே, 'பிள்ளைகளைப் பெறுங்கள்; அதுவும் அதிகமாகப் பெறுங்கள்'என்ற அதிகார முறையில் மக்களைக் கேட்டுக் கொள்கிறது — அந்த நாடு!

## குழந்தைப் பிரசாரம்

'குடும்பம் நிலைப்பதும் பெயர் சொல்வதும் குழந்தைகளினல்தான்; பிள்ளைச் செல்வத்தினின்றும் கிடைப்பது தான் வாழ்க்கையில் பெரிய மகிழ்ச்சி'' என்றெல்லாம் — வியாபாரத் தோரணையில் — பிரச்சாரம் செய்கிறது அங்கேரி!

செக்கோஸ்லேவேகியா, இந்த இரு நாடுகளையும் விட பல படிகள் இத்துறையில் தீவிரம் காட்டுகிறது!

பிள்ளைகளைப் பெறும் எல்லாப் பெண்களுக்கும் அங்கே வேலை வாய்ப்புத் தரப்படுகிறது. அது மட்டுமல்ல; குழந்தைகள் அதிகமாகப் பெறும் தாய்மார்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறையும் உண்டு!

இதில் இன்னும் சற்று விரசமான அதிசயமும் இருக்கிறது அது இது:—

அதிகக் குழந்தைகளைப் பெறும் தாய்மார்கள் — திருமணமாகாதவர்களுக்குக் கூட; — சட்டப்படி அங்கே சம்பளத்துடன் கூடிய விடுமுறை வசதிகள் தரப்படுகிறதாம்!

—

# சீர்திருத்தவாதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தத்துவமும், இலக்கியமும் தர்க்கமும் பயின்று, கூர்ந்த அறிவுத்திறம் வாய்ந்த மொழியியல் அறிஞர் என்றும், வாதாடுவதில் வல்லமை மிக்கவர் என்றும் பெரும் புகழ் பெற்ருர்.

## தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்

அவருடைய ஆரம்ப காலத்தில் மின்னல் அவர் உயிரைப் பிரித்திருக்க வேண்டும். ஆனல், தெய்வாதீனமாக அதிலிருந்து அவர் மீண்டார். இறைவனின் அந்த அருளுக்கு நன்றி செலுத்தும் வகையிலேயே, அவர் சந்நியாசியாகத் தம் வாழ்வை மாற்றிக்கொண்டார்.

1681 ஆண்டு அக்டோபர் மாதத்தில் விட்டன்பர்க்கில் கவரொட்டிகளை ஒட்டுவதன் மூலம் அவருடைய சீர்திருத்தம் துவங்கியது.

லூதர் வெளியிட்ட ஆதாரங்கியங்கள் மிக விரைவில் எங்கெங்கும் பரவி, ஜெர்மானிய மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தன.

இந்தச் சீர்திருத்தப் பொறி ஒரு நூற்றுண்டுகளுக்கு மேலாகப் பல அரசியல்-சமூக தகராறுகளுக்கும் காரணமாக இருந்து, 1648 ஆம் ஆண்டிக 'வெஸ்ட் பாலியன் சமாதான ஒப்பந்தம்' கையெழுத்திட்ட பின்னர்தான் ஓய்ந்தது.

# கோழைகள்

(10-பக்கத் தொடர்ச்சி)

வாழலாம் என்று ஆசைப்பட்டாள். நொண்டியுடன் வாழ்ந்தாள். அந்த ஆசை திர்க்கதியான நிலையில் நின்று விட்ட போது அந்த அழகின் ஆபத்தை உணர முடியாதவளாயிருந்தாள். பண்டாரம் தன்னைப் பலி கொள்ளும் போது தான் தன் அழகு தனக்கே எதிரியான ஒன்றென்று உணரத் தலைப்பட்டாள்.

மெலியாரை வலியார் வருத்த வலியாரைத்தெய்வம் தண்டித்து விட்டது. தெய்வத்தின் தண்டனைக்குள்ளான பண்டாரத்தின் கதையை அவள் யாரிடம் கூறுவாள்? எப்படி என்னவென்று கூறுவாள்? வலியவர்கள் வாழும் சமூகத்தில் மெலியாரின் உண்மை ஏழையாகிவிடுமோ? அந்தஸ்து பேதம் என்ற கோழைத் தன்மையினுல் மறைக்கப்பட்டு விடுமே. தெய்வ நீதியைக் கூடக் கோழைகளாக ஆனல் வலியவர்களாகத் தோன்றுவோர் திரைபோட்டு மூடிவிடுவார்களே. அந்தக் கோழைகள் முன் பேசக்கூடியவர்களே குற்றவாளிகளாகி விடுவார்களே பாவம் ஊமையான இராசாத்தி......!

இரக்கமற்ற கோழைகளிடம் இரந்து வாழ்வதை விட உறுதியுடன் மடிந்து விடுவது என்று கிணற்றில் பிள்ளைகளுடன் விழுந்து தற்கொலை செய்து கொண்ட இராசாத்தியின் உள்ளம் உறுதியானது; மானமிழந்த பின்பும் சமூகத்தில் கௌரவப் போலியாக வாழும் கோழைகள் ஏராளம். அவர்களிலும் பாச்சை இராசாத்தி உத்தமிதான். உறுதியான உள்ளம் கொண்டவள் தான்.

தற்கொலை செய்து கொள்பவர்கள் எல்லாம் கோழைகள் என்றால் சமூகத்தில் நீதி— நேர்மை— உண்மை ஆகியவற்றுக்குத் திரையிட்டு வாழும் கோழைகள்......?

[யாவும் கற்பனை]

# மார்க்சீய...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடான இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

இப்போதைய சபாநாயகரும் இந்த மூன்று பண்புகளையும் கடைப்பிடித்து வருவாரென எதிர்பார்க்கலாம். எனினும், பாராளுமன்ற ஹன்சார்ட் சம்பவங்களைப்பார்க்கும் போது, இரண்டொரு நிமிடங்கள் என்றாலும் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் உரையாட சபாநாயகர் அனுமதிக்கிருர் என்றே கருத்தோன்றுகிறது. எச்சந்தர்ப்பத்திலும், சபாநாயகர் சபையை கௌரவத்துடன் நடத்திச் செல்லவும், பேசும்போது தம்மைப்பார்த்துப் பேசும்படி உறுப்பினர்களைப் பணித்திடவும் வேண்டும். அப்போதுதான் சபை விவாதங்கள் நல்ல உருவம் பெறும்.

—

❋ தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம் எடுத்த முயற்சியைத் தொடர்ந்து மாதகல் இளவாலை ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்பட விருக்கிறது.

❋ இவ்வருட இறுதிக்குள் திருமலையில் இயந்திர தச்சுத் தொழிற் பாடசாலையொன்று நிறுவப்படவிருக்கிறது.

❋ வேலணையில்இ.போ.ச. டிப்போ. ஒன்று திறக்கப்பட வேண்டுமென ஊர்காவற்றுறை பா உ., திரு. நவரத்தினம் இ.போ.ச. தலைவரைக் கோரியுள்ளார்.


பவரின்
காய்கறிப் போனை



ஏ. பவர்



உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமை பொய்யாமையாற்றின்

அறம் பிற

செய்யாமை செய்யாமை நன்று.

## நாய்க்குட்டியின் பிடிவாதம்

எங்கள் செல்ல நாய்க்குட்டிக்கு டான்ஸில் வளர்ந்து விட்டது. வெட்டினரி டாக்டர் சில மாத்திரைகள் கொடுத்தார். நாய்க்குட்டிக்கு மாத்திரையை எப்படிக் கொடுப்பது? அது வெகு சுலபம். பல்லிடுக்கிலே இட்டியை வைத்து நெம்பு. பிறகு மாத்திரையை அது விழுங்கும் வரையில் வாயைக்கிடுக்கியால் மூடி அழுக்கிப் பிடித்துக் கொள். இப்படி செய்யும் படி புத்தகம் சொல்லுகின்றது.

இதேபிரகாரம் செய்தோம். ஆனல் நாய்க்குட்டியோ வாயை விட்டதும் மாத்திரை [illegible] கக்கி விட்டது. நாலு [illegible] அப்படியே செய்தோம். முன்றி[illegible] யும் அப்படியே நாய்க்குட்டி[illegible]. கடைசியில் கக்கி விட்ட[illegible] வந்து விட் எனக்கே எரிச்சல் [illegible] எறிந்[illegible]டது. மாத்திரைகளை [illegible] த்தேன். எங்கள் செல்ல நா[illegible] குட்டி என்ன செய்தது தெரியுமோ? துள்ளிக் குதித்துக் கொண்டு ஓட்டமாய் ஓடியது. மாத்திரைகள் கிடந்த இடத்தை அடைந்தது. [illegible]னே மாத்திரைகளை 'லபக்' என்று விழுங்கிவிட்டது.

இப்படி நடந்ததென்று ஓர் அமெரிக்கப் பெண்மணி கூறுகின்ருர்.

—சிங்களவாடிமூர்த்தி
மட்டுநகர்.



## இவர் ஒரு திருடன்

சுருட்டுக் குடிப்பதென்றல் காந்திஜிக்கு அலாதிப் பிரியம். அவர், தனது உறவினர் ஒருவருடன் சேர்ந்துசுருட்டுக் குடிப்பதுவழக்கம்.அப்பழக்கம் திருட்டுப் பழக்கத்துக்கும் வழிகாட்டியது.காந்திஜிதிருடவும்செய்தாரா?என்று ஆச்சரியமாக விருக்கிறதா? ஆம். காந்திஜி, ஒரு திருடனே தான்!

தனது சிறிய தந்தை குடித்து விட்டு வீசி எறியும் குறைச் சுருட்டுக்களைப் பொறுக்கி குடித்து இன்பம் அநுபவித்த அவருக்கு, முழுச் சுருட்டுக் குடிக்க வேண்டுமென்ற ஆசை

"மாஸ்டர் மாணிக்கம்"

இதயத்தில் முளைவிட்டது. முழுச் சுருட்டுக்கு எங்கே போவது? எப்படி எடுப்பது? என்ற சிந்தனையில், 'என்ன செய்வது' என்றுபுரியாது நின்ற காந்திஜிக்கு, தன் வீட்டு வேலைக்காரனின் நினைவு வந்தது. அவரது வீட்டு வேலைக்காரனுக்குக் கொடுக்கப்படும் காசில், விளையாடத் தொடங்கினர் காந்திஜி. திருடிய காசில் சுருட்டுக்கள் வாங்கி, அவரும் அவரது நண்பருமாகச்சேர்ந்து குடித்துஇன்பமடைந்தனர்.

அந்த ஏழையின் காசைத் திருட, காருண்யமூர்த்தியான அந்த காந்திஜிக்கு எப்படி மனம் வந்தது? என்று நீங்கள் வியப்படைதல் கூடும். இது நடந்தபோது அவருக்கு வயது எத்தனை தெரியுமா? பனிரண்டு அல்லது பதின்மூன்று இருக்குமாம். மகாத்மா காந்திஜியின் பின்னைப் பிராயத்தில் நிகழ்ந்த 'திருவிளையாடல்'களில் இதுவொன்று.

சுருட்டுக்குடிப்பதில்காந்திஜி பியரிய கொள்கைமக்கு காரணம், சுருட்டுப் புகைநாற்றத்தில் இன்புற்றல்ல. சுருட்டுக் குடிப்பதில் ஏதேனும் நன்மை உண்டென்று கருதி அதில் பிரியங் கொள்ளவுமில்லை. வாயிலிருந்து சுருள் - சுருளாகப் புகை விடுவதில், ஏதோ ஒருவகை மகிழ்ச்சி, இன்பம் இருப்பதாக எண்ணித்தான் புகைத்ததாக அவரே தமது 'சத்திய சோதனை'யில் கூறியிருக்கிறர்.

சுருட்டுக் குடிக்கும் பழக்கத்தை அநாகரிகமான தென்றும் அசங்கியமான தென்றும் - நிமையப்பதென்றும் காந்திஜி குறிப்பிட்டுள்ளார். புகை பிடிப்பாளர்கள் 'மகாத்மா' குறிப்பிட்டுள்ளதை 'வேதம்' என்று மதித்து நடக்க வேண்டும்.

## இலக்கியத்தில் நாம்

ஐம் பெரும் காப்பியங்களெவை?
சிந்தாமணி
சிலப்பதிகாரம்
மணிமேகலை
வளையாபதி
குண்டலகேசி
கலிங்கத்துப்பரணியை எழுதியது யார்?
சயங்கொண்டார்.
நன்னூலைச் செய்தவர் யார்?
பவணந்தி முனிவர்,
நாலடியார் யாரால் தொகுக்கப்பட்டது?
சைன முனிவர்களால்.
வீரமா முனிவர் இயற்றிய நூலின் பெயரென்ன?
தேம்பாவணி.
நம்பி அகப் பொருள் யாரால் எழுதப்பட்டது?
நாற்கவிராச நம்பியால்!

ச. சுப்பிர[illegible]
திருக்கோணமலை.

மாணவர் சிறுகதை:

## திருந்திய உள்ளம்

(சென்றவாரத்தொடர்ச்சி)

பாடசாலை விட்டதும் மணி விரைந்து விட்டிற்குச் சென்றுவிட்டான். சுரேஷ் அங்கும் இங்கும் வேடிக்கை பார்த்துக்கொண்டு சென்ருன். சுரேஷ் வீடு செல்லும் வழியில்தான் மணியின் வீடும் இருந்தது. அந்த வீடு என்று சொல்ல முடியாது; அது குடிசைதான். அந்தக் குடிசையைத் தாண்டிச் சென்ற போது மணி அழுவது சுரேஷின் காதில் விழுந்தது. மெதுவாக வேலி இடுக்கு வழியே உள்ளே நோக்கினன். அங்கே மணியின் தந்தை மணிக்கு அடித்துக்கொண்டிருந்தார். "எங்கேடா புத்தகத்தைத் துலைத்தாய்? இப்போ சொல் [illegible] ப முது வாவிடில் உன்னுடைய [illegible]வன்.' குத்தேவ உரித்து [illegible]

எதிரி என்றாலும் மணியின் அழுகையைக் கண்டதும் இனந்தெரியாத ஒருவித அனுதாபம் பிறந்தது. 'அப்பா அடிக்கும்போது எனக்கு நன்ருக வலிக்குமே? அப்படித்தானே மணிக்கும் வலிக்கும்? அப்பா அடிக்கடி சொல்லுவாரே! தவறு செய்தால் மன்னிப்புக் கேள் என்று! நான் மணியின் தந்தையிடம் புத்தகத்தைக் கொடுத்து மன்னிப்புக் கேட்டால் என்ன?' என்று எண்ணிக்கொண்டு படலையைத் திறந்துகொண்டு உள்ளே ஓடினன்.

'மணியை அடிக்காதீர்கள். நான் தான் புத்தகத்தை எடுத்தேன். இந்தாருங்கள் புத்தகம்' என்று புத்தகத்தைக் கொடுக்கவே, மணியின் தந்தை [illegible] 'நீயா அந்தத் திருட்டு[illegible] கல்' என்று கூறிக் கொண்டு சுரேஷுக்கு அடித்தார்.

ஆ. ப. சந்திரநாதன்

சுரேஷ் கண்ணீரைத் துடைத்தவாறு மணியின் வீட்டிலிருந்து வெளியேறினன். சுரேஷ் வீட்டிற்குத் தான் சென்று கொண்டிருந்தான். ஆனல் அவனது எண்ண அலைகள் எங்கெல்லாமோ சென்றன. 'அப்பா எனக்குக் கூறிய புத்திமதிகள் தவருனவை. தவறு செய்தால் மன்னிப்புக் கேட்கும்படி அப்பா கூறினரே? மன்னிப்புக் கேட்டபடியினல் தானே நான் இப்பொழுது அடிவாங்க நேரிட்டது' அன்றிரவு முழுவதும் சுரேஷுக்கு இதனைப்பற்றிய சிந்தனைதான். மணியின்மேல் உள்ள கோபம் பன்மடங்காயிற்று.

மறுநாள் வழக்கம்போலப் பாடங்கள் நடைபெற்றன. இடைவேளை மணி அடித்து எல்லா வகுப்புக்களுக்கும் பணிஸ் கொடுக்கப்பட்டது.

மணியின் வகுப்பிற்குப் பணிஸ் கொடுப்பது சுரேஷும் இராமுவும். பணிஸை எடுத்து வரும்போது வேண்டுமென்றே சுரேஷ் ஒரு பணிசை மண்ணிற்குள் போட்டுவிட்டு எடுத்து வந்தான். அந்தப் பணிஸ் மணிக்குக் கொடுக்கப்பட்டது. மணி ஒன்றும் பேசாது அதனை வாங்கி மண்ணைத் தட்டிவிட்டுத் தனது அழுக்கான புத்தகப் பைக்குள் வைத்துக்கொண்டான். மணி வைப்பதைக் கண்ட ஒருமாணவன் 'ஏண்டா இதை வீட்டிற்குக் கொண்டு போகின்ருய்? வாவேன் பணிசிலேபந்தடிப்போம்' என்ருன்.

'நான் வரவில்லையடா' என்ருன் மணி.

'நீ வராவிட்டாற் பரவாயில்லை. உன்னுடைய பணிசைத் தா. நான் பந்தடிக்கப் போகிறேன்.'

'தயவு செய்து அதைக்கேட்காதே. அதுதான் என் தங்கை மாலதிக்கு இன்றைய சாப்பாடு' என்று கெஞ்சும் பாணியில் கூறினன் மணி.

"அவனது தங்கைக்கு[illegible] [illegible]துக்கப்பட்டாலும், அவன் [illegible]மீதுள்ள கோப[illegible]த்தினல் நீம[illegible] மதி அடைந்தான் [illegible].

'கிணிங்! கிணிங்!! கிணிங்' இடைவேளை முடிந்து மணி அடித்தது. அடுத்த பாடம் கந்தையா வாத்தியார். பிரம்போடு உள்ளே நுழைந்தார் கந்தையா வாத்தியார்.

'நமஸ்காரம்' மாணவர்களின் ஒருமித்த குரல்.

'நமஸ்காரம்! அமருங்கள்' என்று கூறிய படி கதிரையில் அமர்ந்தார் திருவாளர் கந்தையா வாத்தியார்.

[illegible] வகுப்[illegible]ற்கு வந்தவுடன் பா[illegible]டத்தை ஆரம்பிக்கும் கந்தையா வாத்தியார் இன்று பாட[illegible]த்தை ஆரம்பிக்கவில்லை.

'மணியும், சுரேஷும் இங்கே வாருங்கள்' என்று அழைத்தார்.

'நேற்று நடந்தவற்றை எல்லாம் எனக்கு மணியின் தந்தை கூறினர். நீ நேற்று அவரிடம் மன்னிப்புக் கேட்டபோது அவர் ஆ[illegible]த்திரமாக இருந்தாராம். அ[illegible]த ஆத்திரத்தில் உனக்கு அடி[illegible]விட்டாராம். அவர் தன்னை மன்[illegible]ய படி கூறினர்' என்று கூ[illegible] கந்தையா வாத்தியார் தொடர்ந்து கூறினர்; 'நீ இன்று மண புரட்டிய பணிசை [illegible]க் கொடுத்ததை நான் [illegible] இன்று சுவ[illegible] அந்தச் சுவருட[illegible]னித்தேன். நீ ஆத்திரத்தில் அப்படிச் செய்தா[illegible], [illegible]னி மேல் அப்படிச் செய்யாதே. இருவரும் கையில் பிடியுங்கள்' என்ருர். சுரேஷ் ஓடிச்சென்று மணியின் கையைப் பிடித்தான். சுரேஷின் கண்கள் பனித்தன. 'என்னை மன்னித்து விடடா மணி' என்று விசும்பலுக்கு இடையே கூறினன் சுரேஷ். அவனது கண்களில் இருந்து கண்ணீர் கன்னத்தில் வழிந்தோடியது. மணி அந்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டான். வகுப்பில் நிலவிய நிசப்தம் கலைய சில விநாடிகள் சென்றன.

## தீண்டாமை பற்றி அறிஞர்கள் கருத்து

சாதி பேதத்தை ஒழிப்பதற்கு வழி என்னவென்ருல் மேலே இருப்பவர்களைக் கீழே தள்ளுவதல்ல: கீழே உள்ளவர்களை மேலே தள்ளுவதாகும். இதுதான் சிறந்த வழி.

—சுவாமி விவேகானந்தர்

சாத்திரம் பல பேசும்சழக்கர்காள்! கோத்திரமும் குலமுங் கொண்டென் செய்வீர்?

—அப்பர்

கடலைப்பார்; அலையைப் பாராதே! எறும்புக்கும் தேவதூதனுக்கும் எவ்வித வேற்றுமையும் பாராதே!!

—சுவாமி விவேகானந்தர்

எவருக்கும் பிறப்பினலேயே மேன்மை உண்டாகாது: கருமங்களினலேயே ஏற்றத் தாழ்வுகள் உண்டாகும்.

—காந்தியடிகள்

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டாலும் — இங்கு மானிடர் வேற்றுமை இல்லை.

—பாரதியார்.

சாதி என்பது சமூகத்துறையில் கிடையாது: ஆனல் அந்தச் சாதி என்பது சமூக ஏற்பாடேயாகும்.

—சுவாமி விவேகானந்தர்

குட்டிக்கதை

## தந்திரம்

ப[illegible]ர்மா[illegible]

[illegible]நதசத்தில் ஓர் வணிகன் இருந்து வந்தான். ஓர் நாள் தெரு வழியாகப் போகும் போது அவ்வூர் மந்திரி வீட்டில் வேலை செய்யும் தாதி யொருவளின் அழகைக் கண்டு மயங்கி மந்திரியின் வீட்டின் முன் உட்கார்ந்து 'அவளை எப்படி அடையலாம்? என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அன்றிரவு மந்திரியின் வீட்டுக்குள் புகுந்து அந்த அழகிய தாதியை அணுகி அவளுடைய கழுத்தில இருந்த அழகிய மாலையை கழற்றினன். தாதி திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். ஆனல் 'அந்தத் திருடன் தன்னைக் கொன்றுவிடுவானே' என்ற பயத்தால் சத்தம்போடாதிருந்தாள். அவ்வணிகன மாலையைக் கழற்றியதுமல்லாமல் தன்னுடைய கத்தியினல் அவளுடைய தொடையில் காயப்படுத்திவிட்டு ஓடிவிட்டான்.

அடுத்த நாள் அவ்வணிகன் ஒரு சன்னியாசி போல் [illegible]ந்தரித்து அவ்வூர் அரசனிடம் [illegible]சென்று 'அரசே, நான் சன்னியாசி [illegible] இரவிலிலே பிறநாட்டவன், [illegible]க்காரிகள் இந்த ஊரிலே திரிகிருர்கள். அரசே நேற்றிரவு நான்கு சூனியக்காரிகளைச் சந்தித்தேன். ஒருவள் என்னை அடித்தாள். நான் அவளுடைய கழுத்தில் இருந்த மாலையை அபகரித்துக் கொண்டதுமல்லாமல், அவளுடைய தொடையில் காயப்படுத்திவிட்டேன். இந்தாங்க அந்த மாலை' என்ருன்.

அரசன் அந்த மாலையை பார்த்துவிட்டு, மந்திரியை அழைத்தார். மந்திரி வந்ததும் 'உன் வீட்டிலல்லவா இந்த மாலையை தந்தேன். நீ யாருக்கு கொடுத்தாய்' 'என்வீட்டிலிருக்கும் தாதிக்கு' என்ருன் மந்திரி. 'அவளை அழைத்துவா' என்ருர் அரசன்.

தாதி வந்ததும், அவளுடைய தொடையில் காயம் காணப்பட்டது.

'அந்தச் சன்னியாசி சொன்னது உண்மைதான். இவளைக் கொண்டு போய்ஊருக்கு வெளியே உள்ள கிடங்கில் விட்டுவிடுங்கள்' என்ருர் அரசன்.

அரசனின் கட்டளைப்படி செய்தார்கள் காவலாளிகள்.

அன்றிரவு அவ் வணிகன் ஒரு பையில் பத்தாயிரம் ரூபாயுடன் ஊருக்கு வெளியே உள்ள கிடங்கை பாதுகாக்கும் காவலாளியிடம் பணம் முழுவதையும் கொடுத்து 'அந்தப்பெண் நிரபராதி'யென்று நடந்த யாவற்றையும் சொன்னன்.

அந்தக் காவலாளி அவனின் தந்திரத்தை பாராட்டி, அந்தப் பெண்ணை அவனுடன் அனுப்பி வைத்தான்.

அவன் செய்த தந்திரத்தால் தான் விரும்பியவளை அடைந்தானல்லவா!

—இ. கிறிஸ்ரி
யாழ்ப்பாணம்

சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள். மறக்க முடியாவிட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள்.

—மு. வரதராஜன்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;

—வள்ளுவன்

தொகுப்பு:—
ச. ஆனந்தன்,
மாதகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2-வது ஜனத்திரள் வாரம்!

செல்லமஹால் (கொழும்பு) நெல்சன் (திருமலை) றீகல் (கம்பளை)

சித்தி, ஆயிரம் ரூபாய், சாரதா, கற்பகம் போன்ற வெற்றிப் படங்களின் அடிச்சுவட்டில்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன் டைரக்‌ஷனில் உருவான

# சின்னஞ் சிறு உலகம்

(27 ம் திகதி வரை)

நடிகர்கள்: ஜெமினி கணேசன், கே. ஆர். விஜயா
நாகேஷ், ராதிகா

## இப்பொழுது காட்சி தருகிறது

கெயிட்டி (கொழும்பு)
றீகல் (கண்டி) றீகல் (தம்பளை)
காசினோ (மாத்தளை)
ஹஸென் (கல்முனை)



ஆனந்தன்,
கே. ஆர். விஜயா,
ரவிச்சந்திரன்
நடிக்கும்

# கல்யாண மண்டபம்

## 24 முதல்

டவர் (மருதானை) றீகல் (நாரஹேன்பிட்டி) றீகல் (அம்பாறை) பிறின்செஸ் (அட்டன்) இம்பீரியல் (இரத்தினபுரி) அசோகா (புத்தளம்)

ஆனந்தன், ராஜஸ்ரீ, அசோகன், ஷீலா, நாகேஷ் மனோரமா நடிக்கும்

# லாரி டிரைவர்

## இப்பொழுது வெற்றிகரமாக காட்சி தருகிறது

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டுநகர்)
ஆகிய திரைகளில்

★ கல்யாணகுமார் ★ அசோகன் ★ ஓ. ஏ. கே. தேவர் ★ எம். ஆர். ராதா ★ பாலையா
சௌகார்ஜானகி தேவிகா ராமராவ் கள்ளப்பார்ட் நடராஜன் மற்றும் பலர் நடித்த

பரமு பிலிம்ஸ்

# சீமான் பெற்ற செல்வங்கள்

## அதி விரைவில் சிலோன் எண்டடெயின்மென்ட்ஸ் திரைகளில்

ஜெய்சங்கர்
விஜயகுமாரி
அசோகன்
விஜயலட்சுமி
மற்றும்
பலர் நடித்த

அண்ணு புரொடக்‌ஷன்ஸ்

# பவானி

கதை — வசனம் — டைரக்‌ஷன்
இயக்குநர் திலகம்
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

## வெற்றி கொட்டும் 4வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (மட்டுநகர்) விஜயா (யாழ்ப்பாணம்)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பண்டாரவளை)

ராஜ் (நீர்கொழும்பு) கல்யாணி (நாவலப்பிட்டி)



★ ஜெய்சங்கர், ★ ஜமுனா ★ நாகேஷ்
★ பேபி பத்மினி (இரு வேடங்கள்) ★ ஜி. வரலட்சுமி நடித்த

ஏ. வி. எம்.

# குழந்தையும் தெய்வமும்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயக்கா வீதி, 194, [illegible]
1967-ம் வருடம் ஒக்டோபர் மாதம் [illegible] புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org